வள்ளுவம்

பன்முகப் பார்வை



பதிப்பாசிரியர்கள்

முனைவர் பழ. முத்தப்பன்

முனைவர் ஜே. ரோசுலெட்

பொருளடக்கம்

- பதிப்புரை 5
- வாழ்த்துரை 9
- ஆராய்ச்சி முன்னுரை 11

1 வள்ளுவத்தில் பெண்மை 18
- பழ. முத்தப்பன்

2 திருக்குறளில் அறக்கோட்பாடு 32
- ந. இராமாயி

3 வள்ளுவர் நேரிசை 40
- பழ. சிதம்பரம்

4 வள்ளுவர் வலியுறுத்தும் அறிவு 48
- தா. மணி

5 வள்ளுவரும் கம்பரும் 60
- ஜே. ரோசுலெட்

6 திருவள்ளுவர் என்ற மனிதர் 72
- ந. முருகேசபாண்டியன்

7 வள்ளுவரின் காமத்துப்பால் 82
- க. கனகராசு

8 வள்ளுவரும் இயம யோகமும் 92
- நா. விஜயரெகுநாதன்

9 வள்ளுவமும் கதைப்பாடல்களும் 102
- தி. பூங்குன்றன்

10 முக்கடலின் மாமுனியும் மனிதாபிமானியும் 112
- வே. பொன்னழகு

11 காமத்துப்பாலில் கண் 118
- இராம. மோகன்

12 திருவள்ளுவரின் கல்விக் கொள்கைகள் 134
- ம. செல்வராசு

- முத்துவிழாக் காணும் சன்மார்க்க சபை 142
- ஜே. ரோசுலெட்

சுருக்க விளக்கக் குறிப்பு

தொல்...	-	தொல்காப்பியம்
தொல்...களவு...	-	தொல்காப்பியம் களவியல்
தொல்...பொருள்...களவு	-	தொல்காப்பியம் பொருளதிகாரம் களவியல்
தொல்...கற்பு...	-	தொல்காப்பியம் கற்பியல்
நூ.../நூற்...	-	நூற்பா
குறுந்...	-	குறுந்தொகை
அகம்...	-	அகநானூறு
குறள்...	-	திருக்குறள்
கம்ப...	-	கம்பராமாயணம்
ஏணி...	-	ஏணியேற்றம்
புல...	-	புலந்திரன் களவு மாலை
பஞ்ச...	-	பஞ்சபாண்டவர் வனவாசம்
வைகுந்த...	-	வைகுந்த அம்மானை
ப...	-	பக்கம்
பக்....	-	பக்கங்கள்

91/4

பதிப்புரை

முனைவர் பழ. முத்தப்பன்

"தரிசு நிலம்விளை நிலமாய்ப் பயனளிக்கச்

சபையொன்றுக் காண்பதெனத் தீர்வு செய்தார்."

என்று கவிஞர் முடியரசனார் தம் ஊன்றுகோல் காப்பியத்தில் சபை காண் காதையில் (பா-13) சன்மார்க்க சபையின் தோற்றத்தின் காரணம் பற்றிக் குறிப்பிடுவார். அவரின் எண்ணத்திற்கு ஏற்ப மேலைச்சிவபுரி சன்மார்க்க சபை தமிழின் விளை நிலமாக விளங்கிவருவதைத் தமிழ்ச் சான்றோர் அறிவர். விளைநிலத்தின் தமிழ் முற்றிய கனிகளாகத் தமிழ் உலகம் முழுமையும் படைப்பாளர்கள் விளங்கிவருகின்றனர். தமிழ் மொழியின் பல்வேறு துறை அறிஞர்களாகச் சன்மார்க்க சபை தோற்றிய கணேசர் செந்தமிழ்க் கல்லூரி மாணவர்கள் நாளும் தமிழைக் காத்து வருகின்றனர். அத்தகைய

மாணவர்களில் நானும் ஒருவன் என எண்ணும்போது பெருமிதம் தோன்றுகிறது.

3-8-1987இல் புதுவைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் பணிக்கான நேர்முகத் தேர்வில் கலந்துகொண்ட என்னை அடையாளம் கண்டு கொண்டவர் செம்மல் வ.சுப. மாணிக்கனார். அவர்கள் 27-10-87 இல் என்னைக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரி முதல்வராகப் பணியமர்த்தினார். அப்பொழுது அவர்கள் கல்லூரி, தமிழ் ஆய்வுக் களமாகப் பல்துறையில் வளர வேண்டுமென்ற தம்மின் தணியாத ஆசையைக் குறிப்பிட்டார்கள். கல்லூரியில் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் பல்வகைக் கருத்தரங்குகள், பயிற்சிப் பட்டறைகள், இன்று வெளியாகும் வள்ளுவத்தில் பன்முகப் பார்வை என்ற ஆய்வுக் கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஆகியன செம்மல் அவர்களின் எண்ணத்தின் வெளிப்பாடுகளே.

கல்லூரித் தமிழ்த்துறையின் சார்பில் வெளிவரும் இந்நூல் பன்னிரண்டு கட்டுரைகளைக் கொண்டுள்ளது. அவை திருக்குறள் பற்றிய கட்டுரைகளே. நூலிற்குத் தலைப்பிடத் தமிழ்த் துறையினர் கூடியபொழுது, திருக்குறளை "வள்ளுவம்" எனப் பெயரிட்டு அழைத்த பெருமை கொண்ட செம்மல் மூதறிஞர் வ.சுப. மாணிக்கம் அவர்களின் வழியில்

வள்ளுவம் என்ற பெயரிலேயே நூலை வெளியிட ஒருமித்த எண்ணம் வெளிப்பட்டது. எனவே நூல் திருக்குறள் என்ற தலைப்பில்லாமல் வள்ளுவம் என்ற தலைப்பில் வெளிவருகிறது.

சன்மார்க்க சபை பல நூல்களை வெளியிட்டு இருந்தாலும் கல்லூரியின் சார்பில் வெளிவரும் இந்நூல் முதல் நூலாகும். எனவே இதை வெளியிட அனுமதியும் ஊக்கமும் தந்த சன்மார்க்க சபைக்கு இந்நூலைக் காணிக்கையாக்குவதில் பெருமை கொள்கிறேன். ஆசிரியர்கள் நூல் வெளியிட வேண்டும் என்ற இடையறா அவாவுடன் ஊக்கிவரும் கல்லூரிச் செயலர் முனைவர் வி. பழனியப்பன் அவர்கள், அனைத்துக் கட்டுரைகளையும் திறம்பட ஆய்ந்து ஆராய்ச்சி முன்னுரை வழங்கியுள்ளார்கள். சன்மார்க்க சபைச் செயலர் ப. சா. சிங்காரம் அவர்கள் வாழ்த்துரை வழங்கி ஆக்கந்-தந்துள்ளார். இவ்விரு பெருமக்களுக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கட்டுரைகளைத் தந்த தமிழ்த்துறைப் பேராசிரியர்-களுக்கும், மாலை நேரப் பிரிவுத் தமிழ், ஆங்கிலத் துறைப் பேராசிரியர்களுக்கும், நூலகருக்கும், உடற்கல்வி இயக்குநருக்கும் நன்றியினைக் கூறுவதில் மகிழ்ச்சி

கொள்கிறேன்.

இந்நூல் வெளியீட்டில் என்னுடன் பதிப்பாளராக இணைந்து பல்வேறு ஆக்கப் பணிகளை அல்லும் பகலும் அயராது ஆற்றியவர் பேரா. முனைவர் ஜே. ரோசுலெட் அவர்கள். அவர்களின் பணி என்றும் நினைவு கூறத்தக்கது.

நூல் மெய்ப்புத் திருத்துவதிலும் வடிவாக்கத்திலும் முனைந்து பாடுபட்டவர் பேரா. முனைவர் தி. பூங்குன்றன், நூலகர் முனைவர் ந. முருகேச பாண்டியன், மேலட்டை வடிவமைத்துத் தந்த நண்பர் அரிமா க. இலக்குமிபதி ஆகியோரின் பணி பெரிது.

இந்நூலின் விற்பனை உரிமையை ஏற்றுக் கொண்ட பொன்னமராவதி மீனாட்சி நூலகத்தார்க்கு நன்றி. நூலைக் கணிப்பொறியில் எழிலுடன் வடிவமைத்துத் தந்தவர் பனையப்பட்டி ஸ்ரீமீனாக்ஷி கணிப்பொறி அச்சக நிறுவன உரிமையாளர் ட்டி.ஆர்.எஸ். இரமணி அவர்கள் அழகிய முறையில் அச்சிட்டுக் கட்டமைத்துத் தந்தவர் சிவகாசி சூரியா பிரிண்ட் சொலூசன்ஸ் (பி) லிட். உரிமையாளர் திரு. சொ. முருகேசன் அவர்களுக்கும் நன்றி.

வாழ்த்துரை

ப.சா. சிங்காரம்
செயலர்,
சன்மார்க்க சபை,
மேலைச்சிவபுரி - 622 403.

எங்கள் முன்னோர்கள் வ.பழ.சா. பழனியப்ப செட்டியார், அவர்தம் இளவல் அண்ணாமலை செட்டியார் ஆகியோர்களால் தோற்றுவிக்கப்பெற்ற சன்மார்க்க சபை பண்டிதமணி கதிரேசன் செட்டியார் அவர்களின் துணை கொண்டு வளர்ந்து இன்றைக்கு 90 ஆண்டுகால வரலாற்றைப் பெற்றுத் திகழ்கிறது. ''சைவமும் தமிழும் தழைத்தினி தோங்குக'' என்ற தலையாய கொள்கையைக் கொண்ட சபை, கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, கணேசர் செந்தமிழ்த் தொடக்கப்பள்ளி, கணேசர் செந்தமிழ் மழலையர் பள்ளி என்ற கல்வி நிறுவனங்களால் நாளும் தமிழ்த் தொண்டாற்றி வ்ருகிறது. அது பண்டிதமணி அவர்களின் நூல்களை ஆரம்ப காலத்தில் வெளியிட்டது. பண்டிதமணியின் நூற்றாண்டு விழா நேரத்தில் பல தமிழறிஞர்களைக் கொண்டு பண்டிதமணியின் நூல்களை ஆய்வு செய்து பல திறனாய்வு நூல்களை வெளியிட்டது; அவ்வப்-பொழுது ஆண்டு மலர்களையும் வெளியிட்டு வருகிறது. இத்தகைய வரிசையில் முதன்முதலாகக் கல்லூரியின் தமிழ்த்துறைப் பேராசிரியர்களின் சார்பில் **வள்ளுவம் பன்முகப் பார்வை** என்ற நூல்

வெளியிடப் பெறுவது சபைக்குப் பெருமையைத் தருகிறது.

திருக்குறளைப் பற்றிய பன்னிரண்டு ஆய்வுக் கட்டுரைகளைக் கொண்ட இந்நூல் எங்கள் ஆசிரியர்களின் திறனாய்வுத் திறனை வெளிப் படுத்துவதோடு திருக்குறளைப் பற்றிய புதிய நோக்குகளைச் சிந்திக்க வைக்கிறது. காலத்தால் அழியாத தமிழ் மொழிக்களஞ்சியமாம் திருக்-குறளைப் பற்றிக் கணக்கற்ற ஆய்வு நூல்கள் வெளிவந்துள்ளன. எங்கள் கல்லூரித் தமிழ்த் துறையின் சார்பில் ஒரு ஆய்வுத் தொகுப்பு நூல் வெளிவருவது சபைக்கு மிக்க பெருமையைத் தருகிறது. இம் முயற்சியில் ஈடுபட்ட கல்லூரி முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்களையும் கட்டுரைகளைப் படைத்துள்ள பேராசிரியப் பெருமக்களையும் சபையின் சார்பில் பாராட்டி மகிழ்கின்றேன். பேராசிரியப் பெருமக்கள் இத்துடன் நில்லாது அறிவியல் சிந்தனையை வளர்த்திட மேலும் மேலும் தமிழ் இலக்கியங்கள் காட்டும் அறிவியல் கருத்துக்களையும், சமூகவியல் கருத்துக்களையும் ஆய்வு செய்து இன்னும் பல நூல்களை வெளியிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தமிழ் கூறும் நல்லுலகம் இந்நூலைப் பயின்று ஆதரவு தரவேண்டுகிறேன்.

ஆராய்ச்சி முன்னுரை

முனைவர் வி. பழனியப்பன்.
கல்லூரிச் செயலர்,
கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,
மேலைச்சிவபுரி.

மேலைச்சிவபுரியில் சன்மார்க்க சபை சைவமும் தமிழும் தழைத்தோங்கப் பாடுபடும் பெருமைக்குரியது. அந்நோக்கம் சிறப்புறப் பெருமைமிகு நூல்களை வெளியிட்டுள்ள புகழுக்குரியது. அவ்வகையில் அதன் அங்கமாகிய கணேசர் செந்தமிழ்க்கல்லூரி வள்ளுவம் பன்முகப் பார்வை என்னும் நூலை வெளியிடுகிறது. இவ் வெளியீட்டிற்குக் காரணமாய் அமைந்த கல்லூரிக் குழுவினரும், முயற்சிக்கு ஊற்றுக் களனாய்த் திகழும் முதல்வர் முனைவர் பழ. முத்தப்பன் அவர்களும், அவர்க்கு உறுதுணையாய் இருந்து கட்டுரைகளை வழங்கி நூல் உருவாக்கம் பெறக் காரணமாய் அமைந்த பேராசிரியப் பெருமக்களும் பாராட்டிற்குரியவர்கள்.

அய்யன் திருவள்ளுவரின் நூலாம் திருக்குறளை மையப் பொருளாகக் கொண்டு வரையப் பெற்றுள்ள கட்டுரைகள் பன்முகப் பார்வைக் குரியனவாக அமைந்துள்ளன. அதனால் இந்நூல் **வள்ளுவம் பன்முகப் பார்வை** என்ற பெயரினைப் பெற்றமைந்துள்ளது. இந்நூலின்கண் அமைந்துள்ள கட்டுரைகள் எந்த ஒரு தனி அதிகாரத்தையும் ஆய்வுப் பொருளாகக் கொள்ளாமல் நூல் முழுமையுமே ஆய்வுக் களனாகக் கொண்டு எழுதப் பெற்றுள்ளன. அவற்றுள் ஒன்று மட்டும் வேறுபட்டு அமைந்துள்ளது. பிற கட்டுரைகள் எல்லாம் திருக்குறளை மையமாகக் கொள்ள வள்ளுவர் நேரிசை என்னும் கட்டுரை மட்டும் வள்ளுவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு படைக்கப் பெற்ற நூல்குறித்த ஆய்வாக அமைந்துள்ளது. திருக்குறள் குறித்த ஆய்வாகவும் அதனுள் அமைந்துள்ள கருத்துக்களின் ஒப்பாய்-வாகவும் திருக்குறளுடன் பிற நூல்களைப் பிற அறிஞர் கருத்துக்களை ஒப்பிட்டாயும் ஆய்வாகவும் இக்கட்டுரைகள் அமைந்துள்ளன.

வள்ளுவத்தில் பெண்மை என்னும் கட்டுரை பெண்மை குறித்த வள்ளுவர் கருத்துக்களை நூல் முழுமையும் கண்டு எழுதப் பெற்றதாக அமைந்துள்ளது. வரைவின் மகளிர், பெண் வழிச் சேறல் என்பதற்குரிய விளக்கங்கள் புதிய சிந்-தனைக்கு வித்திடுவனவாக அமைந்துள்ளன.

திருக்குறளில் அறக்கோட்பாடு என்னும் கட்டுரை திருக்குறளில் அறம் என்னும் சொல் இடம் பெறும் இடங்களைத் தொகுத்து ஆய்வுக் கூர்மையுடன் விளக்கப் பெற்று இறுதியாகத் திருக்குறள் முழுமைக்கும் அறப் பொருளே பாடுபொருளாக அமைந்துள்ளது எனக் கருத்துரைக்கப் பெற்றுள்ளது.

வள்ளுவர் நேரிசை என்னும் கட்டுரை அரசஞ்சண்முகனாரின் நூலாகிய வள்ளுவர் நேரிசை குறித்தது. நூற்பெயர்க்காரணம், நூலமைப்பு, கருத்துக்கள் விளக்கப்பட்டுள்ள முறை ஆகியவை விளக்கப் பெற்றுள்ளன. திருக்குறட் கருத்துக்களை விளக்க அரசஞ்சண்முகனார் புராணக் கதைகள், செவி வழிக் கதைகளைக் கையாண்டுள்ள திறம் வெளிக் காட்டப் பெற்றுள்ளது.

வள்ளுவர் வலியுறுத்தும் அறிவு என்னும் கட்டுரையில் குறள் அறிவு எனக் குறிப்பிடும் இடங்களும் அவற்றின் பொருட்டன்மைகளும் சுட்டப்பெற்றுள்ளன. நன்றின் பால் உய்க்கும் வள்ளுவக் கோட்பாடு விளக்கப் பெற்று அதன் வளர்ச்சியாக மக்கட் பண்புடைய அறிவே பயன் தரும் அறிவு எனக் கூறப் பெறுகிறது. இவ்வறிவினால் மெய்ப் பொருளைக் காண்பதே இறையறிவு என இறுதியில் சமயக் கண்ணோட்டம் கூடிய அறிவாகக் காட்டப் பெற்றுள்ளது.

வள்ளுவரும் கம்பரும் என்னும் கட்டுரை ஒரு மொழி இலக்கியங்களிடைக் காணலாகும் ஒப்பாய்வாக அமைந்துள்ளது. நிலத்தியல் பால் நீர் திரிதல், நோயும் மருந்தும், சொல்லிய வண்ணம் செயல்படல், இடமறிந்து செயல்படல், விருந்தோம்பல் என்னுங் குறளறங்கள் கம்பர் காவியத்தில் இடம் பெற்றுள்ளமை விளக்கமுறக் காட்டப் பெற்றுள்ளன.

திருவள்ளுவர் என்ற மனிதர் என்னுங் கட்டுரை தெய்வப்புலவராய் வழிவழியாகப் பேசப் பெறும் வள்ளுவரை மனிதராகப் பாருங்கள் என வலியுறுத்துகிறது. தெய்வப்புலவர் என்றே முந்து நூல்கள் குறிப்பிட்டிருந்தும் கட்டுரையாளர் அவரைத் தெய்வமாக்காதீர் என வேண்டுகிறார். மரபு மீறலாகவும் இன்றைய அரசியல் சமுதாய நிலைக்கு முரண்பட்டதாகவும் கட்டுரையாளர் கூறும் இக்கருத்து ஆய்ந்து சிந்தித்தற்குரியது. பல்வேறு அறநூல்கள் தோன்றி அழிந்துபடத் திருக்குறள் மட்டும் தொடர்ந்து நிலை பெற்றமைக்குக் கட்டுரையாளர் கூறும் காரணம் சிறப்புடையது. திருக்குறள் பிரதி காலந்தோறும் மாறிவரும் சமூக மதிப்பீடுகளுக்கேற்பப் பொருந்துவதாக இருப்பதன் மூலம் தனது இடத்தைத் தக்கவைத்துக் கொண்டுள்ளது எனக் குறிப்பிடுகிறார் கட்டுரையாளர்.

வள்ளுவரின் காமத்துப்பால் என்னும் தலைப்பமைந்துள்ள கட்டுரை காமத்துப்பால்

அமைக்கப்பெற்ற நோக்கத்தை ஆராய்கிறது. சங்க காலத்து இலக்கிய மரபும் சங்கம் மருவிய காலத்து இலக்கிய மரபும் விளக்கப்பெற்று அதனடிப் படையில் திருக்குறள் இன்பம் பாடுதலினும் அறம் பாடுதலே நோக்கமுடையதாகலின் சங்க காலத்துக்குப் பிற்பட்டதென இலக்கிய மரபு அடிப்படையில் வரிசைப் படுத்தப்பெற்றுள்ளது ஆய்வுச் சிந்தனை வெளிப்பாடாகும். இல்லறத்தின் சிறப்பினைப் பேணுதலே, காமத்துப்பால் கருத்தாக அமைந்துள்ளது.

திருவள்ளுவரும் இயம யோகமும் என்ற கட்டுரையின் முற்பகுதியில் யோகம் என்பதும் அதன் பொதுக் கூறுகளும் விளக்கப் பெற்றுள்ளன. தீய வழிகளில் மனம் போகாது இருத்தலே இயமம் எனக் குறிக்கிறது. திருமூலரின் இயமம் குறித்துக் கூறும் கருத்துக்கள் விளக்கப் பெற்று அதன் வழி தீயன நிகழும் முறைகளாகத் திருக்குறளில் கூறப் பெற்றவை தொகுத்துக் காட்டி அவற்று வழி மனம் செல்லாதிருத்தலைக் குறள் மூலம் விளக்குகிறார். யோக நெறிக் கொள்கைகளைத் திருக்குறட் கருத்துரைகளுடன் ஒப்பாய்வாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

வள்ளுவமும் கதைப்பாடல்களும் என்ற கட்டுரை நாட்டுப் புறக் கதைப்பாடல்களில் வள்ளுவக் கருத்துக்கள் மேற்கொள்ளப் பெற்றுள்ள திறத்தை விளக்குகிறது. ஏணியேற்றம், புலந்திரன்

களவு மாலை, பஞ்சபாண்டவர் வனவாசம், வைகுந்த அம்மானை என்னும் நாட்டுப்புற இலக்கியங்களாகிய கதைப்பாடல்களில் முறையே பிறனில் விழையாமை, நாவினாற் சுட்டவடு, புலால் மறுத்தல், பிறவிப் பெருங்கடலை நீந்துதல் என்னும் வள்ளுவக் கருத்துக்களே கூறப் பெற்றுள்ளன என விளக்கப் பெற்றுள்ளது.

முக்கடலின் மாமுனியும் மனிதாபிமனியும் என்ற கட்டுரை வள்ளுவரையும் விவேகானந் தரையும் ஒப்பிட்டுக் காட்டுகிறது. முயற்சி திருவினையாக்கும், ஈதல் இசைபட வாழ்தல், திண்ணியராகுந்திறன், நல்லொழுக்கம், கற்கும் திறன் என்னும் வள்ளுவக் கருத்துக்களோடு ஒப்பாகும் விவேகானந்தரின் சிந்தனைகளைக் கோடிட்டுக் காட்டுகிறது.

காமத்துப் பாலில் கண் என்ற தலைப்பில் கட்டுரையாளர் அறமும் பொருளும் இல்லறத்தின் வழியேதான் நிகழ முடியும் என்பதனை விளக்குகிறார். இல்லற இன்பமாம் காமத்துப் பாலில் வள்ளுவர் கண் என்ற சொல்லைக் கையாண்டுள்ள இடங்கள் தொகுக்கப் பெற்று விளக்கப் பெற்றுள்ளன. கருத்துக்களைத் தொகுத்து விளக்குதலாகிய ஆய்வு நெறி இங்குப் புலப்படுகின்றது.

திருவள்ளுவரின் கல்விக்கொள்கைகள் என்னும் கட்டுரை கல்வி குறித்த வள்ளுவரின்

கருத்துகளைத் தொகுத்து விளக்கிச் செல்வதாக அமைந்துள்ளது. கட்டுரையாளர் வள்ளுவம் காட்டும் கல்விக் கொள்கைகளை ஏழு வகையினதாக வகைப் படுத்திக் காட்டியுள்ளார்.

அய்யன் திருவள்ளுவர் குறித்த கட்டுரைகள் எங்கள் கல்லூரிப் பேராசிரியப் பெருமக்களின் சிந்தனை வெளிப்பாடுகளாகும். இதுபோலப் பல்வேறு நூல்களைத் தொகுப்பாகவும் தனி-யாகவும் எதிர்காலத்தில் வெளியிட இந்நூல் துணையாக அவர்களுக்கு அமையும் என்பதில் ஐயமில்லை.

திருவள்ளுவ மாலை

எல்லாப் பொருளுமி தன்பா லுளஇதன்பால்
இல்லாத எப்பொருளும் இல்லையால் - சொல்லாற்
பரந்த பா வாலென் பயன்வள் ளுவனார்
சுரந்தபா வையந் துணை.

- மதுரைத் தமிழ்நாகனார்.

ஓதற் கெளிதாய் உணர்வதற் கரிதாகி
வேதப் பொருளாய் மிகவிளங்கித் - தீ தற்றோர்
உள்ளுதொ றுள்ளுதொ றுள்ளமு ருக்குமே
வுள்ளுவர் வாய்மொழி மாண்பு.

- மாங்குடி மருதனார்.

சிந்தைக் கினிய செவிக்கினிய வாயக்கினிய
வந்த இருவினைக்கு மாமருந்து - முந்திய
நன்னெறி நாமறிய நாப்புலமை வள்ளுவனார்
பன்னிய இன்குறள்வெண் பா

- கவுணியனார்.

1. வள்ளுவத்தில் பெண்மை



முனைவர் **பழ. முத்தப்பன்**
எம்.ஏ., பிஎச்.டி.,
முதல்வர்.

திருக்குறள்– அவ்வறிஞன் நெஞ்சோடு நம்நெஞ்சினைப் பிணைக்கும் எண்ணக்கயிறு என்பார் செம்மல் வ.சுப.மாணிக்கம் அவர்கள். திருக்குறளுக்கு எண்ணிலடங்கா உரைகள் தோன்றியுள்ளன. துயில் நீங்கி எழும் தமிழர்க்கோர் கைவிளக்கு–இளைய தலைமுறையினர் தமக்கோர் வாழ்வினில் இருளகற்றி வழிகாட்டும் திருவிளக்கு என்று பேராசிரியர். க. அன்பழகன் அவர்கள் குறிப்பிடுவதுபோல் திருக்குறள் காலம்காலமாக வாழ்க்கைக்குரிய அறிவுரைப் பேச்சில், எழுத்தில் மேற்கோளாகக் காட்டப்பெற்று வருகின்றது. 133 அதிகாரங்களும் இன்றைக்குத் தேவையானதாக அமைந்துள்ளன. எந்தக் குறளையும் இன்றைய சமுதாயத்திற்குத் தேவையில்லை என ஒதுக்கிவிடமுடியாது.

இன்றைய நூற்றாண்டில் பெண்மை விமர்சனத்திற்குரிய பொருளாக இடம்பெற்று வருகிறது. பெண்மை போற்றப்பட வேண்டும். பெண்மைக்கு இழிவு செய்யப்பெறுமானால் தனி விதியால், இழிவு செய்தோர் தண்டிக்கப்படவேண்டும் என்றெல்லாம்

பேசப்படும் காலம் இது. எனவே வாழ்வியலுக்கு எதனையும் விட்டுவிடாது முழுமையான நெறியை வகுத்துத் தந்த வள்ளுவத்தின் பெண்ணியல் சிந்தனைகள் எவ்வாறு அமைந்துள்ளன என்பதைக் கோடிட்டுக் காட்டுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

வாழ்க்கைத்துணை நலம், பிறனில் விழையாமை, பெண் வழிச்சேறல், வரைவின் மகளிர் என்ற நான்கு அதிகாரங்களில் நேரடியாகப் பெண்மை பேசப்பெறுகிறது. பெண் என்ற சொல் 13 இடங்களில் இடம்பெற்றுள்ளது. பெண்மை என்ற சொல் மூன்று இடங்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. மனையாள் என்ற பொருளில் மனை என்ற சொல் நான்கு இடங்களிலும் மனையாள் என்ற சொல் மனைவி என்ற பொருளில் ஒரு இடத்திலும் பயன்படுத்தப் பெற்றுள்ளது. இல்லாள் என்ற சொல் நான்கு இடங்களில் பயன்படுத்தப் பெற்றுள்ளது. இவ்வாறு பெண்மை பல்வேறு நிலைகளில் பண்பாட்டு அடிப்படையில் வாழ்வியல் அடிப்படையில் திருக்குறளில் பேசப்படுகிறது.

இத்தகைய இடங்கள் எல்லாவற்றையும் நோக்கித் திருக்குறளின் உட்கிடக்கையை ஆய்ந்து பார்த்தால் இல்லற வாழ்வில் இடம்பெற்ற பெண்மையின் நிலை மட்டுமே பேசப்பெற்றிருப்பதைக் காணலாம். பெண்பிள்ளை அல்லது பெண்மகள் அடிப்படையில் திருக்குறள் எந்த இடத்திலும் பேசவில்லை. மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி, தன் மகனைச் சான்றோன் என்று ஆண்பிள்ளை (அ) ஆண்மகன் பேசப்பெறுவதைப் போலப் பெண்மகள் தனித்துப் பேசப் பெறவில்லை. இதை எண்ணும்பொழுது பெண்மை என்பது திருமணமாகி இல்லறத் துணையாகப் பதவி ஏற்கும் பொழுது தான் ஒழுக்க நெறிக்கு ஆளாகிறது எனத் திருவள்ளுவர் காலத்தில் நம்பப் பெற்றிருக்கிறது எனத் தெரிகிறது. காமத்துப்பால் இங்குச்சிந்தனைக்கு வரலாம். காமத்துப்பாலில் இடம்பெறும் தலைவி, தோழி, செவிலி உள்ளிட்ட அகத்திணை மாந்தர்கள் பொது நிலையில், இன்பியல் நிலையில் இடம்பெறுபவராவர். காலம் காலமாகத் தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் நிகழ்வுகளைத் தான்

காமத்துப்பால் செய்திகள் காட்டுகின்றன. இருப்பினும் திருவள்ளுவர் காமத்துப்பாலிலும் பொதுநிலையில் இன்பியல் கருத்துக்களை வரிசைபடுத்திக் கூறினாலும் சில சிறப்பு நிகழ்ச்சிகள் மூலம் பெண்மைக்கு ஏற்றமும் தருகிறார். அக இலக்கண இலக்கிய மரபிற்கு மாறுபட்டும் நிகழ்சிகளைத் தருகிறார். அந்நிகழ்ச்சிகள் பெண்மையைக் குறைவு படுத்தாமல் அல்லது காமச்சுவைப் பொருளாகக் காட்டாமல் பெண்மைக்கு ஏற்றமே தருகின்றன. ஒன்றிரண்டு இடங்கள் இங்குச் சுட்டப்பெறுவது பொருத்தமாக அமையும்.

தலைவி கொள்ளும் ஊடலுக்குரிய காரணங்கள் பலவற்றில் தலைவன் மேற்கொண்ட பரத்தையர் பிரிவும் ஒன்றாகும். தொல்காப்பியம் உள்ளிட்ட இலக்கண நூல்களும் சங்க அக இலக்கியங்களும் பரத்தையர் பிரிவை உரிமையாக்கி, ஊடலுக்குரிய ஏதுவாக்கிக் கூறுகின்றன. ஆனால் திருக்குறள் காமத்துப்பாலோ பரத்தையர் பிரிவை ஊடலுக்கு எந்த இடத்திலும் காரணமாக்காமல் காலம் கடந்து தலைவன் வருவதையே காரணமாக்குகிறது. அதுமட்டும் இல்லாமல் பரத்தை என்ற சொல் கூடத்திருக்குறளில் கையாளப் பெறவில்லை. ஆனால் அக்காலத்தில் பரத்தமை நிலை இல்லை என்று கூறமுடியாது. ஏனென்றால் பொருளுக்குத், தந்நலம் விற்கும் மகளிரை வரைவின் மகளிர் என்று பொருட்பாலில் குறிப்பதை மறுக்க இயலாது. காமத்துப்பாலில் பரத்தை என்ற சொல் இடம்பெறவில்லை என்றாலும் பரத்தன் என்றசொல் இடம்பெற்றுள்ளமையும் நினைவு கூரத்தக்கது. ஆண்மையைப் பரத்தன் என்று குறிப்பிடுகிற திருவள்ளுவர் பெண்மையைப் பரத்தை என்று விளிக்காமை மிக்ச் சிறப்புடையதாகும். மேலும் ஊடல் தேவை என்றும் ஊடல் இனிமையுடையது என்றும் ஊடலில் தோற்றவர் வென்றார் என்றும் திருவள்ளுவர் பெண்மையை மனதில் வைத்துக்கொண்டே தான் சிறப்பிக்கின்றார். காரணம் பெரும்பாலும் ஊடல் கொள்ளும் குணம் பெண்மைக்கே உரியது.

எனவே ஊடல் கொள்ளும் பெண்மையைத் தவறாக எண்ணக்கூடாது என்பதால் தான்,

தவறிலர் ஆயினும்தாம் வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்கொன்று உடைத்து.

குறள்–1325

என்று தலைவன் தலைவியின் ஊடலுக்காக மகிழ்வதைக் காட்டுகிறார். இவ்வாறு காமத்துப்பாலை முழுமையாகப் பெண்மைக்கு ஏற்றம் தரும் இயலாகக் காண முயன்றால் திருவள்ளுவரின் உள்ளக் கிடக்கை நன்கு புலனாகும்.

பெண்மையின் குணங்கள்

முன்குறிப்பிட்ட வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரம் உள்ளிட்ட நான்கு அதிகாரங்களில் பெண்மையின் குணங்களை நீதி நூலிற்கேற்ற கோணங்களில் திருவள்ளுவர் குறிப்பிடுவதை ஆராய்ந்தால் பெண்மையின் மேன்மை உறுதியாகப் புலனாகும்.

அறத்துப்பாலின் வாழ்க்கைத் துணைநலம் என்ற அதிகாரம் மனையாள் என்ற பதவியைப் பெற்ற பெண்மையைப் போற்றிப் புகழும் அதிகாரம் ஆகும். நீதி இலக்கியமாகத் திகழும் திருக்குறள் மனையாளுக்குரிய நீதிகளை, அறத்தை, நெறிமுறையைக் கூறும் என்ற எண்ணத்தில் இவ்வதிகாரத்தைப் பயின்றால் எண்ணம்தோற்றுப்போகும். மனையாள் என்பவள் துறந்தாரைப் பேணவேண்டும், விருந்தயர்தல் வேண்டும் வறியார்மாட்டு அருளுடன் அன்பு காட்ட வேண்டும் அட்டில் பணியில் சுகம் தரவேண்டும் என்றெல்லாம் மனைவியின் குணங்களை அவள் கைக்கொள்ளவேண்டிய ஒழுக்கத்தைக் கூறியிருப்பார் என்று எதிர்பார்த்தால் திருவள்ளுவர் நம்மை ஏமாற்றிப் பெரும்பகுதி மனையாளின் பெருமையையும் அவள் இன்றியமையாதவள் என்பதையும் கூறிச் சென்றுவிடுகின்றார்.

தமிழ்ப் பெண்மைக்குரிய இலக்கணத்தை அதிகம் கூறல் வேண்டா. அவர்கட்கு இயல்பாகவே நற்குணங்கள் அமைந்திருக்கும் என்ற பெருந்தன்மையோடு, இருகுறட்பாக்களைத் தவிர அனைத்திலும், அவர்தம் பெருமையையே புகழ்ந்து செல்கிறார். முதற் குறட்பாவும் ஆறாவது குறட்பாவும்தான், அந்த இரு குறட்பாக்கள். முதற் குறட்பாவில் கணவனின் வருவாய்க்குத் தக்க செலவு செய்ய வேண்டும் என்ற நெறியையும், ஆறாவது குறட்பாவில் பெருமையையுடைய வாய்மையைக் கடைபிடித்தல் வேண்டும் என்ற நெறியையும் பெண்மைக்கு வேண்டும் குணங்களாக ஒழுக்கங்களாகக் காட்டுகிறார் திருவள்ளுவர். கடவுள் வாழ்த்தின் பத்துக் குறட்பாக்களில் கடவுளின் குணங்களை அடக்கிக் காட்டுகின்ற திருவள்ளுவர் வாழ்க்கைத் துணைநலத்தில் இரு குறள்களில் மட்டுமே பெண்மையின் குணத்தைச் சுட்டுகிறார் என்றால் அவ்விரு குணங்கள் மட்டும் போதும் என்று நினைக்கிறாரோ என்று எண்ணத் தோன்றுகிறது. கணவனின் வளத்தக்காளாக வாழ்வதை விட ஒரு பெண்மைக்கு வேறு எத்தகைய மேன்மைக்குணம் வேண்டும். அதுபோலச் சொற்காத்து வாழ்தலை விட வேறு எது அவளைப் பெருமைப்படுத்தும்? எனவே,

மனைத்தக்க மாண்புடைய ளாகித்தற் கொண்டான்
வளத்தக்காள் வாழ்க்கைத் துணை.

குறள்–51

தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்.

குறள்–56

என்பன பெண்மைக்கு வேண்டப்பெறும் நற்குணங்களைக் காட்டும் திருக்குறள்களாகும்.

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப.

தொல். களவு–8

என்று தொல்காப்பியர் பெண்மைக்குரிய மூன்று முக்கிய குணங்களைச் சுட்டிக்காட்டுவார். இச்சூத்திரத்திற்கு எல்லா உரையாசிரியர்களும் தலைமகட்கு உரியதோர் இலக்கணம் கூறுகின்றது என்றுதான் எழுதியுள்ளனர். அவ்வாறாயின் இம்மூன்று குணங்கள் பற்றித் திருவள்ளுவர் சிந்திக்கவில்லையா? என்ற எண்ணம் எழலாம். தனி ஒரு நிலையில் இம்மூன்று குணங்களையும் திருவள்ளுவர் காட்டவில்லை யென்றாலும் நாணமும் மடமையும் பெண்மைக் குணங்கள் தான் என்று வாய்ப்பு நேரும்போது காட்டியே செல்கிறார். அச்சம் பற்றிய குறிப்பு இல்லை.

பெண்ணேவல் செய்தொழுகும் ஆண்மையின் நாணுடைப்
பெண்ணே பெருமை யுடைத்து

குறள்–907

என்னும் குறளில் "நாணுடைப் பெண்" என்ற தொடர் பெண்மையின் குணங்களில் நாணும் ஒன்று என்பதை நினைவு படுத்துவதாகக்கொள்ளலாம். இங்கு "நாணுடைப் பெண்" பெருமையுடையவள் என்று கூறுவது பெண்மையைச் சிறப்பு படுத்துவது அல்ல. ஆண்மையை இழிவுபடுத்தவே பெண்மையின் நாணத்தைக் குறிப்பிடுகிறார் என்றாலும் நாணம் என்ற குணத்தைப் பெண்ணிடத்திலிருந்து பிரிக்கவில்லை என்பதை உணரல் வேண்டும். அது போல,

நாணும் மறந்தேன் அவர்மறக் கல்லாஎன்
மாணா மடநெஞ்சிற் பட்டு.

குறள்–1297

என்ற குறளில் மடமைத் தன்மை குறிப்பாகக் காட்டப்பெறுகிறது. மடன் என்பதற்குச் செவிலியர் கொளுத்தக் கொண்டு, கொண்டது விடாமை என்று நச்சர் உரைஎழுதுவார். (சூத்திரம் 1045.) இக் குறட்பாவில் மடமை என்பதற்குப் பரிமேலழகர் கண்டவழி நினைந்து காணா வழி மறக்கும் தவற்றைக் காணா வழி நினைந்து கண்ட வழி மறத்தல் என உரை எழுதுவார். இவ்விரு உரைகளின் உட்பொருளை

ஆழ்ந்து நோக்கின் பெண்மை தன் நிலையில் நில்லாது இருத்தல் என்ற குணத்தை உடையதாக இருக்கும்போது மடமைக்குரிய பெண்மையாக விளங்கும் என்று தெரிகிறது. எனவே தொல்காப்பியர் உள்ளிட்ட பிறர் வலியுறுத்தும் பெண்மைக் குணங்களைத் திருவள்ளுவர் தனி நிலையில் எடுத்துரைக்கவில்லை என்றாலும் கூற வேண்டிய இடத்தில் எடுத்துரைத்துச் செல்கிறார் என்பது உண்மை.

வரைவின் மகளிர்

பெண்மையின் குணங்களில் பொதுமைக் குணங்களை ஆங்காங்குச் சுட்டிக்காட்டி வாழ்க்கைத் துணை நலத்தில் இன்றைய காலகட்டத்தில் பெண்மைக்கு இருக்கவேண்டிய இரு சிறப்பான குணங்களைச் சுட்டிக்காட்டிச் செல்லும் திருவள்ளுவர் பொருட்பாலில்அமைத்திருக்கும் வரைவின் மகளிர் என்ற அதிகாரம் ஆய்வுக்குரியது. ஒவ்வொரு மனிதனுக்கும் துணையாகக் குடும்பத் தலைவியாக வாழவேண்டிய பெண்மையில் ஒரு சாதியாக ஒரு பிரிவாக வரைவின் மகளிரைக் காட்டியிருப்பது சிந்தனைக்குரியதுதான். கள்ளுண்ணாமை, புலால் உண்ணாமை, கள்ளாமை, சிற்றினம் சேராமை, பயனில சொல்லாமை, பிறனில் விழையாமை என்றெல்லாம் செய்யத் தகாதனவற்றைத் தீய ஒழுக்கங்களை அதிகாரமாக்கிக்கூறும் திருவள்ளுவர் வரைவின் மகளிரைச் சேராமை என்று கூறாமல் வரைவின் மகளிர் என்ற பொதுநிலையில் அதிகாரத்தைப் படைத்துள்ளார்.

பெண்மைக்குப் பரத்தை என்ற பெயரைக் கூடச் சொல்ல விரும்பாத திருவள்ளுவர் இவ்வதிகாரத்தை வைத்ததன் நோக்கம் என்ன? பெண்குலத்தில் ஒரு பிரிவினராக வரைவின் மகளிரைக் காட்டியதன் அடிப்படை என்ன? சிந்திக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகிறோம். வரைவின் மகளிர் என்ற தொடருக்குத் திருக்குறள் உரையாசிரியர்கள் எத்தகைய விரிவான விளக்கம் தந்தாலும் பொருளுக்காகத் தம் நலத்தை விற்பவர் என்ற

அடிப்படையில் மாறவில்லை. அவ்வாறானால் அத்தகைய தீய குணம் பெண்மைக்குத் தேவைதானா? அதனை வள்ளுவர் கண்டிக்க வேண்டாமா? அத்தகைய பெண் இனம் சமுதாயத்தில் நிலவத்தான் வேண்டுமா? வினாக்கள் எழுகின்றன.

இவ்வதிகாரக் குறட்பாக்கள் பத்தினையும் ஆழ்ந்து நோக்கித் தொகுத்துப் பார்த்தால் எந்த விதத்திலும் பெண்மைக்கு இழுக்கு ஏற்படாமையை உணரலாம். பெண்களில் வரைவின் மகளிர் உண்டு என்பதைத் திருவள்ளுவர் ஒத்துக்கொண்டாலும் அவர்களைக் குற்றவாளி என்று கூறாமல் அவ்வரைவின் மகளிர்பால் காம இன்பம் பெறும் ஆண்மையைத்தான் பத்துக் குறட்பாக்களிலும்சாடுகிறார். புலால் மறுத்தல் என்ற அதிகாரம் போல் இவ்வதிகாரத்தைக் காணவேண்டும். உயிர்களைக் கொல்லக் கூடாதென்று கூறாது கொன்று தின்னாதே என்று கூறுவதுதான் புலால் மறுத்தல் அதிகாரம்.

தினல்பொருட்டால் கொல்லா துலகுஎனின் யாரும்
விலைப்பொருட்டால் ஊன்தருவார் இல்.

குறள் – 256

என்ற குறட்பாவை உதாரணமாக எடுத்துக்கொள்வது பொருத்தமாகும். அதாவது தின்பவன் இல்லை என்றால் புலால் விற்பவன் இருக்கமாட்டான் என்பது இக்குறளின் அடிப்படை. இதுபோலத்தான் வரைவின் மகளிர் என்ற அதிகாரக் குறட்பாக்கள் அனைத்தும் பொருட்பெண்டிரை நாடுவது மிகவும் தீமைதரும் என்பதை ஆண்மகனுக்குச் சுட்டிக்காட்டி அச்சுறுத்தி அதன் மூலம் வரைவின் மகளிரை நாடாமல் செய்ய எண்ணுகிறார். அதன் மூலம் வரைவின் மகளிர் என்ற சாதி இல்லாமல் ஆகிவிடவேண்டும் என்றுதிருவள்ளுவர் கருதியிருக்கிறார். எனவேதான் ஒவ்வொரு குறளில் பொருட்பெண்டிர் மீது கொள்ளும் காமவெறியைத் தவறுடையது என்று காட்டுகிறார்.

பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம் இருட்டறையில்
ஏதில் பிணம்தழீஇ யற்று.

குறள் –913

என்ற குறளில் இடம்பெறும் உவமை ஆய்வுக்குரியது. இவ்வொரு உவமை மட்டுமே இவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது. பொருட்பெண்டிரை ஒருவன் கூடிப்பெறுகின்ற இன்பம் இருட்டு அறை ஒன்றில் முன்பின் தெரியாத செத்த உடலாம் பிணத்திடத்தில் இன்பம் பெறுவது போன்றது என்பது குறட்பாவின் கருத்து. அதாவது பிணத்தைக் கூடுவதாகிய உவமை மூலம் வரைவின் மகளிர் இன்பம் பழிக்கப்பெறுகிறது. அருவருப்பைஉண்டாக்குகின்ற பிணத்திடம் யாராவது இன்பத்தை நுகர்வார்களா? நுகரத்தான் முனைவார்களா? அருவருப்பே ஏற்படும். ஆனால் வான்புகழ் வள்ளுவர் அவ்வருவருப்பை உவமையாகக் கூறிவிட்டாரே !. தெரியாததைத் தெரியவைக்கத் தெரிந்ததைக் கூறுவதுதானே உவமை. அவ்வாறானால் பிணம் தழுவும் நிகழ்வு, சமுதாயத்திற்குத் தெரிந்திருக்கவேண்டுமே. அப்படியானால் சமுதாயத்தில் திருவள்ளுவர் காலத்தில் இச்செயல் நடைபெற்றிருக்க வேண்டும். நடைபெற்றிருந்தால், அருவருப்பான செயல்தானே என்றெல்லாம் சிந்திக்கத் தூண்டுகிறது. இச்சிந்தனைக்குப் பதில்போலத் தேவ நேயப் பாவாணர் தன் விளக்க உரையில், இத்தகைய பிணந் தழுவும் வழக்கம் தமிழரல்லாத வேற்றினத்தாரிடையே ஆசிரியர் தம் காலத்தில் இருந்தது கண்டு அதை உவமையாக அமைத்திருக்க வேண்டும் என்று எழுதுகிறார். இவ்வழக்கம் மலையாள நாட்டில் வழங்கி வந்ததாக அ. மாதவய்யர் குறிப்பிடுகிறார். "பல பிராமண மக்கள் மணக்காமலே இறக்க நேரிடும். மணவாதிருந்தால் சொர்க்கம் அடைய முடியாதென்று

பிற பிராமணர்களை விட்டு நிறையப் பணம் கொடுத்து விவாகமும் கன்னிகழிவும் ரகசியமாக நடத்துவது வழக்கம்" என்று அவர் குறிப்பிடுகிறார். திருவள்ளுவர் காலத்திலும் இது நடந்திருந்தமையால் உவமையாக்கப்பெற்றது போல் தெரிகிறது. இவ் உவமையை விட வேறு எந்த வழியிலும் பொருட் பெண்டிரைச் சேர்வதைப் பழிக்க முடியாது. இவ்வாறு பத்துக் குறட்பாக்களிலும் பொருட்பெண்டிரைக் கூடுவதைப் பழிப்பதன் மூலம் ஆண்மைக்கு நீதி ஒழுக்கம் கூறிப் பொருட் பெண்டிரே இல்லாமல் செய்யத் திருவள்ளுவர் எண்ணுகிறார் என்றே தோன்றுகிறது. இஃது ஆண்மையைப் பழித்துப் பெண்மையைக் காப்பதாகும். இவ்வெண்ணம் உடைய திருவள்ளுவரைப் போற்றிப் பணிதல் கடமை.

பெண் வழிச் சேறல்

பொருட்பாலில் அமைந்த மற்றொரு அதிகாரம் பெண் வழிச் சேறல். தன் வழி ஒழுகற் பாலளாய மனைவிவழியே தான் ஒழுகுதல் என்று அதிகாரப் பொருளைத் தருவார் பரிமேலழகர். அதாவது மனைவிசொல் கேட்டல் என்பதுதான் பொருள். மனைவி சொல் கேட்டால் வரும் துன்பங்கள் இவ்வதிகாரத்தில் வரையறுக்கப் பெறுகின்றன. இன்றைய நாகரிகச் சமுதாயத்தில் குடும்பத்தின் தலைமக்களாகிய கணவனும் மனைவியும் இருமனம் ஒத்து வாழவேண்டும் என்று வலியுறுத்தப்பெறுகிறது. அப்படியானால் கணவன் சொல்லை மனைவியும் மனைவி சொல்லைக் கணவனும் ஏற்றுக் கொள்வதுதானே இயல்பு. அவ்வாறு இருக்க மனைவி சொல்லைக் கேட்கக் கூடாது என்பது போல இவ்வதிகாரம் அமையுமானால் இன்றைய உலகிற்கு இவ்வதிகாரம் பொருத்தமுடையதாகுமா? என்பது சிந்திக்க வேண்டியதுதான்.

அதிகாரத்தின் ஒவ்வொரு குறட்பாவிலும் சில முக்கியச் சொற்களைத் திருவள்ளுவர் இடம்பெற வைத்துள்ளார்.

1. மனைவிழைவார் 2. பெண்விழைவார் 3. தாழ்ந்த இயல்பின்மை 4. மனையாளை அஞ்சும் 5. இல்லாளை அஞ்சுவான் 6. இல்லாள் அமை ஆர்தோள்அஞ்சுபவர் 7. பெண் ஏவல் செய்து8. நன்னுதலால் பெட்டாங்கு ஒழுகுபவர் 9. பெண் ஏவல் 10. பெண் சேர்ந்து ஆம் பேதமை இச் சொற்கள் அனைத்தையும் ஒருசேர சிந்தித்துப் பார்த்தால் மனைவியின் ஆலோசனைகளை ஏற்கக்கூடாது என்பதற்கு ஒரு குறிப்புக் கூட இல்லை. ஆனால் அதற்கு மாறாகக் காமம் மிகுந்து மனையாட்டியை விரும்புவது, மனைவிக்கு அஞ்சுவது, மனைவிக்கு அஞ்சி அவளுக்கு ஏவல் செய்வது என்ற ஆண்மைக்கு மாறான ஒத்த அன்பிற்கு மாறான செயல்கள்தான் கூறப்பட்டுள்ளமை புலனாகும். எனவே திருவள்ளுவர் ஒத்த அன்புடைய இருவர் ஒருவருக்கு ஒருவர் ஆலோசனைகளைப் பரிமாறிக் கொள்வது தவறு என்று சொல்லவில்லை என்பது புலப்படும். சொல்லாய்வு விரியும்போது காமம் மிகுதியால் ஆண்மை தாழ்ந்து அஞ்சவேண்டாத நிலையில் அஞ்சி வாழ்வது ஒருவருக்கு மற்றொருவர் அடிமையாவது இவைதான் பழிப்புக்கு உடையதாகத் தீங்கு தருவதாகத் திருவள்ளுவர் காட்டுகிறார் என்பது புலனாகும்.

ஆனால் கிடைத்திருக்கும் பெரும்பாலான உரையாசிரியர்கள் உரையின்படி பார்த்தால் ஏதோ மனைவியின் பேச்சைக் கேட்பது பெரும் பாதகச் செயல் என்பதுபோலத்தான் தோன்றுகிறது. இன்னும் குறிப்பிட்டுச் சொன்னால் கி.வா.ஜ. அவர்களின் ஆராய்ச்சிப் பதிப்பில் இவ்வதிகாரத்தின் ஒவ்வொரு குறளுக்கும் அவர் காட்டியுள்ள ஒப்புமைப் பகுதிகள் மனைவியின் பேச்சையே கேட்கக்கூடாதென்ற உணர்வையே ஏற்படுத்துகின்றன. ஆனால் பெண்மைக்கு ஏற்றம் தருகின்ற வள்ளுவர் அவ்வாறு பெண்மையை ஒதுக்குவாரா ? சிந்திக்கவேண்டும். அவர் கூறுவதெல்லாம் காமத்தால் ஆண்மை தவறி அச்சத்தால் தன்னைத்

தாழ்த்திக்கொண்டு பேதமை உணர்வோடு செயல்படும் பெண்மைக்கு அஞ்சும் ஆண்மையின் இழிநிலையைத்தான் இவ்வதிகாரம் மூலம் சாடுகிறாரே தவிர இயல்பான ஆண்மையை அல்லது பெண்மையின் தலைமையை இகழவில்லை என்பதை உணர வேண்டும். இக்கருத்திற்கு ஆதாரமாகக் கலைஞர் அவர்களின் திருக்குறள் உரைக்குப் பதிப்புரை வழங்கிய பேராசிரியர் மா. நன்னன் அவர்களின் குறிப்பைக் குறிப்பிடலாம்.

கொடி முந்திரிப் பழத்தை (அது தனக்குக் கிட்டாது என்பதால்) மறக்க விரும்பிய நரி அதற்காக அதை வெறுக்க முயன்று ச்சீ! ச்சீ! இந்தப் பழம் புளிக்கும் என்று கூறிய காரணத்தைப் போலவே பெண்ணின்பத்தை மறக்க விரும்பியவர்கள் அதை மறக்க முடியாமையால் வெறுக்கத் தொடங்கி அதற்காகவே பெண்ணை இழித்தும் பழித்தும் கற்பித்துப் பேசத் தொடங்கினர். இச்செயல் நாலடியார் போன்ற இலக்கியங்களில் பரவலாக இடம் பெற்றுள்ளது. அக்கருத்துக் காட்பட்ட பரிமேலழகர் போன்ற உரையாசிரியர்களும் திருவள்ளுவரின் கருத்துக்கு மாசு விளையாமல் உரை எழுத இயலாதோராயினர். அதன் விளைவே பெண்வழிச்சேறல் என்னும் அதிகாரக்குறள் பத்துக்கும் அவர்களால் தரப்பட்ட விளக்கமாக நிலைத்துவிட்டது". என்று பேராசிரியர் நன்னன் குறிப்பிடுவது பொருத்தமுடையதாகத் தோன்றுகிறது. எந்தக் குறட்பாவிலும் பெண்மையின் சொல்லைக்கேட்கக்கூடாது என்ற கருத்துக் குறிப்பாகக் கூட வைக்கப் பெறவில்லை என்பதை உணரல் வேண்டும்.

தையற் சொற்கேளேல் என்றெல்லாம் சொல்லுகின்ற நெஞ்சங்கட்கு மாறாகத் திருவள்ளுவர் மனைவியின் மீது அதிகக் காமம் கொள்ளாதே என்று கூறுவதுதான் பெண்வழிச் சேறல்

என்ற அதிகாரப் பொருளமைப்பு. அதிலும் அவர் அதிகமாக இவ்வதிகாரத்தில் வலியுறுத்துவது பெண்ணேவல் செய்யாதே என்பது. அதனால் ஆண்மை பெண்மையை ஏவல் செய்யலாமா? பெண் ஏவல் செய்வதற்கு உரிமையில்லையா என்று வாதிடலாம். ஆனால் திருவள்ளுவர் காமத்தைத் தீர்த்துக் கொள்வதற்காகப் பெண் ஏவல் செய்வதைத் தடுக்கிறாரே தவிர இயல்பாகப் பெண் தலைமை ஏற்றுஏவல் செய்வதை மறுக்கவில்லை.

அறவினையும் ஆன்ற பொருளும் பிறவினையும்
பெண்ஏவல் செய்வார்கண் இல்.

குறள் – 909

என்ற குறளில் பெண் ஏவல் செய்வார்க்கு அறவினை இல்லை, ஆன்ற பொருள் இல்லை என்று கூறப் ,பெற்றிருப்பதை நோக்க வேண்டும். ஏவல் செய்தால் அறவினையும் பொருளும் கிடைக்கத்தானே செய்யும். ஆனால் ஆன்ற பொருள் கூட இல்லை என்று திருவள்ளுவர் கூறுகிறார். அப்படியானால் ஏதோ ஒன்றை உணருமாறு குறளை அமைத்துள்ளார் என்பதை மறந்துவிடக்கூடாது. அதாவது அறநெறி தவறிப் பெண் ஏவல் செய்தால், அறவினை ஆன்ற பொருள் கிடைக்காது. அதாவது ஆணவப் பெண்மைக்கு ஏவல் செய்தால் ஆன்ற பொருள் கிட்டாது என்பதுதான் வள்ளுவரின் தீர்ப்பு (கலைஞர் உரை). இவ்வாறு ஒவ்வொரு குறளையும் ஆழ்ந்து நோக்கின் பெண்வழிச்சேறல் என்பது பெண்ணைக் குறைபடுத்துவது அல்ல. ஆண்மை பேதமையுற்றுப் பெண்மை ஆணவமுற்று நிகழும் நிகழ்ச்சிகள் தான் இவ்வதிகாரப் பொருள்கள். அவை தவிர்க்கப்பட வேண்டும் என்பதுதான் திருவள்ளுவர் எண்ணம்.

பிறனில் விழையாமை

அறத்துப்பாலில் இடம்பெற்ற பிறனில் விழையாமை அதிகாரம் ஆண்மையின் தீய செயலைத் தடுப்பது மட்டுமல்ல. பெண்மைக்கு இழிவு வரக்கூடாது; சமுதாயத்தில் பெண்மை காப்பாற்றப்பட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு படைக்கப் பெற்ற அதிகாரமாகும்.

எளிதெனெ இல்லிறப்பான் எய்தும்எஞ் ஞான்றும்
விளியாது நிற்கும் பழி.

குறள்–145

என்ற திருக்குறள் வழி அக்காலத்தில் எளிதாகப் பிறன்மனை நயத்தல் நடைபெற்றமையை எடுத்துக் காட்டி விடுகிறார் திருவள்ளுவர். தனித்திருக்கும் குடும்பப் பெண்கள் எளிமையாக வஞ்சிக்கப் பெறுவது இன்றும் நடைபெறுகிறது. எனவேதான் பெண்மையைக் காப்பாற்றப் பிறனில் விழைவது மிகத் தீமை, அறத்திற்கு மாறாவது என்றெல்லாம் அறம் கூறி அச்சம் ஏற்படுத்தித் தன் எண்ணத்தைப் புலப்படுத்துகிறார் திருவள்ளுவர்.

முடிபு

திருவள்ளுவரின் எண்ணங்களைப் படித்துப் படித்து ஆய்ந்து ஆய்ந்து மகிழ்ந்தால் பழந்தமிழர் பண்பாடு உண்மையாகவே புலனாகும். வெற்று அறவுரைகளைத் திருவள்ளுவர் தரவில்லை. நாளும் கைக்கொள்ள வேண்டிய நீதியைத்தான் தந்துள்ளார் என்பதும் புலப்படும். எல்லாவற்றிற்கும் முத்தாய்ப்பு வைத்ததாகத் தமிழ்ப் பெண்மையைப் போற்றி வணங்குவதும் தெளிவாகும்.

2. திருக்குறளில் அறக்கோட்பாடு



முனைவர் **ந. இராமாயி**

எம்.ஏ.,பிஎச்.டி.,

தமிழ்த் துறை.

பழந்தமிழ் இலக்கியங்கள் அறம்பொருள் இன்பப் பகுப்பின. பழந்தமிழர் வாழ்வில் அறவழிப்பட்ட கோட்பாட்டை இலக்கணமாக்கியவர் தொல்காப்பியர். அக வாழ்வில் அறத்தொடு நிற்றல் என்னும் செம்மை உண்டு. புறவாழ்வில் போர்முறையிலும் பொருளீட்டலிலும் சமூக அமைப்பிலும் அறத்தின் இயக்கத்தைச் சாற்றுவன சங்க இலக்கியங்கள். தன்மானமும் தறுகண்மையும் உடையவர்கள் சங்கத் தமிழர்கள். இன்ப வாழ்வும் பொருட் பெருக்கமும் அறத்தான் அமையவேண்டும் என்ற உயரிய குறிக்கோள் பழந்தமிழர் வாழ்வியலில் காணக்கிடக்கின்றன.

தொல்காப்பியம் தமிழரின் தனிப்பெரும் இலக்கணமாக இலக்கியமாக இலங்குகின்றது. இதில் அறமுதலாகிய வாழ்வியல் கூறுகள் சுட்டப்படுகின்றன.

இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்.

தொல்–பொருள்–களவு–நூ.1

என்னும் பகுதி இன்பத்தை முதலாகக் குறிக்கின்றது.

அறமுதலாகிய மும்முதற் பொருள்.

தொல்–செய்–நூ.,102

என்பது அறத்தை முதலாகச் சுட்டுகின்றது.

கழிந்த கங்கை தோய்ந்த திங்கள் தொல்லரா நல்லிதழி
சழிந்த சென்னிச் சைவவேடம் தான்நினைத்து ஐம்புலனும்
அழிந்த சிந்தை அந்தணாளர்க்கு அறம்பொருள் இன்பம் வீடு
மொழிந்த வாயான் முக்கணாதி மேயதுமுது குன்றே.

திருஞான சம்பந்தர் தேவாரம் திருமுதுகுன்றம் முதல் திருமுறை பா.,6

என்னும் தேவாரப் பகுதி அறத்திற்குத் தலைமை கொடுக்கிறது.

சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்
அறத்து வழிபடூஉந் தோற்றம் போல.

என்னுந் தொடர் அறத்தை முதலாக்குகின்றது.

வடுவிலா வையத்து மன்னிய மூன்றனுள்
நடுவண தெய்த இருதலையு மெய்தும்.

நாலடியார் பா–114

என்பது பொருளை முதலாக்குகிறது.

அறம் பொருள் இன்பம் வீடடைதல் நூற் பயனே.

நன்னூல்–10

என்பது அறத்தை முதன்மையாக்குகின்றது.

திருக்குறள் அறத்துப்பால், பொருட்பால், காமத்துப்பால் என்னும் பகுப்புடையது. இதில் அறம் முதன்மையாகின்றது.

அறனீனும் இன்பமும் ஈனும் திறனறிந்து
தீதின்றி வந்த பொருள். குறள் – 754

ஒண்பொருள் காழ்ப்ப இயற்றியார்க்கு எண்பொருள்
ஏனை யிரண்டும் ஒருங்கு. குறள் – 760

என்ற குறட்டொடர்கள் அறத்தையும், பொருளையும் முதலாக்குகின்றன. இதனால் இம்மூன்றும் ஒன்றோடு ஒன்று தொடர்புடையன என்பதும் அறத்தின் ஆளுமையில், பொருளும் இன்பமும் பெறல் வேண்டும் என்பதும் தெளிவாகின்றன. திருக்குறள் அமைப்பியலில் அறத்துப்பாலின் முன்னதாகப் பாயிரவியல் உள்ளது. கடவுள் வாழ்த்துப் பகுதியில் 'அறவாழி அந்தணன்' என்று கடவுள் அறத்தின் உருவாய்க் காட்சி தருகின்றான். முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம் புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம் – ஆதலின் பாயிரவியலில் நூலின் நுவல்பொருள் கருத்துரைக்கப்படுகின்றது. 'அறன்வலியுறுத்தல்' என்னும் அதிகாரத்தில் அறத்தின் இயல்பு, சிறப்பு, செல்வம், உயர்வு, செயல், செய்யும் காலம் என்றனைத்தும் கிளக்கப்படுகின்றன. அறன் வலியுறுத்தல் என்பது அறத்தை வற்புறுத்தலாகும். அதாவது கழன்று அறிவுறுத்தல் என்னும் துறை போல இடித்துக் கூறலாகும். அறத்தின் உண்மை உணராது மனிதனாய்ப் பிறந்தவன் மண்ணுலகில் நிலைதடுமாறிய கால கட்டத்தில் வள்ளுவர் அறம்பாடியிருக்கின்றார். உலகில் மக்கள் மானிடப் பண்புகளோடு ஒழுக்கத்தில் உயர்ந்து வாழ, உய்யும் வழிகாட்ட திருக்குறள் என்னும் சீரிய நூலை வள்ளுவர் அருளியிருக்கிறார்.

வள்ளுவத்தில் பாயிரவியல் தொடங்கி அறம் தொகுத்தல் விரித்தல் என்னும் உத்தி முறையில் நூல் முழுதும் விளக்கமாகின்றது. அறம் என்னும் சொல் பல்வேறு நிலையில் உரைக்கப்படுகின்றது. 'அறவாழி' என்று கடவுளாகவும் 'அறம்பூண்டார்' என்று அணியாகவும், 'அறத்தினூஉங்கு ' என்று ஒப்பீடாகவும், 'மாசிலனாதல் ' என்று இலக்கணமாகவும் 'இழுக்கா இயன்றதறம் ' என்று விரிவாகவும் 'அறம்செய்க ', 'அறவினை ' என்று செயல்களாகவும் 'அறத்தாறு, அறத்தான் வருவதே இன்பம் ' என்று இன்பம் பெறும் வழியாகவும் 'செயற்பாலதோரும் அறனே ' என்று விதிமுறையாகவும் 'அன்பும் அறனும் உடைத்தாயின்' என்று பயனாகவும், 'அறனிழுக்கா இல்வாழ்க்கை' என்று ஒழுக்கமாகவும், 'அறத்திற்கே அன்பு சார்பென்ப என்று பற்றுக்கோடாகவும், 'அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை ' என்று இல்லறமாகவும் 'இன்சொலினதே அறம் ' என்று இன் சொலாகவும், 'அறம் பார்க்கும், அறம்கூறும், அறம் சொல்லும், அறம் சூழும் ' என்று கருத்தாவாகவும், 'அறனறிந்து மூத்த அறிவுடையார்' என்று அறிவு நிலையாகவும், 'அறவினையும் ஆன்றபொருளும் ' என்று எண்ணுப் பொருளாகவும், 'எல்லா அறமும் தரும் ' என்று அறம் பல வகையாகவும் 'தீமையில்லாத சொல்லாகவும் ', தூயவினையாகவும் அகத் தூய்மையாகவும் அறுபதுக்கும் மேற்பட்ட இடங்களில் அறம் குறித்த சொல்லாட்சிகளையும் விளக்கங்களையும் காணமுடிகின்றன. இவற்றால் தனிமனிதனின் நெஞ்சம், சொல், செயல் இவற்றின் தூய நெறியே அறம் என்பது அறியக்கிடக்கின்றது. ஆவின் முதற்பயன் பால் என்றும், சோற்றின் முதற்பயன் பசிநீக்கல் என்றும் கொள்ளும் உண்மை நிலை போலக் குறளின் முதற்பயன் பொய்யாத்தூய செயல் என்று விளங்கிக் கொள்ளல்வேண்டும் என்று

உரைப்பர் செம்மல் வ.சுப.மா. (வள்ளுவம்) இக்கருத்து, அறம் பற்றிய பொருளைச் செறிவாக்குகின்றது

எச்செயல் பலராலும் பாராட்டப் படுகின்றதோ அது அறமாகும். எச்செயல் பலராலும் பழிக்கப்படுகின்றதோ அது மறமாகும். ஆராய்ந்து துணிதற்கரிய அறத்தின் நிலையை எவரும் அறிவதற்கு ஆற்றலுடையவரல்லர் என்று சுக்கிர நீதி (ப.385) அறம்பற்றி உரைக்கின்றது. அறத்தினியல்பு இன்னது என்று யாராலும் அறியமுடியாது என்று விளக்கஞ்செய்கின்றது சுக்கிரநீதி. வள்ளுவர் எல்லாவகையானும் அறம்பற்றிய செய்திகளை விளக்கமாக விரித்துரைக்கின்றார்.

உலகத்தோடொட்ட ஒழுகல், ஒத்தறிதல், சான்றோர் பழிக்கும் வினை செய்யற்க என்றெல்லாம் உயர்ந்தோர் நெறியொழுகல் அறம் என்பதைத் தெளிவு செய்கின்றார் வள்ளுவர்.

திருக்குறள் வாழ்விலக்கியம், காதலிலக்கியம் வள்ளுவர் வாழ்வியல் சுவைஞர்; அறத்தின் ஆசான். அவர் “மக்கட்சிற்றுயிர்க்கு அறத்தின் வேறின்மையில் அவ்வறத்தினையே விதந்துரைத்தற்குத் தந்திருவுளம் அமர்ந்த குறிப்புத் தோன்றவும் இது முழுவதூஉம் அறநூலே என்பது யார்க்கும் பொள்ளெனப் புலப்படவும் அறத்துப்பாலை முதற்கண் நிறுத்துவாராயினர்” என்று கூறுவர் மறைமலை அடிகள் (திருக்குறள் ஆராய்ச்சி பக். 3–44). இக்கருத்து அறத்தின் மேன்மையை முதன்மைப் படுத்துகிறது.

அறத்துப்பாலில் இல்லறவியல் துறவறவியல் இரண்டும் அறத்தை விரித்துரைக்கின்றன. அறத்தின் வேர் இல்வாழ்க்கை என்னும் நிலத்தில் கால் கொள்கிறது. அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை

என்னும் தொடர் இல்வாழ்க்கையே அறம் என்பதைத் தெளிவு செய்கின்றது. தனிமனிதன் ஆயினும் குடும்பத்தன் ஆயினும் அரசனாயினும் சமுதாயமாயினும் நாடாயினும் உலகாயினும் அறத்தின் அடிப்படையில் தான் வளர்ச்சிபெற முடியும். அந்த அறம் இல்வாழ்க்கையாகும் என்பதை இல்லறவியலின் தொடக்கம் காட்டுகிறது.

இல்வாழ்வான் துறந்தார், துவ்வாதார், இறந்தார் மூவர்க்கும் துணையாகின்றான்; துறவறத்தானின் பசிப் பிணியைப் போக்குகின்றான்; வறியார்க்குக் கொடுக்கிறான்; இறந்தார்க்கும் தென்புலத்தார்க்கும் கடனிறுக்கிறான். இவ்வகையில் இல்லறத்தான் துறவறத்தானினும் சிறந்தவனாகிறான் என்பதை வளளுவர் நிரனிறுத்திக் காட்டுகின்றார்.

ஆற்றுவா ராற்றல் பசியாற்றல் அப்பசியை
மாற்றுவார் ஆற்றலின் பின்.

குறள் – 225

என்னும் குறள் இல்வாழ்வானை முதலில் நிறுத்துகின்றது. இல்வாழ்வான் மனிதனாய் வாழ முற்படுகின்றான். தனக்குரிய வாழ்க்கைப் பாதையை வரையறுத்துக் கொள்கின்றான். குடும்பம் என்னும் ஒழுங்கிற்கு உட்படுகின்றான். நல்லதொரு சமுதாயத்தின்அங்கமாகின்றான். உலகின் பண்பாட்டு வளர்ச்சிக்கும் நாகரிகத்திற்கும் இல்லறத்தானின் செவ்விய நெஞ்சம் அடிப்படையாகின்றது.

அறவோர்க் களித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க் கெதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும்...........

என்னும் சிலப்பதிகாரப் பகுதி இல்லறத்தாலே எல்லாம் இயலும் என்று உரைக்கின்றது.

மனை, மனைவி, மக்கள் என்று ஒழுக்கத்தின் படிக்கற்கள் இல்லறவாழ்வின் செம்மையை உயர்த்துகின்றன. அன்பு, விருந்தோம்பல், இன்சொல், அடக்கம், ஒழுக்கம், பொறை, பயனில சொல்லாமை, ஈகை, புகழ் என்று ஏணிபோல் பலவகையறங்கள் இல்லறத்தால் ஒளிபெறுகின்றன. துறவறவியலில் அருள், தவம், புலால்மறுத்தல், கொல்லாமை, கூடாவொழுக்கம், வாய்மை என்னும் ஒழுகலாறுகள் துறவறத்தின் பெருமையைக் கூறுகின்றன. பொருட்பாலில் சமூக அமைப்பு, அரசியலறம், பொது அறம், பொருள் செயல்வகை, வினைத் தூய்மை, குடிமை, நட்பு என்று அறவழிப்பட்ட ஒழுக்கம் விரித்துரைக்கப்படுகின்றன.

காமத்துப்பால் களவு கற்பு என்னும் ஒழுகலாறுகளைக் கூறும் முறையில் அறவழிப்பட்டகாதல் காவியமாய் மிளிர்கின்றது.

அறம், பொருள், இன்பம் என்னும் வாழ்வியல் பகுப்புள் திருக்குறளின் பாடுபொருள் அறம் என்பதும், அறத்தின் இயக்கத்தால் பொருளும் இன்பமும் பெறுதற்குரியன என்பதும் தெளிவாகின்றன.

அறம் என்பது தூயநெறி என்பதும் அது மனம், சொல், செயல் இவற்றின் தூய்மை என்பதும், பிழையில்லாத ஒழுகலாறு என்பதும் கொள்ளக்கிடக்கின்றன.

அறத்தின் சிறப்பும் செல்வமும் பாயிரவியல் தொடங்கி நூல் முழுதும் விளக்கமாகின்றன. ஒருவன் நெறியோடும் முறையோடும் வாழ்வதற்கு இல்லறம் சிறந்தது என்பதும் தனி மனிதனை ஒழுக்க நெறிக்கு உட்படுத்துவதும் விலங்கினின்று வேறுபடுத்துவதும் இல்வாழ்க்கையே ஆகும் என்பதும் முடிபாகின்றன.

ஒருவன் தன் வேலையைக் கடமைதவறாது இயற்றுதலும், பிறர் பணியில் குறுக்கிடாதிருத்தலும் அறமாகும் என்பதை வள்ளுவம் தனிமனித அறமாகக் காட்டுகின்றது.

தனிமனித அறம், சமுதாய அறம், பொது அறம், அரசியலறம், களவு, கற்பு என்னும் வாழ்க்கையறம் அனைத்தும் வள்ளுவத்தில் விளக்கமாகின்றன.

அறஇயக்கத்தில் பொருளையும் இன்பத்தையும் பெற்று மகிழ்தல் என்பதே வாழ்வின் குறிக்கோள் என்பதைச் சாற்றும் அருமருந்து திருக்குறள் என்பது தெளியக்கிடக்கின்றது.

3. வள்ளுவர் நேரிசை



முனைவர். பழ சிதம்பரம்
எம்.ஏ.பிஎச்.டி.,
தமிழ்த் துறை.

தமிழ்மறையாகிய திருக்குறட்பாக்களை வெளிப்படையாகவும், குறிப்பாகவும் தம்படைப்புக்களில் பல படைப்பாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். திருக்குறளுக்குப்பின் தோன்றிய இலக்கியப் படைப்புகளில் இதற்குரிய சான்றுகள் மிகுதியாக உள்ளன. திருக்குறளுக்குக் கதையமைப்பில் விளக்கம் தரும் நூல்களும் உள்ளன. அந்நூல்கள் திருக்குறட்பா முழுவதையும் பிற்பகுதியில் வைத்து முற்பகுதியில் அதற்கு விளக்கமாக வரலாற்றுக் கதைகளை எடுத்துக் கூறுகின்றன. அவை செய்யுள் உரை நூல்கள் எனப்படுகின்றன. "திருக்குறளுக்குப் பல உரைகள் செய்யுள் உருவில் தோன்றின. திருக்குறட்பா ஒன்றைக் கூறி, அதன் கருத்தை விளக்க ஏதேனும் ஒரு கதையோ வரலாறோ உதாரணம் காட்டிப் பாடல் இயற்றும் வழக்கும் இலக்கிய உலகில் தோன்றியது. இத்தகைய நூல்களை உரை நூல்கள் என்றே கருதவேண்டும் என்பது டாக்டர். உ.வே.சா. கொள்கையாகும்" என மு.வை. அரவிந்தன் குறிப்பிட்டுள்ளார்.

கதை கூறும் போக்கும், சிற்றிலக்கியங்களின் செல்வாக்கும் செய்யுள் உரை நூல்களின் வடிவத்திற்குக் காரணங்களாயின. உரைநடை பெருகி வளர்ந்து வந்த காலத்தும் இத்தகு செய்யுள் உரைகள் உருவாகியுள்ளன. இவ்வகையில் தோன்றியன முதுமொழி, மேல்வைப்பு முதலான பதின்மூன்று நூல்கள். இவற்றுள் ஒன்று 'வள்ளுவர் நேரிசை' இதனை இயற்றியவர் அரசஞ்சண்முகனார்.

அரசஞ்சண்முகனார்

சோழவந்தான் என்ற ஊரினர். 1868ஆம் ஆண்டு பிறந்தவர். தந்தையார் அரசப்பப்பிள்ளை, தாயார் பார்வதி அம்மையார். இளமையிலேயே கவிபாடும் ஆற்றல் பெற்றவர். இவர் இயற்றிய 'சிதம்பர விநாயகர் மாலை' இவர் காலத்திலேயே திண்ணைப் பள்ளியின் பாட நூலாகத் திகழ்ந்துள்ளது. உரையாசிரியராக, மறுப்புரையாளராக, இலக்கியப் படைப்பாளராகச், சொற்பொழிவாளராக வாழ்ந்துள்ளார். திருக்குறளின் மீது மிகுந்த நாட்டம் கொண்ட அரசஞ்சண்முகனார் திருக்குறளுக்கு ஆராய்ச்சி விளக்கம் தந்ததோடமையாது செய்யுள் உரை வடிவிலும் கருத்துக்களைத் தந்துள்ளார். இவ்வகையில் 'வள்ளுவர் நேரிசை' திருக்குறளுக்கு உதாரணம் கூறும் உரைநூலாகத் திகழ்கிறது.

திருக்குறளின் முதல் 24 அதிகாரங்கட்கு விளக்கம் தந்து 'வள்ளுவர் நேரிசை' எழுதப்பட்டுள்ளது. ஆயினும் முதல் பத்து அதிகாரங்கட்குரிய பாடல்கள் மட்டுமே பதிப்பில் வந்துள்ளன. அப்பாடல்களை கி.பி. 1919இல் மா. கோபாலகிருஷ்ண அய்யர் பதிப்பித்துள்ளார்.

பெயரமைப்பு

வள்ளுவரைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு வெண்பா வகையினுள் ஒன்றைக் குறிக்கும் 'நேரிசை' என்ற சொல்லைச் சேர்த்து 'வள்ளுவர் நேரிசை' எனப் பெயர் அமைந்துள்ளது. திருக்குறளை விளக்க வந்த பிறசெய்யுள் உரைநூல்கள் யாவும் பிற பாட்டுடைத் தலைவர்களையும், முதுமொழி, மாலை, வெண்பா என்ற வகைச் சொற்களையும் பெயர்களாகக் கொண்டு 'சினேந்திரவெண்பா' 'சோமேசர் முதுமொழி வெண்பா', 'திருத்தொண்டர்மாலை' என்றவாறு அமைந்துள்ளன.

சிற்றிலக்கிய வகையில் பெயர்நேரிசை என்றொரு இலக்கியவகை காணப்படுகிறது. பாட்டுடைத் தலைவன் பெயரையோ, ஊரையோ சிறப்பித்து நேரிசை வெண்பாயாப்பில் பாடுவது முறையே, பெயர் நேரிசை, ஊர்நேரிசை எனக் கூறப்பெறுகின்றன.

பாட்டுடைத் தலைமகன் பெயரைச் சார
நேரிசை வெண்பாத் தொண்ணூறேனும்
எழுப தேனும் ஐம்ப தேனும்
அறைவது பெயர் நேரிசை யாகும்மே.

எனப் பெயர் நேரிசை என்ற இலக்கிய வகையுடன் ஒப்புக் காணும் நிலையில் வள்ளுவர் நேரிசை உள்ளது. இது வள்ளுவரைச் சிறப்பிக்கும் வண்ணம் அவரை விளித்து அவரது திருக்குறளை எடுத்துக் காட்டுகளுடன் விளக்கி அமைந்துள்ளது. பாடல் எண்ணிக்கையில் வரையறை கடந்து காணப்படுகிறது. எனினும் அதனை இலக்கிய வளர்ச்சியாகக் கொண்டால் வள்ளுவர் நேரிசையைச் சிற்றிலக்கியப் பகுப்பிலும் சேர்க்கலாம்.

நூலமைப்பு

திருக்குறளின் முதல் பத்து அதிகாரங்களுக்குத் திருக்குறள் வரிசையிலேயே நேரிசை வெண்பா யாப்பில் விளக்கம் தரப்பெற்றுள்ளது. முன் இரண்டு அடிகளில் ஒரு வரலாறு அல்லது ஒரு வினா அமைந்துள்ளது. இரண்டாம் அடியின் மூன்றாம் சீரில் 'வள்ளுவரே' என்ற விளியுள்ளது. பின் தனிச் சொல்லும் அதனை அடுத்து விளக்கத்திற்கு உரிய குறளும் இடம் பெற்றுள்ளன.

திருக்குறள் குமரேச வெண்பா முதலான நூல்களில் விளியாகத் தனிச் சொல் அமைந்துள்ளது. ஆனால் வள்ளுவர் நேரிசையில் இரண்டாம் அடியின் மூன்றாம் சீர் விளியாக வரத் தனிச்சொல் திருக்குறளுக்குத் தொடர்பு தரும் சொல்லாகக்காணப்பெறுகிறது.

முதல் பாடல் தற்சிறப்புப் பாயிரமாக விளங்குகிறது. திருவள்ளுவ மாலையின், முதற்பாட்டில் உள்ள முதலடியான, 'திருத்தகு தெய்வத் திருவள்ளுவர்' என்பதே வள்ளுவர் நேரிசையின் முதல் பாட்டின் முதலடியாக உள்ளது. திருவள்ளுவரின் திருவடிகளைத் தலை மேற்கொண்டு அவர் அருளிய மறைப்பாட்டோடு யானும் அரைப்பாட்டினைச் சேர்த்து 'நேரிசை' எனும் பெயரில் பாடுவேன் என்ற கருத்துப்பட,

திருத்தகு தெய்வத் திருவள்ளு வர்தான்
வருத்தமறச் சென்னிமிசை வைத்துக் - கருத்திருத்தி
அன்னார் மறைப்பாட் டோடு யானுமரைப்
பாட்டிசைப்பேன்
முன்னே ரிசைப்பேர் மொழிந்து.

என்றவாறு முதல் பாடல் அமைந்துள்ளது.

தற்சிறப்புப் பாயிரத்தை அடுத்துக் கடவுள் வாழ்த்தின் முதற் குறளில் தொடங்கி வான்சிறப்பு, நீத்தார் பெருமை, அறன் வலியுறுத்தல், இல்வாழ்க்கை, வாழ்க்கைத் துணை நலம், மக்கட்பேறு, (புதல்வரைப் பெறுதல்) அன்புடமை, விருந்தோம்பல், இனியவை கூறல் என அதிகார முறைப்படி திருக்குறட்பாக்கட்குரிய விளக்கங்கள் இடம் பெற்றுள்ளன.

விளக்கும் முறை

விளக்கத்தில் புராணக் கதைகள், செவிவழிக்கதைகள் மிகுதியாக இடம் பெற்றுள்ளன. இராமாயணம், மகாபாரதம், பாகவதம்,

இறையனாரகப்பொருள், சிலப்பதிகாரம், திருவிளையாடற் புராணம், பெரியபுராணம், கந்த புராணம், அருணாசல புராணம், நளவெண்பா, விநோதரச மஞ்சரி ஆகிய நூல்களிலுள்ள கதைப் பகுதிகளும், அவ்வையார், விக்கிரமாதித்தன் ஆகியோரைக் குறித்த செவி வழிச் செய்திகளும் திருக்குறட்பாக்களின் விளக்கத்திற்கு எடுத்தாளப் பெற்றுள்ளன.

மிதிலை மன்னன் வனம் சென்றதையும், இராமன் காடு ஏகினதையும் முறையே,

அறத்தாற்றின் இல்வாழ்க்கை யாற்றின் புறத்தாற்றிற்
போஒய்ப் பெறுவ தெவன்.

குறள் 46

மகன்தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
என்னோற்றான் கொல்எனுஞ் சொல்.

குறள் 70

என்ற திருக்குறட்பாக்களுக்கு விளக்கமாகத் தந்திருப்பது இல் நிலையின் சிறப்பையும், புதல்வரின் கடமை உணர்வையும் எடுத்துக் காட்டுகின்றன. இராமாயணத்தில் உள்ள இக் காட்சிகளைக் காட்டிய அரசஞ்சண்முகனார் இராமாயணத்தில் இல்லாத ஒன்றைப்,

பணிவுடையன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணியல்ல மற்றுப் பிற.

குறள் 95

என்ற திருக்குறட்பாவிற்கு விளக்கமாகத் தந்துள்ளார். இராமா என ஏழை ஒருவன் அழைக்க, அவ்வேழையை வாழ்த்தி அன்பு செலுத்தியதாகக் கூறப் பெற்றுள்ளது.

மகாபாரதக் கதையிலிருந்து பெரும்பாலான இடங்களும் கிளைக் கதைப் பகுதிகளும் மிகுதியான குறட்பாக்களுக்கு விளக்கமாக எடுத்தாளப் பெற்றுள்ளன.

குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல்கேளா தவர்.

குறள் 66

என்ற குறட்பாவிற்குக் கண்ணன் மழலைச் சொல் நந்தர்க்கு இன்பமாக உள்ளதாகவும்,

அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ் ஆர்வலர்
புன்கண்நீர் பூசல் தரும்.

குறள் 71

என்பதற்குக் குந்திதேவி கன்னனிறந்த போது அழுததையும், எடுத்துக் காட்டியுள்ளார். இவ்வாறே சிசுபாலன் தீயவை கூறியது, தூது சென்ற கண்ணன் விதுரன் வீட்டில் தங்கியது, கண்ணன் கவச குண்டலங்களைக் கொடையாக வழங்கியது போன்ற பலவும் விளக்கத்தில் இடம் பெறுகின்றன.

பெற்றாற் பெறிற்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.

குறள் 70

என்ற திருக்குறட்பாவிற்குக் கண்ணகி பெற்ற பெருஞ்சிறப்பை எடுத்துக்காட்டியுள்ளார். இக்காட்சி பரிதியாரின் உரையொடு ஒப்பு நோக்குதற்கு உரியதாக உள்ளது. பரிதியார், 'இதற்கு ஒப்பனைகள் கண்ணகியாரைக் கண்டு கொள்க' என இத் திருக்குறட்பாவிற்கு விளக்கம் தருகையில் குறிப்பிட்டுள்ளார்.

உலவாக்கோட்டையினால் விருந்தளித்த திருவிளையாடற் புராணச் செய்தி கண்ணப்பர் செய்த பூசையின் சிறப்புணர்த்தும் பெரிய புராணக் கருத்து, ஈசனின் கண்ணை உமை மூட உலகம் இருண்டதாகக் கூறும் புராணக் கருத்துப் போன்ற புராண விளக்கங்களைப் பல திருக்குறட்பாக்களுக்கு விளக்கமாகத் தந்துள்ளார்.

இவ்வாறு அமைந்துள்ள பல்வேறு விளக்கங்களும் திருக்குறட்பாக்களை எளிதில் விளங்கிக் கொள்ள உதவுகின்றன.

கல்லே புனையாக் கருங்கடலை நாவரையர்
வல்லே கடந்ததென்னவோ வள்ளுவரே - சொல்லுங்கால்
வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல.

என்றவாறு வினா – விடையாக அமைந்து விளக்கம் தருகின்ற பாடல்களும் காணப்படுகின்றன. சில பாடல்களுக்கமைந்த விளக்கங்கள் தெளிவற்று ஆய்வுக்குரிய வகையில் காணப்படுகின்றன. சிறந்த உரைவளம் கொண்டுள்ள திருக்குறட்பாக்களுக்கு விளக்கக் கதைகளை முன் அமைந்துள்ள உரைகளின் அடிப்படையிலேயே அரசஞ்சண்முகனார் அமைத்துள்ளாரா என்பதும் ஆய்வுக்குரிய களமாக அமைகிறது.

4. வள்ளுவர் வலியுறுத்தும் அறிவு



தா. மணி
எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்.,
தமிழ்த்துறை.

ஒரு துறை சாா்ந்த அல்லது குறிப்பிட்ட ஒரு பொருளைப் பற்றிய தரவுகளைத் தெரிந்து வைத்திருத்தலுக்கு அறிவு என்ற சொல் பெரிதும் இன்று பயனாகிறது. செய்திகளையும் அவை தொடர்பான விளக்கங்களையும் நுண்மையாகத் தெரிந்து வைத்திருத்தலோடு, மீளவும் வேண்டும்பொழுது நினைவாற்றலோடு கூறுகின்ற, செயல்படுகின்ற நிலையைப் பொதுவாக நாம் அறிவு என்கிறோம். இத்தகைய அறிவுப் பெருக்கமுடையோர்க்கே சமுதாயத்தில் பொருளும் ஒருவகைப் புகழ்ச்சியும் வாய்க்கிறது. பொருளும் புகழ்ச்சியும் மென்மேலும் இத்தகைய அறிவாளிகளின் உற்பத்திப் பெருக்கத்திற்கு ஊக்கமூட்டுகின்றன. வள்ளுவர் தமது முப்பால் முழுவதிலும் இயன்ற இடமெல்லாம் கூறிச்செல்கிறாரே அந்த அறிவும் மேற்கூறிய அறிவோடு ஒத்தது தானா? அல்லது அதனினும் வேறுபட்டதா? வேறுபட்டதாயின் வள்ளுவரின் அறிவு பற்றிய கோட்பாடுகள் என்னென்ன? அறிந்து தெளியும் முயற்சியே இக்கட்டுரையாகும்.

அறிவு பற்றிய அதிகாரங்கள்

அறிவுடைமை (43) என்னும் அதிகாரம் அறிவின் பொருளையும், பயன்களையும் கூறுகின்றது. இதற்குச் சற்றேரக் குறைய எதிர்மறைப் பொருளில் புல்லறிவாண்மை (85) அதிகாரம் அமைந்துள்ளது. அறிவின்மையினால் வரும் கேடுகள் அனைத்தும் இங்குக் கூறப்பெறுகின்றன. அறிவுடைமை அதிகாரத்திற்கு முன் அமைந்துள்ள கல்வி (41) கேள்வி (43) அதிகாரங்களையும் அறிவுத் தொடர்பான அதிகாரங்களாகக் கொள்ளலாம். கல்லாமை (42) என்னும் அதிகாரமும் அறிவின்மையின் இழிவைக் கூறுகின்றது. இவை தவிர அவை அறிதல், (711) அதிகாரத்தில் அறிவுடையோர் பேசப்படுகின்றனர். பொருட்பாலில் இந்த ஆறு அதிகாரங்களே அன்றி அறத்துப்பாலில் வரும் மெய்யுணர்தல் என்னும் அதிகாரமும் மெய்ப்பொருள் அறிவைப் பற்றியே பேசுகின்றது. இவையே அன்றி அறத்துப்பாலிலும், காமத்துப் பாலிலும் அறிவு பற்றிய விளக்கங்களை ஆங்காங்கே சுட்டிச் சென்றுள்ளார்.

அறிவு பெறும் வழி

நூல்களைக் கற்றுணரும் அறிவினை வள்ளுவர் 'கற்றனைத் தூறும் அறிவு' (396) என்கிறார். தொடர்ந்து கற்றலினால் அறிவு பெருகும் என்பது இக் குறட்பா கருத்தாகும். வாசிப்பு புதிய பொருளைத் தரும் என்பர்[1] "நவில் தொறும் நூல்நயம்" (குறள் 783) என்பதும் ஈண்டு ஒருங்கு எண்ணத் தக்கது. கற்றலில் தெளிவும் நிலைப்பும் வேண்டின் மீண்டும் நினைவு கூர்ந்து கற்றல் அவசியமாகும். கல்வி உளவியலார் இதனை மீட்டுக் கொணர்தல் என்பர். [2] வள்ளுவர் கூறும் "கற்றனைத் தூறும் , நவில் தொறும்" என்னும் தொடர்கள் அறிவுத் தெளிவிற்கான அடிப்படைகள் ஆகும்.

1. செ.வை சண்முகம் வள்ளுவரின் வாசிப்பு கோட்பாடு – வள்ளுவம், மே – ஜூன் – ப–53
2. சந்தானம் – கல்வி உளவியல் – பழனியப்பா பிரதர்ஸ் – ப – 313

ஒருவனது அறிவு வளர்ச்சிக்கு அவன் எவரெவரோடு சேர்ந்து பழகுகிறான் என்பதும் ஏதுவாகிறது. இதனை வள்ளுவர் இனத் தியல்பாகும் அறிவு (குறள் - 425) என்கிறார். மேலும் ஒன்றைக் கற்றுத் தெளிந்து அதை எளிமைப்படுத்தி பிறருக்கு உரைக்கும் திறனும் பிறர் கூற்றில் வெளிப்படும் நுண்பொருளைஉய்த்துணரும் திறனும் அறிவு எனப்படும் என்கிறார். (குறள்- 424) இக்குறள் மொழித் திறன்களில் (Language skils) கேட்டல் திறன், பேச்சுத் திறன் என்னும் இரண்டையும் பற்றியனவாகும்.

நூல்கள் வாயிலாகவும் அறிவுடையோர் வயிலாகவும் கற்ற அறிவைவிட ஒருவனுக்கு இயல்பிலேயே வாய்த்த அறிவே வலிமையானது என்கிறார் வள்ளுவர். இதையே உண்மை அறிவென்றும் உரைக்கின்றார்.

நுண்ணிய நூல்பல கற்பினும் மற்றுந்தன்
உண்மை அறிவே மிகும்.

குறள் - 373

உண்மை அறிவை ஊழ் அதிகாரத்தில் கூறி ஊழ்வினையோடு தொடர்பு படுத்தப்படுவது சிந்திக்கத்தக்கது. இவ்வுலகில் நாம் முயன்று கற்கும் அறிவை விட விஞ்சி வெளிப்படுவது இயற்கை அறிவேயாகும் என்பது இதன் பொருளாகும். மக்களுக்குள்ள இயற்கை அறிவை விளக்கம் பெறச்செய்வதும் கல்வியறிவு என்னும் அறிஞர்தம் கருத்தும் எண்ணத்தக்கதாகும்[3] மற்றுமோர் இடத்தில் (அமைச்சு) மதிநுட்பம் என்னும் ஒருவகை அறிவை வள்ளுவர் குறிப்பிடுகிறார்.

மதிநுட்பம் நூலோடு உடையார்க்கு அதிநுட்பம்
யாவுள முன்னிற் பவை.

குறள் - 636

3. ச. தண்டபாணிதேசிகர் - திருக்குறள் அழகும் அமைப்பும்

குறள் 373இல் கூறிய உண்மை அறிவையும் இங்குக் குறிக்கப்படும் மதிநுட்பத்தையும் ஒன்றெனக் கொள்வதில் தவறேதும் இல்லை.

அறிவின் பெருமைகள்

மனிதன் உலகியல் வாழ்வில் தளர்ச்சியடையும்போது தாங்கி நிறுத்துவதும், அழிவிலிருந்து அவனை மீட்டெடுப்பதும் அவன் பெற்ற அறிவு ஒன்றேயாகும் மனிதனின் அற்றம் காக்கும் கருவியாக அறிவைக் கண்டு கூறுகிறார் வள்ளுவர் (குறள் 421). அறிவுடையார் ஆவதறியும் ஆற்றலுடையவர்கள் (குறள் 427). எனவே அவர்களை எத்தகைய துன்பங்களும் தீடீரென்று வந்து தாக்கி நிலைகுலையச் செய்ய இயலாது. எதிர் வருவனவற்றை முன்னரே அறிந்து தற்காத்துக் கொள்ளும் ஆற்றல் அவர்களுக்கே உண்டு என்கிறார் வள்ளுவர் (குறள்429) இக்காரணங்களால் அறிவுடையோரையே இவ்வுலகில் எல்லாம் உடையவர்களாகக் கருதுகிறார் வள்ளுவர் (குறள் 430). இதற்கு நேர் மாறாக இல்லாமையில் கொடிய இல்லாமையாக அறிவில்லாமையையே கூறுகிறார் (குறள் 841). ஏனெனில், கொடிய பகைவராலும் செய்ய முடியாத அழிவினை ஒருவனுக்கு அவனது அறிவின்மையே செய்துவிடும் என்கிறார்.

அறிவிலார் தாம்தம்மைப் பீழிக்கும் பீழை
செறுவார்க்கும் செய்தல் அரிது.

குறள் –843

அறிவுடைமையால் வரும் ஆக்கத்தையும், அறிவின்மையால் வரும் அழிவையும் வள்ளுவர் மிகத் தெளிவாகப் புலப்படுத்தியுள்ளார்.

நன்னெறிக்குய்ப்பது

அறிவுக்கு விளக்கம் கூறும் வள்ளுவர் நல்வழியில் ஒருவனை எது செலுத்துகின்றதோ அதுவே அறிவு என்கிறார். ஐம்புலன்களில் திளைக்க அலைபாயும் மனதை மடைமாற்றம் செய்து நல்வழிப்படுத்துவதே அறிவு என்கிறார். நன்றின்பால் உய்ப்பது அறிவு என்னும் வள்ளுவரின் அறிவுக்கோட்பாடு புதுமையானது மட்டுமன்றிப் புரட்சிகரமானதுமாகும் (குறள் 422) "தீதும் நன்றும் பிறர்தர வாரா" (புறம் 192) என்ற கணியன்கூற்றுக்கு அவனவன் அறிவே காரணமாகி நிற்கிறது என்னும் விடை இக்குறளால் கிடைக்கிறது. "நீத்தார் பெருமை" அதிகாரத்திலும், அறிவுத்திண்மையால் ஐம்புலன்களையும் வென்றவனது பெருமை பேசப்படுகிறது. "உரன்என்னும் தோட்டி" என்று இக்குறளில் அறிவைக் குறிப்பிடுகிறார் (குறள் 24). அறிவுபற்றிய மேற்கண்ட இரு குறட்பாக்களோடு – "பெருமையும் உரனும் ஆடுஉ மேன"[4] என்னும் தொல்காப்பியத் தொடரையும் இயைபு படுத்திப் பார்க்கலாம். எல்லா அறிவினும் மேம்பட்ட அறிவாக அடுத்தவர்க்குத் தீமைசெய்யாத பண்பையே வள்ளுவர் கூறுகிறார். "தீவினை அச்சம்" என்னும் அதிகாரத்தில் இத்தகைய அறிவையே அறிவினுள் எல்லாம் தலையாய அறிவு என்று போற்றுகிறார் (குறள் 203).

இடுக்கண் அழியாமை அதிகாரத்திலும் அறிவுடையான் பேசப்படுகிறான். பெருகிவரும் வெள்ளம்போல் பெரும் துன்பங்கள் ஒருவனை அதிரத்தாக்கினாலும், அவன் அறிவுடையவனாக இருப்பின்; நினைத்த மாத்திரத்திலேயே அத்துன்பங்கள்

4. தொல் – பொருள் – களவியல்

5. குறள் 425 அறிவுடைமை – திருக்குறள் உரைவளம் – தருமை ஆதீன வெளியீடு

அனைத்தையும் துடைத்தெறிவான் என்கிறார் (குறள்622). இக்குறள் அறிவின் அளக்கவியலாப் போற்றலைப் புலப்படுத்துகிறது. பரத்தமைப் பண்பில்லா ஆண்மக்களை வள்ளுவர் அறிவின் மிக்கவர்களாகப் போற்றுகிறார். அறிவு நலஞ்சான்ற உரமிக்காரே இத்தகைய தீய வழிகளில் சிக்காமல் சிறக்க முடியும் என்பது வள்ளவர் கருத்து.

அருட்பொருள் ஆயும் அறிவினவர்

குறள்–914

மதிநலத்தின் மாண்ட அறிவினவர்

குறள்–915

ஆயும் அறிவினர்

குறள்–918

என வரும் தொடர்கள் ஒருவனது புலனொடுக்கமே அவனது அறிவுடைமையின் அடையாளம் என்பதை வலியுறுத்துகின்றன. புலனடக்கம் இல்லாத அறிவைப் போலி அறிவென்று புறந்தள்ளுக.

உலகம் தழுவுக

ஓங்கிய நூல்பல கற்றும் உலகத்தோடு ஒட்டி வாழாதவர்களைக் கற்றறியா மூடர்கள் என்கிறார் வள்ளுவர் (குறள் 140). ஒழுக்கமுடைமை அதிகாரத்தில் அறிவுக்கு இத்தகைய விளக்கம் தரும் வள்ளுவர், அறிவுடைமை அதிகாரத்தில் மீண்டும் இக்கருத்தை இருமுறை வலியுறுத்துகிறார். மனிதனைச் சமூக இயல்பினனாக உருவாக்குதே கல்வியறிவின் முதிர்ந்த நோக்கமாகும் என்று இக்காலக் கல்விச் சமூகவியலாரும் கருதுவர். இதை வள்ளுவர் மிகத் தெளிவாக,

எவ்வ துறைவது உலகம் உலகத்தோடு
அவ்வ தறைவது அறிவு

குறள்– 426

---

6 பாரதிதாசன் கவிதைகள், செந்தமிழ்நிலையம்–ராமச்சந்திரபுரம் ப–150

என்று கூறுகிறார். இதற்கு முந்தைய குறளில் இன்னும் விரிவாக அறிவானது உலகம் தழுவியதாக இருக்க வேண்டும் என்றும்; அது எப்போதும் மாறாது இருக்கவேண்டும் என்றும் கூறுகிறார். இவ்வுலகம் தழுவிய அறிவுக்கு வள்ளுவர் "ஒட்பம்" என்ற சொல்லை ஆளுகின்றார்.

உலகம் தழீஇயது ஒட்பம் மலர்தலும்
கூம்பலும் இல்லது அறிவு

குறள் – 425

இக்குறள் அறிவின் மிகச் சிறந்த பயனை நமக்கு உணர்த்துகிறது.

அறிவை விரிவு செய்! அகண்டமாக்கு!
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைத்துக் கொள்! உன்னைச் சங்கமமாக்கு[6]*.......*

என விரியும் பாவேந்தரின் அறிவியக்கப் பாடலையும் ஈண்டு ஒப்பு நோக்கி உணரலாம். மக்கட் பண்பில்லாத அறிவு எவ்வளவு கூர்மையுடையதாக இருந்தாலும் எள்ளளவும் பயனற்றது என்பதே வள்ளுவம். அறிவு பற்றிய இக்கருத்து இடம்பெறுவதோ பண்புடைமை அதிகாரமாகும்.

அரம்போலும் கூர்மைய ரேனும்மரம் போல்வர்
மக்கட் பண்பில்லா தவர்.

குறள் – 997

அறிவுடைமையின் விளைவே மக்கட்பண்பு என்பதை வள்ளவர் இயன்ற இடமெல்லாம் சுட்டிச் செல்கிறார்.

பேரறிவாளன்

மேற்கண்டவாறு உலகத்தோடு ஒட்டி வாழும் அறிவுடையான் தன்னைச்சுற்றி வாழும் உயிர்களின் துன்பம் கண்டு துடிதுடிப்பான்.

---

7. தவத்திரு குன்றக்குடி அடிகளார் – குறட்செல்வம் – கலைவாணி புத்தக நிலையம் – 1976 – ப 129

வாடிய பயிரைக் கண்ட வள்ளலைப் போல் அடுத்த உயிரின் துன்பத்தைத் தன் துன்பமாகக் கொள்வான். இவ்வாறு ஒருவன் கொள்ளவில்லை எனில் அவன்பெற்றுள்ள அறிவினால் என்ன பயன்? என்று வள்ளுவர்கேட்கிறார்.

அறிவினால் ஆகுவது உண்டோ பிறிதின்நோய்
தன்நோய்போல் போற்றாக் கடை.

குறள் – 315

வள்ளலார் வலியுறுத்திய சீவகாருண்ய ஒழுக்கமே அறிவின் அடையாளம் என்பது வள்ளுவர் வாக்காகும். அறிவுடைமையின் பயனாகத் திருவள்ளுவர் காட்டுவது கருணையை ஆகும். (7) ஒருவருக்கொருவர் இயன்றவரை உதவிக்கொண்டு வாழ்தலை வள்ளுவர் ஒப்புரவு இயலில் உரைக்கின்றார். இவ் ஒப்புரவை அறிந்து கொள்வதே சிறந்த அறிவு என்கிறார் வள்ளுவர்.

இவ்வறிவு உடையவனே உயிரோடு வாழ்பவனாகக் கருதப்படுவான்; இவ்வறிவு இல்லாதவன் உயிரற்ற பிணமாகக் கருதப்படுவான்என்கிறார் வள்ளுவர்.

ஒத்த தறிவான் உயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும்.

குறள் – 214

என்ற குறளில் ஒத்த அறிவற்றவனிடம் வள்ளுவர் காட்டும் சினம் கொஞ்சம் கூடுதலாகவே தெரிகிறது. ஒத்ததறியா உயிர் வாழ்க்கை உலகிற்குத் தேவையில்லை என்பதே வள்ளுவரின் உறுதி. ஆக அறிவுடையோர் ஒரு நாளும் தன்னல வாழ்வினராய் இருக்கமாட்டார் என்பதும் உலக உயிர்களின்

இன்பத்தையே தமது இன்பமாகக் கருதுவர் என்பதும் வெளிப்படுகிறது. அறிவின் மிக்க இத்தகைய பண்புடையார் ஒரு சிலர் இன்னும் எஞ்சியிருப்பதாலேயே இவ்வுலகம் நிலை பெற்றுள்ளது என்றும் குறள் கூறுகிறது (குறள் 996). இத்தகைய ஒத்தறியும் பண்பாளரையே "உண்டாலம்ம" – என்னும் புறப்பாடலும் (புறம்–182) கூறுகிறது. திருவள்ளுவர், உலகுக்காக முழுதுமாக வாழ்பவனையே "பேரறிவாளன்" என்று போற்றுகின்றார். ஊருணி நீர் எவ்வாறு முற்றுமாக ஊருக்குப் பயன்படுகின்றதோ அதுபோல் தன்செல்வமனைத்தையும் உலகுக்கு உதவுபவனையே அறிஞர்க்கெல்லாம் பெரிய பேரறிஞனாக அவர் குறிப்பிடுகிறார்.

ஊருணி நீர் நிறைந் தற்றே உலகவாம்
பேரறி வாளன் திரு.

குறள் – 215

இக்குறளில் வரும் உலகவாம் பேரறிவாளன் என்னும் தொடருக்கு உலக உயிர்களை நேசிக்கின்ற பேரறிவாளன் என்று பொருள் கொள்ளவேண்டும். மனித உயிர்களின் அறிவைச் சிற்றறிவு என்றும், இறை அறிவைப் பேரறிவு என்றும் சமயவாதிகள் கூறுவர். ஈண்டு, உலக உயிர்களிடத்துக் கருணை கொண்டு உதவுபவனை இறைவனுக்கு நிகராக வள்ளுவர் கூறியுள்ளார் என்பதை உணரவேண்டும். நூல் பலகற்று, பட்டங்களும் பல்வேறு சிறப்புக்களும் பெற்றவர்களை வள்ளுவர் எந்த இடத்திலும் அறிஞன் என்றோ, பேரறிஞன் என்றோ போற்றவில்லை. மாறாக எதையும் தமக்காக இருத்திக் கொள்ளாது ஊருக்குக் கொடுத்துவப்பபவரையே அறிவின்மிக்கார் என்று அவர் போற்றுகின்றார். இவ்வுண்மை காரணமாகவே 'திருவேறு, தெள்ளியராதல்வேறு' என்று ஊழ் அதிகாரத்தில் (374) கூறியுள்ளார் போலும்.

உலகம் உவப்பது

உண்மை அறிவுடையானது அறிவு உலகுக்கே உவப்பாகி விடும். தமது அறிவினால் உலகம் இன்புறுவது கண்டு அறிவுடையோர் பெரிதும் மகிழ்வர் இதைப் பின்வரும் குறள் கூறுகிறது.

தாம்இன் புறுவது உலகின்புறக் கண்டு
காமுறுவர் கற்றறிந் தார். குறள் – 399

அறிவுடையோரால் இவ்வுலகமே இன்புறும் என்னும் கருத்தை மேலும் இரண்டு குறட்பாக்கள் தெளிவுபடுத்துகின்றன. மக்கட் பேற்றின் சிறப்பினைக் கூறவரும் வள்ளுவர் "அறிவறிந்த மக்கட்பேறு" (குறள் 61) என்று அறிவைப் பொருத்திக் கூறுகிறார். இவ்வறிவறிந்த மக்களால் பெற்றவர்களைக் காட்டிலும் உலகத்து மற்றவர்களே பெரிதும் இன்பமுறுவார்கள் என்றும் கூறுகிறார்.

தம்மின் தம்மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது.

குறள் – 68

ஒருவனின் அறிவுடைமை உலகுக்கே உவப்பாகிறது. எனவே அறிவுடைமை ஒருவனது தனியுடைமை ஆகாது; அது அறிவியல் மேதைகள், ஆன்மீக ஞானிகள் ஆகியோரது அறிவைப் போன்று மனித குலம் முழுமையும் துய்ப்பதற்கான பொதுவுடைமைப் பொருளாகும்.

மெய்ப்பொருள் அறிவு

அறிவுடைமை அதிகாரத்தில்,

எப்பொருள் யார்யார் வாய்க்கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

குறள் – 423

என வரும் குறட்பா மெய்ப்பொருளை அறியத் தூண்டுகிறது. யார் கூறுகிறார் என்று பாராமல், என்ன கூறுகிறார் என்றுணர்ந்து மெய்ப்பொருளைஅறியவேண்டும் என்கிறார். "இழிந்த பொருள்உயர்ந்தோர்வாயினும் உறுதிப் பொருள்பகைவர்வாயினும் ", என யார்யார் வாயினும் என்னும் தொடருக்குப் பொருந்த உரை காண்பர் பரிமேலழகர். மெய்யுணர்தல் என்றும் அதிகாரத்திலும் இக்கருத்தை ஒட்டியதாக ஒரு குறள் இடம் பெற்றுள்ளது.

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு.

குறள் – 355

எனவரும் குறளுக்கு உலகத்துக் காணும் எப்பொருளினும் மெய்ப்பொருளைத் தேடி உணரவேண்டும்; அதுவே அறிவு என்றும் பொருள் கொள்ளவேண்டும். இவ்விரு குறட்பாக்களிலும் மெய்ப்பொருள் காண்பதையே அறிவு என்கிறார் வள்ளுவர். மெய்ப் பொருளாவது எது? அதை அறிவதினால் என்ன பயன்? என்னும் வினாக்களுக்கு விடைகூறுவது போல் வள்ளுவரே ஒரு குறள் அமைத்துள்ளார்.

பிறப்பென்னும் பேதைமை நீங்கச் சிறப்பென்னும்
செம்பொருள் காண்பது அறிவு

குறள் – 358

இக்குறட்பாவில் சிறப்பென்னும் செம்பொருள் என்னும் தொடரை மெய்ப்பொருளுக்கு விளக்கமாகக் கொள்ளவேண்டும். சிறப்பென்னும் செம்பொருள்என்றால் இறைவன்அல்லது மெய்ப்பொருள்என்று பொருள் கூறுவர். பிறவியாகிய இழிவிலிருந்து விடுபடவேண்டுமாயின்

8. திருவருட்பா. அருட்பெருஞ்சோதி அகவல் –985

இறைவனைக் காணவேண்டும். இறைவனைக் காணும் அறிவே வள்ளுவர்கூறும் மெய்ப்பொருள் அறிவாகும். கற்றறிந்த அறிவின் பயனாகக் கடவுள்வாழ்த்திலும் (குறள்–2) வள்ளுவர் கூறிய இம் மெய்யறிவையே வள்ளலார்,

அருளறிவு ஒன்றே அறிவு; மற்றெல்லாம்
மருளறிவு என்றே வகுத்த மெய்ச்சிவமே[8]

திருவருட்பா– அருட்பெருஞ்ஜோதி அகவல் –985

என்று குறிப்பிடுவார். வள்ளுவரின் அறிவு பற்றிய கோட்பாடுகளைப் பின்வருமாறு வரிசைப்படுத்தலாம்.

1. தொடர்ந்து கற்பது, கற்றதைப் பிறருக்கு எளிமைப்படுத்தி உரைப்பது ஆகியன அறிவுப் பெருக்கத்திற்கு வழிகோலும்.
2. ஒருவனது இனத்தியல்பாலும் அறிவு பெருகும்.
3. நூலறிவைக் காட்டிலும், ஒருவனுக்கு இயல்பாக அமையும் உண்மை அறிவே வலிமையுடையதாகும்.
4. ஒருவனைத் தளர்ச்சியில் தாங்கி, அழிவிலிருந்து மீட்கும் ஆற்றல் மிக்க கருவி அறிவாகும்.
5. அறிவு ஒருவனை நல்வழிப்படுத்தும். புலனொழுக்கமும் அடுத்தவர்க்கு நன்மை செய்வதும் அறிஞரின் அடையாளமாகும்.
6. உலக மக்களோடு ஒட்டி வாழும் அறிவே உயர்ந்த அறிவு
7. ஊருக்கு உதவும் ஒப்புரவாளனே பேரறிவாளன் ஆவான்.
8. ஒருவனது அறிவுடைமை உலகமக்கள் உவக்கும் பொதுவுடைமை ஆகிவிடும்.
9. மெய்ப் பொருளைக் கண்டுணரும் சிறந்த அறிவால் பிறவியாக இழிவிலிருந்து நம்மை மீட்டுக் கொள்ளலாம்.

5. வள்ளுவரும் கம்பரும்



முனைவர். ஜே. ரோசுலெட்

எம்.ஏ.,பி.எட்.,பிஎச்.டி.,
தமிழ்த்துறை.

வள்ளுவர் உலகப் பேரறிஞர். கம்பர் உலகப்பெருங் கவிஞர். உலகில் அறம் தழைக்க வள்ளுவர் அறக்கருத்துக்களை எழுசீர்களில் குளிகையாக்கினாரென்றால் கம்பரோ அம்மருந்தினைக் கற்பனையில் குழைத்துக் கதை அமுதமாக்கித் தந்துள்ளார். திருக்குறள், கம்பராமாயணம் எனும் இருபடைப்புக்களுக்கும் இடையேயுள்ள கால இடைவெளி நீண்டதாயினும் கம்பர் முன்னோர் மொழிப்பொருளைப் பொன்னேபோல் போற்றியுள்ள திறம் சிறந்துள்ளது.

மொழியாலும் இனத்தாலும் நிலத்தாலும் ஒன்றுபட்டுக் காலத்தால் வேறுபட்ட கவிஞர்களே திருவள்ளுவரும் கம்பருமாவர். எனினும் திருக்குறளுக்கு இலக்கியமாகக் கம்பராமாயணம் திகழுகிறது எனக் கூறின் மிகைமொழியன்று.

கம்பராமாயணத்தில் பல இடங்களில் திருக்குறளின் ஆளுமை ஒளிர்வதைக் காணலாம். சொல்லாகத்,தொடராகக், கருத்தாக, உவமையாகத் திருக்குறள் ஆட்சி பெற்றுள்ளது. கம்பர் காப்பியக் கருத்திற்கேற்பக் குறள் மாற்றம் செய்து பெய்திருப்பதையும் கற்காலம்.

உடம்பும் உயிரும்

உடம்பொடு உயிர் ஒன்றினால்தான் உலகில் உயிர்கள் வாழமுடியும். எழுத்துக்களின் தன்மை பற்றிப் பேசும்போது,

உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே

நன்னூல் – 204

எனப் பவணந்தியார் மொழிவர். நட்பு நிலையினை வள்ளுவர்,

உடம்பொடு உயிரிடை யென்னமற் றன்ன
மடந்தையொடு எம்மிடை நட்பு.

குறள்–1122

எனத் தலைவன் கூற்றாக உரைத்துப் போவார். மலைவளம் கண்டுமீண்ட இராம சீதையரின் உளமொத்த நிலையினை,

ஒருவருக் கொருவர் ஊனும் உயிரும் அனையர்

கம்ப–966

எனமொழிவார் கம்பர்.

திருவள்ளுவர் காட்டும் காதல் உறவு, உடம்பிற்கும் உயிருக்கும் உள்ள தொடர்பு போன்றது. கம்பர், உயிர் போல்வார் யார்? உடல்போல்வார் யாரெனக் கூறின் அவர்களின் கருத்தொருமித்த காதலின் தன்மை கெடும் என்பதால் ஊனும் உயிரும் அனையர் என மொழிந்து போந்தார். இக்கூற்றால் தலைவிக்குத் தலைவன் உயிராகவும், தலைவனுக்குத் தலைவி உயிராகவும் இருப்பாள் எனக்கொண்டு இருவரின் கருத்தொருமித்த காதலை நிறுவுவார் கம்பர். வள்ளுவரோ உடம்பொடு உயிர் எனவும் மடந்தையொடு எம்மிடை நட்பு எனவும் கூறி உடம்பு மடந்தையையும் உயிர் தலைவனையும் உணர்த்துவதாகக் குறிப்பார். உடம்பொடு உயிர் ஒன்றினால் தான் இன்பநுகர்ச்சி அடைய

இயலும் என்பதனைப் புலப்படுத்தவே வள்ளுவர் ஒடு உருபு புணர்த்துக் கூறியுள்ளார் எனக் கருத இடமுண்டு. கம்பரின் "ஊனும் உயிரும் அனையர்" என்ற தொடர் திருக்குறளுக்கு உரையாக அமைந்துள்ளது எனக் கூறும் க. தண்டபாணி தேசிகர் கருத்தும் ஈண்டு நினையத்தகும்.

வினைப்பயன்

வினைப்பயனே மனிதனின் உயர்வு தாழ்வுகளை வெளிப்படுத்தும் அளவுகோல். இதனை,

பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக் கல்.

குறள்–505

என்பார் வள்ளுவர். இக்கருத்தைக் கம்பர் தாரைப் புலம்பலில் காட்டுவர். சான்றோரின் பெருமையையும் சிறுமையையும் வெளிப் படுத்தும் செயல்திறம் இராமனிடம் திறம்பியதோ என ஐயுற்ற தாரை,

தருமம் பற்றிய தக்கவர்க் கெல்லாம்
கருமம் கட்டளை என்றல் கட்டதோ

கம்ப – 4214

என மொழிகின்றாள். இராமன் வாலியை மறைந்து நின்று கொன்றான். அறநாயகனான இராமன் அறநெறி பிழைத்தான் என்பதனைத் தாரையால் நம்பமுடியவில்லை. தருமநெறி பிழையாப் பெரியோர்கள் சொல் ஒன்றாகவும் செயல் ஒன்றாகவும் செய்வார்களோ என்ற ஐயம் அவள் சிந்தனையில் தோன்ற வாலி வதம் காரணமாகிறது. அதனால் தான், இராமன் செயற்பாட்டில் 'கருமம் என்பது கட்டுக்கதையானதோ?' எனத் தாரை மனம் எண்ணுகின்றது. அறநெறி பிழைத்தான் இராமன் எனச் சொல்ல அவள் மனம் விழையாமை எண்ணி வியக்கத் தக்கதாகும்.

பெருமைக்கும் சிறுமைக்கும் வினைப்பயன் காப்பாவது போல அவரவர் வினைவழியே ஆக்கமும் அழிவும் ஏற்படுகின்றன. இவ்வாக்கம் அறத்தின் வழியே தோன்றுதல் வேண்டும்.

அறத்தின் வழி தோன்றா ஆக்கம் கேடு நல்கும்.

அறத்தினூஉங்கு ஆக்கமு மில்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு.

குறள் – 32

என மொழிவர் வள்ளுவர். வாலி இறந்த பின் இராமன் சுக்கிரீவனுக்கு முடிசூட்டினான். குரக்கினமாதலின் அவன் செய்கை திறம்புதல் கூடும். விலங்கினமாயினும் ஆட்சிப் பொறுப்பில் இருப்பவன் அறம் திறம்புதல் கூடாது. அறமும் பாவமும் எதிரெதிர் முரணும்போது அரசன் அறத்தினையே பற்றுதல் வேண்டும்.

ஆக்கமுங் கேடுந்தாஞ்செய் அறத்தொடு பாவமாய
போக்கிலே றுண்மை தேறார் பொருவரும்
புலமை நூலோர் கம்ப – 4231

எனச் சுக்கிரீவனுக்கு அறிவுறுத்தினான் இராமன். திருவள்ளுவர் அறத்தை மறத்தலினால் கேடு விளையும் என அறிவுறுத்தக் கம்பர், சான்றோர் அறத்தை நீக்கிய பாவச் செயல் செய்யார் என மொழிகின்றார். இங்குத் திருவள்ளுவர் கருத்தினைக் கம்பர் பொன்னேபோல் போற்றிக் காத்தமையை அறிக.

நிலத்தியல்பால் நீர்திரிதல்

நிலத்தியல் பால் நீர்திரிதல் இயல்பு. இதனைச் செம்புலப்பெயல் நீர் எனச் சங்க இலக்கியம் மொழியும். *சீதையை* இராவணன் சிறை கொண்டதால் இராம இராவணப் போர் மூண்டது. தொடர்ந்து ஆறு மாதமாகத் துயின்று வரும் கும்பகருணனைப் போரில் வெற்றி பெறும் முனைப்புடன் எழுப்பினான் இராவணன். தூக்கத்திலிருந்து "சானகி துயர் தவிர்ந்திலையோ" என வினவிக் கொண்டே எழுந்த கும்பகருணன் அண்ணன் இராவணனுக்கு அறிவுரை கூறினான். அவன், முக்கோடி வாழ்நாளும் முயன்றுடைய பெருந்தவமும் கொண்ட இராவணனின் புகழ் *சீதையால்* நிலத்தின் இயல்பால்

நீர்திரிவது போலவாகும் என்றான். இதனைக் கம்பர்,

நிலத்தியல் நீரியல் என்னும் நீரதால்

கம்ப.–7480

என்பார். நிலத்தின் இயல்பால் நீர் திரிவதுபோல இராவணனின் தீயகுணம் அவன் வெற்றித்திறன் குன்றி அழிவதற்குக் காரணமாயினமையைக் காட்டுவார் கம்பர்.கம்பரின் இவ்வாட்சி,

நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு.

குறள்–452

எனும் குறட்பாவின் ஆளுமையாகும்.

நோயும் மருந்தும்

மனிதனை நொய்மைப் படுத்துவது நோய். (நொய்மை– துன்பம்) அது மனிதனைப் பிணித்துத் துன்புறுத்துவதால் பிணியாகும். சங்ககாலத்தார் துன்பம் தருவன அனைத்தையும் நோய் என்றனர். காதலும் நோயாகக் கருதப்பட்டமை வள்ளுவத்தின் வழி அறிய முடிகின்றது.

பிணிக்கு மருந்து பிறமன் அணியிழை
தன்னோய்க்குத் தானே மருந்து.

குறள்–1102

என மொழிவார் திருவள்ளுவர்.

காம நோய்க்கு அந்நோய் தோன்ற கடைக்கண் காட்டிய காதலியே மருந்தாவாள். பிறன்மனை நயந்த இராவணன், சீதையை எண்ணி எண்ணி ஏங்கிப் புலம்பினான். அவன் புலம்பல், இந்திரன் அகலிகையை விரும்புங்கால் அவள் அவன் விருப்பினை ஏற்றுத் தானும் இன்புற்று அவனுக்கும் இன்பம் தந்தாள் என்றும் அது குற்றமாகாததைப் போல நீயும் எனக்கு இரங்குவாய்;

இன்பம் தருவாய் என்றும் பலவாறாக அமைந்தது. அவன் காமநோய் நீக்க,

மந்திரமில்லை வேறோர் மருந்தில்லை மைய நோய்க்குச்
சுந்தரக் குமுதச் செவ்வாய் அமுதலால் அமுதச் சொல்லீர்

கம்ப–7777

எனக் கூறித் தன் குறை இரந்து நின்றான்.

இல்லறத் தலைவியரும் தலைவனைப் பிரிந்த நிலையில் அவன் வரவு நோக்கியும் கூடி இன்பமடையவும் மருந்து வேண்டி நிற்பர். இதனைச் சீதை இராமன் பிரிவில் கம்பர் அழகாகக் காட்டுவார்.

இலங்கையில் சிறையிருந்த செல்வி சீதை இராமனின் பிரிவுத்துயரால் வாடினாள். அவ்வருத்தத்திற்குக் காமநிலை காரணம் இல்லையெனினும் கணவனைக் காணும் எண்ணத்தில் தோன்றியது என்பதில் ஐயமில்லை. சங்க இலக்கியம் துன்பத்தை நோயெனக் குறித்தது போலவே கம்பரும் சீதையின் பிரிவுத்துன்பத்தை நோயாகவே காட்டினார். சீதையின் பிரிவு வருத்தமாகிய நோய்க்கு இராமனின் வரவே மருந்தாகும். அவ்வரவு எப்போது நிகழும் என்பதனை அறியாது மயங்கிய சீதை,

யான் கொண்ட நோய்க்கு மருந்து முண்டுகொல்

கம்ப–5189

என ஐயவினா எழுப்பினாள். இங்குச் சீதைக்கேற்பட்ட நோய் இராமனின் பிரிவுத் துயரால் ஏற்பட்டதாகும்.

அணியிழையரால் ஏற்பட்ட நோய்க்கு அணியிழையரே மருந்து என வள்ளுவர் கூறக் கம்பரோ மையல் நோய்க்கு அம்மையலைத் தோற்றுவித்த அணியிழையரின் வாய் அமுதமே மருந்து எனக் காட்டினார். இராவணனுக்குச் சீதையை அடைய முடியாது எனும் தன்மையால் அவள் வாய் அமுதமே அவன் கொண்ட நோய்க்கு மருந்து எனக் கூறும் மொழி பிதற்றலாகும்.

காதல்நோய் கொண்டவருக்குப் பெண்கள் மருந்தாகி நிற்கப், பிரிவு நோய்க்கு மருந்தில்லை என்றும் தன் பிரிவுத்துயர் எத்தகு மருந்தினாலும் நீக்க வொண்ணாது என்பதனை "மருந்துமுண்டு கொல்" எனும் கேள்விக்கணையால் சீதை குறிப்பிட்டுள்ளது சிறப்பாகும். காணலும் கூடலும் பிரிவு நோயின் குன்றா மருந்தாகும் என்பதே சீதையின் கேள்விக்குப் பதிலாகும்.

ஒழுக்கம்

மனிதனை மனிதனாகக் காட்டுவது ஒழுக்கநெறி. ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் என்பார் வள்ளுவர். ஒழுக்கத்தின் மாண்பினை உரைப்பது எளிது. அதனை நடைமுறைப்படுத்துவது அரிது. வள்ளுவர்,

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்.

குறள் – 664

என்பார். இக்குறளினைக் கம்பர் இராமனின் ஒழுக்க நிலைக்கு எடுத்துக் காட்டுவார். வாலி இறந்தான்; சுக்கிரீவன் முடி புனைந்து கொண்டான். அரசனான சுக்கிரீவன் இராமனைத் தன் இருப்பிடத்திற்கு அழைத்தான். பதினான்காண்டுகள் பூழி வெங்கானம் நண்ணிப் புண்ணியத் துறைகள் ஆடி வருவதாகத் தாயிடம் இசைத்து வந்த இராமன் சுக்கிரீவன் அழைப்பை ஏற்றுச் செல்வ வாழ்க்கை வாழ மறுத்தான். இதனையே கம்பர் 'ஒழுக்கநிலை மாறுபடாதவன் இராமன்' எனக் காட்டுவார்.

உரைசெயற் கெளிதுமாகி யரிதுமா மொழுக்கி னின்றான்

கம்ப – 4242

என்பது கம்பநாடன் மொழி. வனவாசம் ஏற்பதும் விரதங்கள் நோற்பதும் மிகவும் அரிய செயல்கள். இராமனோ அவற்றை நாளும் தவறாது எளிமையாக ஓம்பி ஒழுகி வந்தான். அதனாற்றான் அரிய செயல்களையும் எளிதில் செய்யும் ஆற்றலன் இராமன் என அவன் ஒழுக்க மேம்பாட்டை அழுத்தமாகக் குறித்துக் காட்டினார் கம்பர்.

இங்கு வள்ளுவர் மொழியையே ஊன்றுகோலாகக் கொண்டு காப்பியத்தை நடத்திச் சென்றுள்ளார் கம்பர்.

இடனறிந்து செய்க

இராவணன் சீதையை மனச் சிறையில் கரந்த காதலாலும் அவளை இலங்கை மாநகர அசோகவனத்தில் சிறைவைத்ததாலும் இராம இராவணப்போர் தவிர்க்க முடியாததாயிற்று. இலங்கையின் எல்லைப் புறத்திலுள்ள பாடி வீடு நோக்கி அடைக்கலமாக வந்தான் வீடணன். பகைவனின் தம்பியை அடைக்கலமாக ஏற்க மறுத்த சுக்கிரீவன் தன் உள்ள ஓட்டத்தை இராமனிடம் சிறிது சிறிதாக வெளிப்படுத்தினான்.

இராவணன் சீதையைக் கவர்ந்ததும் வீடணன் அடைக்கலமாக வந்திருப்பானாயின் அவன் மெய்ப்பொருள் நாடி வந்ததாக எண்ண இடமுண்டு. மாறாக இலங்கையை நாம் நெருங்கியதும் அடைக்கலமாக வந்துள்ளமையால் அவன் அடைக்கலம் மெய்யா? அன்றி உளவு நோக்குடையதா? என்ற ஐய போக்கினை மெல்ல அறிவுறுத்தினான் சுக்கிரீவன். இதனைக் கம்பர்,

இடனிது காலமீ தென்ன எண்ணுவான்

கம்ப –6548

சுக்கிரீவன் என அவன் குணமாண்பைக் காட்டுவார். கம்பச் சுக்கிரீவன் சிறந்த சூழ்நிலை ஆய்வாளன் என்பதையே இந்நிகழ்வு காட்டுகின்றது.

காலமும் இடனும் அறிந்து செய்யும் செயல்கள் வெற்றியடையும். இதனையே வள்ளுவர் தெரிந்து செயல்வகை என்னும் அதிகாரத்தில்,

ஞாலம் கருதினும் கைகூடும் காலம்
கருதி இடத்தாற் செயின். குறள் –484

எனக் கூறுவார். எச்செயலையும் எண்ணித் துணிந்தாலும் காலமும்

இடனும் அறிந்து செய்யின் உலகினையே தன் வயப்படுத்தி விடலாம் என்ற வள்ளுவரின் குறள் சிந்தனையினை மனங்கொண்டே கம்பர் சுக்கிரீவனை "இடனிது காலமீதென எண்ணுவான்" எனக் கூறும் நயம் நனி சிறந்ததாகும்.

விருந்தோம்பல்

சங்ககாலத்தில் பெரிதும் போற்றப்பட்ட பேறம் விருந்தோம்பலாகும். தொல்காப்பியர் "விருந்தே தானே புதுவது கிளந்த யாப்பின் மேற்றே" என மொழிவார்.

அன்பும் அறனும் அறிவும் பண்பும் பூண்ட இல்லாளால் இல்லறம் நல்லறமாகும். வள்ளுவரும்,

அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

குறள் – 45

எனச்சொல்வர். இல்லறச் சிறப்பு விருந்தோம்பலிலேயே செறிவடையும். விருந்தோம்பல் இல்லறத்தின் தலையாய அறமாகும். இதனால்தான் வள்ளுவப் பெருந்தகை,

இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு

குறள் – 81

என்பர். மோப்பக்குழையும் அனிச்சமன்ன விருந்தினரைப் பேணும் பண்பினை வள்ளுவர் ஓரதிகாரம் முழுமையும் ஓதுவார். கம்பர் கோசல நாட்டு வருணனையில் விருந்தோம்பலின் மாட்சியை மாண்புறுத்துவர்.

வருந்தி வந்தவர்க்கு ஈதலும் வைகலும்
விருந்து மன்றிவிளைவன யாவையே? கம்ப – 67

என்ற வினா கம்பரின் கைவண்ணம். விருந்தோம்பல் சமுதாயத்தின்

சிறந்த கடனாக இருந்ததை விருந்தினரைப் பேணமுடியா அசோகவனச் சீதை வாயிலாகவும்,

அருந்தும் மெல்லடகு ஆரிட அருந்தும் என வருநதும்
விருந்து வந்தபோது என்னுறுமோ எனவிம்மும்

கம்ப–5083

எனக் காட்டுவார் கம்பர். சீதை மொழி இல்லறத்தாரின் தலைமைப் பண்பையும் விருந்தோம்பும் மாண்பையும் வள்ளுவ நெறியால் உணர்த்துகின்றது.

மகன் தந்தைக் காற்றும் உதவி

மனித இனம் சிறந்து வளரக் குழந்தைகளே செல்வமாகும். இல்லறம் குழந்தைச் செல்வத்தாலேயே நிறை வெய்துகின்றது. பெற்றோருக்கு மழலை இன்பமே சிறந்த இன்பமாகும். மக்களைப் பெற்ற பெற்றோரே முழு வாழ்வை அடைந்தவராவர்.

குழலினிது யாழினி தென்பதம் மக்கள்
மழலைச் சொல்கேளா தவர்.

குறள்–66

என்பது வள்ளுவர் வாக்கு. இம்மழலையர் சான்றோனாக வளர்கின்றபோது பெற்றோர் அடையும் இன்பத்திற்கு ஈடேது?

ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச்
சான்றோன் எனக்கேட்ட தாய்.

குறள்–69

என வள்ளுவரும் மழலையர் சான்றோராகுங்கால் பெற்றோரடையும் மகிழ்வினைப் புலப்படுத்துவர். ஐயிரு திங்கள் அங்கமெல்லாம் நொந்த வருத்தம் தாய்க்குக் குழந்தையைக் கண்ட மாத்திரத்திலேயே தீயுள்தூசாகும். அதனினும் பேரின்பம் அக்குழந்தையைச் சான்றோன் எனப் பல்லோரும் தக்கோரும் புகழ்தலாலேயே தோன்றும். கம்பர்

இக்குறள் நெறிகளை யெல்லாம் தம்காப்பியத்தில் பலபட விதந்தோதுவர்.

குழந்தைப் பேறில்லாத் தசரதன் இராமன் பிறந்தவுடன் அடைந்த மகிழ்வினை,

மைந்தரை இன்மையின் வரம்பில் காலமும்
நொந்தனன் இராமன் அந்நோயை நீக்குவான்
வந்தனன். கம்ப - 1339

எனக் கூறுவார் கம்பர்.

மிதிலையிலிருந்து வரும்போது பரசுராமனின்செருக்கடக்கி அவனை வென்று நின்ற வீரனாக இராமனைக் கண்ட தசரதன் ஈன்ற ஞான்றினும் மகிழ்ந்தான். அம்மகிழ்வைக் கம்பர்,

பரிவுஅறு சிந்தை அப்பரசு ராமன்கை
வரிசிலை வாங்கிஓர் வசையை நல்கிய
ஒருவனைத் தழுவிநின்று உச்சிமோந் துதன்
அருவியம் கண்ணெனும் கலசம் ஆட்டினான்.

கம்ப-1305

என்றும்

மெய்ம்மை இச்சிறுவனே வினைசெய் தோர்களுக்கு
இம்மையும் மறுமையும் ஈயும் என்றனன்.

கம்ப-1306

என்றும் பலவாறு தசரதன் மொழியில் காட்டுவர்.

குழந்தையாகவும் வீரனாகவும் இராமனைக் கண்ட தந்தை தசரதன், வசிட்ட முனிவனின் வாயிலாகவும் அவன் பெருமையைக் கேட்டறிந்தான். இராமனின் பெருமையினைக் குலக்குரு வசிட்டன்,

மண்ணினும் நல்லள் மலர்மகள் கலைமகள் கலையூர்
பெண்ணினும் நல்லள் பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்
கண்ணினும் நல்லன் கற்றவர் கற்றிலா தவரும்
உண்ணும் நீரினும் உயிரினும் அவனையே உவப்பார்

கம்ப–1352

எனப் போற்றி உரைத்தான்.

மற்றவன் சொன்ன வாசகம் கேட்டலும் மகனைப்
பெற்ற அன்றினும் பிஞ்ஞகன் பிடித்த அப்பெருவில்
இற்ற அன்றினும் எறிமழு வாளவன் இழுக்கம்
உற்ற அன்றினும் பெரியதோர் உவகையன் ஆனான்.

கம்ப–1354

எனக் காட்டுவார் கம்பர்.

ஈன்ற பொழுது தோன்றும் மகிழ்வினையும் சான்றாண்மையைக் கண்ட மகிழ்வினையும் விடச் சான்றோன் வாயிலாகச் சான்றோன் எனக் கேட்ட தசரதத் தந்தையின் மனநிலையை முன்னோர்களினின்றும் கம்பர் படைத்த நேர்த்தி சிறப்பாக உள்ளது.

காலத்தால் வேறுபட்ட இரு கவிஞர்களும் உள்ளங்களால் ஒன்றி நின்றமை அவர்களின் படைப்புக்கள் வழி வெளிப்படுகின்றன. படைப்பாளி என்பவர் சமூக அங்கத்தினர். அவர்களிடம் கால வேறுபாடுகள் இருப்பினும் அவ்வச் சமுதாயச்சூழ்நிலைக்கு ஏற்ப அவரவர் இலக்கியத்துள் கருத்துக்களும் தொடர்களும் ஒன்றுபட்டுள்ளன. முன்னோர் மொழிப் பொருள்களும் முனைப்போடு ஆளப்பட்டுள்ளன என்பனவும் தெளிவுறும்.

6. திருவள்ளுவர் என்ற மனிதர்



முனைவர். ந. முருகேசபாண்டியன்
எம்.ஏ.,எம்.ஃபில்., எம்.எல்.ஐ.எசி., பிஎச்.டி.,
நூலகர்.

திருவள்ளுவர் நினைவாகக் குமரிமுனையில் 133 அடியில் பிரமாண்டமான சிலை நிறுவி, அவரைப் போற்றுவதற்கு மூல காரணமாக இருப்பது திருக்குறளாகும். திடீரெனத் திருக்குறளுக்குப் பல மட்டங்களிலும் முக்கியத்துவம் தரப்படுகிறது. அதற்கான காரணங்கள் சமூக அடிப்படையிலானவை. புற நெருக்கடியினால் தமிழானது முன்னை விட சிக்கலுக்குள்ளாகியுள்ளது. வெறுமன கவர்ச்சிகரமாகத் தமிழைப் புகழ்ந்திட்ட நிலைமாறித், தமிழரின் வாழ்வையும், தமிழ்மொழியையும் அடையாளப்படுத்தவேண்டிய தேவையேற்பட்டுள்ளது.தகவல் தொடர்பு ஊடகங்கள், உலக நிதி நிறுவனங்களின் ஆளுமை காரணமாகத் தமிழரின் வாழ்வியல் நிலை பெரும் மாற்றத்திற்குள்ளாகும் வேளையில் தமிழை உயர்த்திப்பிடிக்கத் திருக்குறள் முதன்மைப் படுத்தப்படுகிறது. திருவள்ளுவரை ஞானி, மகான், சித்தர், தெய்வப்புலவர் எனவும் திருக்குறளை உலகப் பொது மறை எனவும் முன்னிலைப்படுத்தும் நிலை தோன்றியுள்ளது. நடைமுறையில் திருக்குறள் என்ற இலக்கியப் பிரதியின் சாரம் என்ன? திருவள்ளுவரின் இடத்தைத் திருக்குறள் மூலமாக மதிப்பிட வேண்டிய தேவையேற்பட்டுள்ளது.

மனிதன் தனது சக மனிதரிடம் தொடர்பு கொள்ளும்போது, பின்பற்றவேண்டிய நியதிகளை / ஒழுக்கத்தைத் திருவள்ளுவர் 2660 வரிகளில் வலியுறுத்துகிறார். அவை அவரது சமூக அனுபவங்களின் செறிவாகும். சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுக வேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு நெறிமுறைக்கும் ஏதோ ஒரு வகையில் தத்துவப் பின்புலம் உள்ளது. திருக்குறளை வெவ்வேறு சமயத்தவரும் தமது சமயத்தைச் சார்ந்த இலக்கியமாக உரிமை கொண்டாடுகின்றனர். ஒப்பீட்டளவில்[1] திருக்குறளைச் சமண இலக்கியம் என்று கருதலாம். எனினும் திருக்குறள் பிரதியானது சமயத்தைப் பொறுத்தவரை பொது நிலையினையே வலியுறுத்துகின்றது.

திருக்குறள் இரண்டாயிரமாண்டுகளாகத் தொடர்ந்து வாசிக்கப்படுவதன் விளைவுதான் இன்றுவரை தோன்றும் நூற்றுக்கணக்கான உரையாசிரியர்களும் அவர்களது மாறுபட்ட விளக்க உரைகளும் ஆகும். அறக் கருத்தினை முதன்மைப்படுத்தும் பல்வேறு அற நூல்கள் வழக்கொழிந்திட்ட நிலையில் அற இலக்கிய நூலான திருக்குறள் தொடர்ந்து தமிழரிடையே செல்வாக்குப் பெற்றிருப்பதற்கான காரணங்கள் நுணுக்கமானவை யாகும். திருக்குறள் எழுதப்பட்ட சம காலத்திய அரசியல், சமூக நிலைமைகளைச் சித்திரித்தாலும், தனிமனிதனுக்கும் சமூகத்திற்குமிடையிலான அடிப்படை உறவை முதன்மைப் படுத்துவதால் அது காலங்கடந்து வாசிக்கப்படுகிறது.

சங்ககாலத் தமிழரின் வாழ்க்கையானது இனக்குழு மக்களின் புராதன வாழ்க்கை முறையாகும். இயற்கை வழிபாடு, முன்னோர்வழிபாடு, குலச்சின்ன வழிபாடு போன்ற வழிபாட்டு முறைகள்மக்களிடையே வழக்கிலிருந்தன.[2] சங்க இலக்கியப் படைப்புக்களினூடே 'ஒழுங்கு' வலியுறுத்தப்பட்டது. இனக் குழுவின் நலன் முதன்மைப் படுத்தப்பட்டுள்ளது. சமண பௌத்தத் துறவிகளின் தமிழக வருகைக்குப் பின்னர் அறத்தினை வலியுறுத்தும் போக்கு ஏற்படுத்தப்பட்டது. வைதீக இந்து சமயத்தினர் உழவுத் தொழிலை இழிவாகக் கருதிய நிலையில் சமண சமயம் உழவைப் போற்றியது. மேலும் அது வணிகர்களின் நலனையும் உயர்வாக மதித்தது. சமூகத்தில் பொருளியல் நிலையில் ஏற்றத் தாழ்வாக மனிதர்கள் வாழும் நிலையில், சமூக அடுக்கின் சமனற்ற நிலையினை நியாயப்படுத்தும் வகையில் சமண பௌத்தத் துறவிகளால் அற நூல்கள் எழுதப்பட்டன. இன்று வரை தொடர்ந்து எழுதப்படும் அறநூல்களில் திருக்குறள் மட்டும் தனிச் சிறப்புடையதாகத் தனித்து விளங்குவதற்கான காரணங்கள் ஆழமானவையாகும். திருக்குறள் பிரதி காலந்தோறும் மாறிவரும் சமூக மதிப்பீடுகளுக்கேற்பப் பொருந்துவதாக இருப்பதன் மூலம் தனது இடத்தைத் தக்க வைத்துக் கொண்டுள்ளது. இன்றைய நவீன சிந்தனைகளுக்கு முரண்படும் வகையிலான கருத்துக்களும் திருக்குறளில் உள்ளன. எடுத்துக்காட்டாகப் பெண் பற்றிய திருவள்ளுவரின் கருத்துகளைப் பெண்ணியவாதிகள் கடுமையாக மறுத்துரைக்கின்றனர். எனினும் திருக்குறள் முன்வைக்கும் அடிப்படைக் கருத்துக்கள், கெட்டித் தட்டிப் போன மனித இருப்பைக் கேள்விக் குள்ளாகின்றன. உயிரோட்டமிக்க சொல் பாடலுக்கு இடம் தருவதன் மூலம் திருக்குறள் இன்றும் செயலுக்கானதாக உள்ளது.

திருவள்ளுவரின் சொந்த வாழ்க்கை குறித்துச் செவி வழிச் செய்தியாக வழங்கி வரும் கதைகள் முக்கியத்துவம் இல்லாதனவாகும். திருவள்ளுவரை மாபெரும் ஞானியாகவும், ஒப்புயர்வற்ற தீர்க்கதரிசியாகவும், தெய்வப்புலவராகவும், அய்யனாகவும் போற்றித் துதி பாடும் போக்கு இன்று வலுவடைந்து உள்ளது. திருவள்ளுவருக்குத் தரப்படும் இறைவனுக்கு நிகரான மதிப்பீடுகள், ஒரு வகையில் திருக்குறளுக்குப் பிரச்சனையைத் தரக்கூடியன. திருக்குறள் என்ற இலக்கியப் பிரதியானது திருவள்ளுவர் என்ற தமிழ்ப் புலவரால் கவித்துவத்துடன் எழுதப்பட்டது என்பதுதான் உண்மை. திருவள்ளுவர் என்ற மனிதரின் பன்முகத் தன்மையான பார்வையின் விளைவு தான் திருக்குறள் என மதிப்பிடவேண்டும். திருவள்ளுவருக்குத் தரப்படும் அளவுக்கதிகமான 'புனித' மரியாதையானது திருக்குறள் என்ற வாழ்வியல் நூலை மக்கள் அன்றாட வாழ்வில் சாதாரணமாகப் பயன்படுத்துவதைத் தடுத்து விடும். திருக்குறளை 'வேத நூல்' என ஒதுக்கி வைத்து வழிபாட்டு நூலாக்குவது திருவள்ளுவருக்குச் செய்யப்படும் பெரிய துரோகமாகும். நடைமுறை இல்லாத தத்துவம் மலட்டுத்தனம் என்ற நோக்கில் ஆராய்ந்தால் திருக்குறளை வாசிப்பதும் அது முதன்மைப்படுத்தும் அறக்கருத்துகளைப் பின்பற்றுவதும் தான் முக்கியமானவை. திருக்குறளை நுணுகி ஆராய்ந்தால் மனித வாழ்க்கையின் சகல விருப்பு வெறுப்புகளுக்கும் மிக்கவராகத் தான் திருவள்ளுவர் காட்சி அளிக்கின்றார். திருவள்ளுவர் மனிதர் என்பது அவருக்கு இழுக்குத் தரும் விஷயமன்று. திருவள்ளுவர் அடிப்படையில் புலவர் அல்லது

கவிஞர் என்பது தான் உண்மை. திருவள்ளுவரின் அறக்கருத்தியல் நோக்கினுக்கு முக்கியத்துவம் தரப்படும் வேளையில், அவரது கவித்துவ வீரியம் பலராலும் போற்றப்படாத நிலையே உள்ளது. குறளின் அழகையும் கவிதை வெளிப்பாட்டு நிலையையும் ரசிக்காத போக்கு ஒரு வகையில் திருவள்ளுவர் என்ற கவிஞருக்குச் செய்யப்படும் அநீதியாகும்.

சமூக மனிதன் வாழ வேண்டிய நெறி முறைகளைச் சுட்டுவதற்காக எழுதப்பட்ட குறளை ஆராய்கையில் திருவள்ளுவரின் இன்னொரு முகத்தை அறிய முடிகிறது. யாராலும் அணுக முடியாத மகானாக உயர்த்தப்பட்ட திருவள்ளுவர் சாதாரண மனிதராக நம்மிடையே காட்சியளிக்கிறார். அஃது அவரது இன்னொரு பரிமாணம் ஆகும்.

கல்வியின் சிறப்பை வலியுறுத்தும் திருவள்ளுவர், அதன் தேவைகளை எடுத்துரைப்பதுடன் நில்லாமல் எதிர்மறையாகக் கூறுவதுதான் இங்கு முக்கியமானதாகிறது.

கண்ணுடையர் என்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லா தவர்.[3]

கல்லாதவன் முகத்திலிருப்பது கண் அல்ல. புண் எனத் திருவள்ளுவர் திட்டுகிறார். கண்ணின் செயல்பாடு கற்றல் என்பதனை வற்புறுத்த விரும்பிய வள்ளுவர், கண்ணைப் புண் என இடித்துரைப்பது, அவரது தனி மனித அக்கறையின் விளைவாகும். கல்லாதவனை விலங்கு[4] எனக் குறிப்பிடுவது இங்கு ஒப்பு நோக்கத்தக்கது. கற்றோர் முன்னால் கல்லாதவன் பேச முயலுவது

முலையில்லாத இளம் சிறுமி காம வயப்பட்டது[5] போல எனக் கடுமையாகக் கூறும் திருவள்ளுவரை முற்றும் துறந்த துறவியாகக் கருதுவது ஏற்புடையதாக இல்லை. திருவள்ளுவருக்குத் தான்வாழும் சமூகத்தின் மீதான கூடுதல் அக்கறையினால் இத்தகைய சொற்களைப் பயன்படுத்தியுள்ளார். சுரணையற்றுக் கெட்டியாகிப் போன மனிதனின் சமநிலையைக் குலைத்துக் கலகம் செய்வது தான் திருவள்ளுவரின் நோக்கமாக உள்ளது. இதனால் தான் பிறரிடம் அரிய விஷயங்களைக் கேட்டு ஆராய்ந்திடும் மனப்பான்மையற்றவன் செத்தாலும் வாழ்ந்தாலும் என்ன[6] எனக் கோபத்துடன் நம்மை நோக்கிக் கேள்வியெழுப்புகிறார். அவரது காலத்தில் கல்வி குறித்து அக்கறையற்ற பொதுப்புத்தி நிலவிய சூழலில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டிய கடமை திருவள்ளுவருக்கு இருந்திருக்கிறது. அவ்வடிப்படையிலேயே தனது அனுபவ அடிப்படையிலான கருத்துகளைப் பாமரனாக் விளங்கிய பெரும்பான்மை மக்களிடம் தெரிவித்திடக் கடுமையாகத் திட்டவும் செய்துள்ளார் திருவள்ளுவர். இஃது எதிர்மறையாக மனிதனை நெறிப்படுத்தும் போக்கு ஆகும்.

அன்பிலாதவர் உடம்பானது என்பு தோல் போர்த்தியது[7] எனவும் கண்ணோட்டம் இல்லாத கண்கள் வெறும் புண்கள் [8] எனவும், கண்ணோட்டமில்லாதவர் மரத்திற்கு ஒப்பாவர்[9] எனவும் திருவள்ளுவர் முன் வைக்கும் கண்டனங்கள் சமூக அழுக்கு நீங்குவதற்காகச் சொல்லப்பட்டவையாகும். திருவள்ளுவர் சினந்து, மக்களைக் கண்டிப்பது அவரது நடைமுறை வாழ்க்கை கற்றுத் தந்த கசப்பான அனுபவங்களின் விளைவு என்று தான் கருத வேண்டியுள்ளது.

மானம் இழந்தவர்மயிரனையர்[10] என்ற குறள்வரிகள், மதிப்பு இழந்த மனிதனைக் கேவலமாகச் சித்திரிக்கின்றன. மானம் என்பதற்கான தெளிவானவரையறைகள் இல்லாத நிலையில், இன்று பொது வாழ்வில் நடைபெறும் சம்பவங்களைஅவதானிப்பது சிக்கலாகிறது. ஒரு அரசியல் கட்சியிலிருந்து சில மூத்த தலைவர்கள் பிரிந்த போது, அதன்செயலாளர் அவர்களைஉதிர்ந்த மயிர்எனவருணித்தது இங்கு ஒப்புநோக்கத்தக்கது.

உணவுக்காகப் பிற விலங்குகளைக் கொல்லும் போது ஏற்படும் வெட்டினைப் புண்[11] என இழிவாகக் குறிப்பிடுவதுடன் உயிர்க் கொலை செய்பவரைப் புலைத் தொழில் செய்பவர்[12] என்று திருவள்ளுவர் குறிப்பிடுவது ஆய்விற்குரியதாகும்.

புலால் மறுத்தலை அறமாக வலியுறுத்தும் சமணசமயக்கருத்தினைக் குறளாக்கியுள்ள திருவள்ளுவரின் நோக்கத்தினை நம்மால் அறிய முடிகிறது. எனினும் இறைச்சி உணவு உண்பவரைப் புலையர் எனத் திட்டுவது இன்றைய நிலையில் பொருத்தமுடையதன்று. உலக உயிர்கள் மீதான அன்பின் காரணமாகவே, உயிர்களைக் கொல்பவரைத் திருவள்ளுவர் இழிவாகத் திட்டியுள்ளார். இத்தகைய திட்டுதலைத் தொடர்ந்து செய்யும் திருவள்ளுவரை முற்றும் கடந்த முனிவர் எனப் புனிதப்படுத்துவது அவருக்குப் பெருமை சேர்ப்பதாகாது.

கூடா ஒழுக்கம் என்ற தலைப்பில் 'மழித்தலும் நீட்டலும்வேண்டா'[13] என்று அவற்றைப் புறவேடங்களாகக் கருதிப் புறந்தள்ளும் துணிவு திருவள்ளுவருக்கு உண்டு. சமண சார்புடைய திருவள்ளுவருக்குத் 'துறவு வேடம்' குறித்து எதிர்ப்புக் குரல் இருப்பது வியப்பாக உள்ளது. உலகம் பழிக்கும் செயல்களைச் செய்யாதிருத்தலே அறமென முதன்மைப் படுத்தும் திருவள்ளுவர், மனிதனுடன் நெருங்கியிருப்பதன் அடையாளம் தான் இது போன்ற குறள்கள் ஆகும்.

திருக்குறள் என நினைக்கும்போது அறத்துப்பால் பொருட்பாலுக்குத் தரப்படும் முக்கியத்துவம் காமத்துப் பாலுக்குப் பொதுவாகத் தரப்படுவதில்லை. மனித வாழ்க்கையின் முக்கிய அம்சமாகக் காதலையும் ஆண்பெண் உறவையும் கருதியமையால் தான் திருவள்ளுவர் காமத்துப்பாலை எழுதியுள்ளார். காதல், காதலர் மனநிலை என விரியும் காமத்துப் பாலினை வாசிக்கையில் திருவள்ளுவரின் பன்முக அம்சங்களை அறிந்து கொள்ள முடிகிறது. காதலின் ஆழத்தை அற்புதமாக எடுத்துரைப்பதுடன் காதலின் இன்பத்தை இரசனையுடன் குறிப்பிடும் திருவள்ளுவரைக் காதலில் துறைபோகியவர் என்று தான் குறிப்பிட வேண்டியுள்ளது. காதலைச் சுவராசியப் படுத்தும் இன்றைய புதுக் கவிஞர்களுக்கெல்லாம் முன்னோடியாகத் திருவள்ளுவர் விளங்குகிறார் என்பது அவரது குறள் மூலம் அறிய முடிகிறது. குறுகிய வரிகளில் காதல் வாழ்க்கையின் மேன்மையைச் சொல்லியுள்ள திருவள்ளுவரைத் துறவி எனச் சட்டமிடுவது பொருந்துவதாக இல்லை. ஆணும் பெண்ணும் ஒருவரையொருவர் விரும்பி அன்பு கொண்டு வாழும் வாழ்க்கையின் மேன்மையினை விளக்குவதில் திருவள்ளுவர் உச்சமாக உள்ளார். சங்க காலத்தில் வாழ்வின் பகுதியாகக் கருதப்பட்ட பரத்தையரை வரைவின் மகளிர் என ஒதுக்குவதுடன் பரத்தையருடனான உடலுறவு இருட்டறையில் பிணம் தழுவியது போல என [14] இழிவாகத் திருவள்ளுவர் குறிப்பிடுவது அவரது அறச்சிந்தனையின் உயரிய வெளிப்பாடாகும். ஆண் பெண் காதல் வாழ்க்கையை மிக உயர்வாகச் சித்திரிக்கும் திருவள்ளுவர், பரத்தமை உறவைத் திட்டுவது, அன்றைய கால கட்டத்தில் பெருங் கலகமாகும். சமூகத்தில் பொது வழக்காக நிலவும் மதிப்பீடுகளுக் கெதிராகத் துணிந்து மாற்றுக் கருத்துகளை முன் வைக்கும் திருவள்ளுவரைக் கலகக்காரராகவும் நம்மால் அடையாளம் காணமுடிகிறது.

சமூக அக்கறையுள்ள திருவள்ளுவர் தான் வாழ்ந்த சமகாலச் சமுதாயம் குறித்த தனது கருத்துக்களைத் துணிந்து கவிதைகளாக வடிவமைத்துள்ளார். அவை வேதம், இதிகாசம், புராணம், உபநிடதம் போன்று அதியற்புதமான (!) கருத்துக்களை முன் வைப்பன அல்ல. ஒரு சராசரி மனிதன், தனது நடைமுறை வாழ்க்கையில் முயன்றால் பின்பற்றக்கூடிய நெறிகளே திருவள்ளுவர் வலியுறுத்துவனவாகும். திருக்குறளின் சாரம், அன்றைய கால கட்டத்தில் மிகவும் துணிச்சலுடன் கெட்டிதட்டிய சமூகத்தின் மீது வீசப்பட்ட கல்லாகும். அவற்றுள் சில இன்றைய சமுதாயத்திற்குப் பொருத்தமற்றும் வழக்கொழிந்து போயினும், குறளின் ஒட்டு மொத்தப் போக்கு நவீன வாசிப்பில் புதிய அர்த்தங்களைத் தந்து காலங்கடந்து நிற்கிறது. சராசரி மனிதனைப்போலக் கோபம், வெறுப்பு, அன்பு, தோழமை, காதல், எரிச்சல் எனப் பல்வேறு அம்சங்களையும் குறளில் வெளிப்படுத்தியுள்ள திருவள்ளுவரைத் தெய்வ நிலைக்கு உயர்த்துவது பொருந்தாது. திருக்குறளைப் பரந்துபட்ட நிலையில் மக்களிடம் கொண்டு செல்வது நமது நோக்கமெனில் அதனை நடைமுறை வாழ்க்கைக்கான நூலாக மக்களிடம் அறிமுகப்படுத்த வேண்டும். தந்த கோபுரத்தின் உச்சியிலிருக்கும் யாருக்கும் விளங்காத தத்துவங்களின் செறிவு என்பது போன்ற பார்வை திருக்குறளுக்குப் பெருமை சேர்க்காது. திருக்குறள் தொடர்ந்து மக்களிடையே வாசிப்பதற்கும் பின்பற்றப்பட வேண்டிய அறநூலாகவும் விளங்க வேண்டுமெனில் அதைப் புனிதப்படுத்திப் பூசையறைப் பொருளாக மாற்றிவிடக் கூடாது. தமிழரிடையே திருக்குறள் தொடர்ந்து வழக்கிலிருப்பது அவசியமெனில் திருவள்ளுவருக்குக் கூடுதலாகத் தரப்படும்

ஒளிவட்டங்களும் தெய்வீகத் தன்மைகளும் தேவையற்றவையாகும். திருவள்ளுவர் என்ற மனிதரின் செறிந்த வாழ்க்கையனுபவங்கள் கவித்துவமிக்க வலிமையாக வெளிப்படுகின்றன. திருக்குறள் நூலானது மனித வாழ்க்கை குறித்த ஆழமான கேள்விகளைத் தொடர்ந்து எழுப்புவதன் மூலம் காலங்கடந்து வாசிக்கப்படுவதே அதனுடைய சிறப்பினுக்குச் சான்றாகும்.

சான்றாதாரங்கள்

1. மயிலை சீனி. வேங்கடசாமி, சமயங்கள்வளர்த்த தமிழ் (சிதம்பரம் : மணிவாசகர் நூலகம், 1966), பக். 56–63.
2. வீரா. அழகிரிசாமி, தமிழக வரலாற்றில் சமயப் பூசல் (மதுரை: காந்தி மீடியா சென்டர், 2000), பக். 43–44.
3. மதுரை இளங்குமரனார் (உ–ஆ) திருக்குறள் (சென்னை: வர்த்தமானன் பதிப்பகம், 1999), பா.எண். 393.
4. மேலது, பா.எண். 410.
5. மேலது, பா.எண். 402.
6. மேலது, பா.எண். 420.
7. மேலது, பா.என். 80.
8. மேலது, பா.எண். 575.
9. மேலது, பா.எண். 576.
10. மேலது, பா.எண். 964.
11. மேலது, பா.எண். 257.
12. மேலது, பா.எண். 329.
13. மேலது, பா.எண். 280.
14. மேலது, பா.எண். 913.

7. வள்ளுவரின் காமத்துப்பால்



முனைவர் க. கனகராசு
எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்.டி.,
தமிழ்த்துறை.

இலக்கியம் சமுதாயத்திலிருந்து முகிழ்ப்பது; அது சமுதாயத்தைப் பிரதிபலிக்கும் காலக் கண்ணாடியாய்த் திகழ்வது என்பர் திறனாய்வாளர்கள். மனிதன் என்பவன் தனித்திருந்து வாழும் ஒருவன் அல்லன்; அவன் சமுதாயத்தின் ஒரு அங்கம். எனவே அவனால் அவன் வாழும் சமூகமே சித்திரிக்கப்படும்.

பொதுவாகப் படைப்பாளர்கள் தாம் வாழ்கின்ற சமூகம் இப்படி உள்ளது என்று கூறுவதுண்டு.. தாம் வாழும் சமூகம் இப்படி இருக்கவேண்டுமென்ற தம் எதிர்பார்ப்பை மொழிவதும் உண்டு. சில போழ்து சமூகத் தேவையை நிறைவு செய்வதாகவும், தொலை நோக்குச் சிந்தனை யுடையதாகவும், இலக்கியங்கள் படைக்கப் பெறுதல் உண்டு. அவ்வாறு படைக்கப் பெற்றவற்றுள் திருக்குறளும் ஒன்று.

தமிழ் இலக்கியங்கள் இவ்வாறு படைக்கப் பெற்றாலும், மிகப் பெரும்பான்மையானவை அவை தோன்றிய சமூக வெளிப்பாடாகவே அமைந்துள்ளன. தமிழ் இலக்கிய வரலாற்றைப் புரட்டுவோர் இதைத் தெளிவாக உணர்வர். இவ்வடிப்படையில் அறத்துப்பாலும், பொருட்பாலும் எழுதிய திருவள்ளுவரால் காமத்துப்பால் எழுதப்பெற்றதற்கான நோக்கத்தை ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

அறம், பொருள், இன்பம் என்று கூறுதலே முறையாதலால் 'இன்பத்துப்பாலே' சரியானது என்பர் சிலர். ஆனால் அறம், பொருள், இன்பம் என்று இணைத்துக் கூறும் பொழுது இன்பம் என்பது காமத்தைக் குறித்தாலும், பொதுவாக இன்பம் என்று கூறும்போது துன்பத்துக்கு மறுதலை என்ற பொருளையே குறித்தலைக் காணலாம். இதற்கு, அறத்தான் வருவதே இன்பம் (குறள்-39), மக்கள் மெய் தீண்டல் உடற்கின்பம் (குறள்-65), ஈத்துவக்கும் இன்பம் (குறள்-228), இன்பம் ஒருவற்கு இரத்தல் (குறள்-1052) என்பன சான்றாகும்.

காமமும் இன்பமும் வெவ்வேறு பொருளுடையன என்பதற்கு ஊடுதல் காமத்திற் கின்பம் (குறள் -1330) என்று வழங்குதல் காணுதற்குரியது. வள்ளுவர் காமத்துப் பாலில் காமம் என்ற சொல்லை 38 இடங்களில் ஆள்கின்றார். கமம் நிறைந்தியலும் என்பது தொல்காப்பியம். கமம் முதனீண்டு காமம் என்றாயிற்று என்பர் அறிஞர் இரா. சாரங்கபாணி. இதற்கு அன்பு நிறைந்தியல்வது என்று பொருளுரைக்கலாம். இன்பம் என்பது பல்வகை இன்பத்திற்கும் பொது. எனவே இன்பத்துப்பால் என்பதனினும் காமத்துப்பால் என்பதே பொருத்தமுடையது.

தொல்காப்பியர் பாலுறவைக் காமக்கூட்டம் (தொல்-களவு.1.) என்றும் தலைவனைக் காமக் கிழவன் என்றும் கூறுவர்.

காமம் காமம் என்ப காமம்
அணங்கும் பிணியும் அன்றே, நுணங்கிக்
கடுத்தலும் தணிதலும் இன்றே: யானை
குளகுமென் றாள்மதம் போலப்
பாணியும் உடைத்து காணுநர்ப் பெறினே.

குறுந்–136

என்னும் மிளைப்பெருங்கந்தனாரின் குறுந்தொகைப் பாடல் காமம் என்பதற்கு, உரியவரைக் காணின் வெளிப்படும் செவ்வி என்று பொருள் தருகிறது. இவரின் இன்னொரு பாடல் (குறுந் 204) நினைப்பினால் புதிய இன்பத்தைத் தர வல்லது காமம் என்று பொருள் தரக் காணலாம். காமம் என்ற சொல்லுக்கு,

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார்.

குறள்–1289

என்னும் குறள் உயர்வானது, மென்மையானது என்று பொருள் கொள்ள இடம் தருகிறது.

உயர்வானஉணர்ச்சியைச்சொல்லப் பயன்படுத்தப் பெற்ற காமம் என்பது பின்னாளில் உடலைப் பொருத்தது உடல் ஒன்றுவது பெண்ணின்பம் இழிவுதருவது விலங்குணர்ச்சியது என்ற நிலைக்குத் தள்ளப்பட்டது. எனவே வள்ளுவர் காமதததுப்பால் பாடியதற்குரிய காரணத்தை அறிய அவரின் காலச்சூழலை ஆய்வது ஒரு வகையில் பயன் நல்கும்.

சங்க கால இலக்கியங்களின் பாடு பொருள்களையும், பாடும் முறையையும் பாடல் நெறிகளையும் ஆய்ந்து பார்க்கும் பொழுது அந்த இலக்கியங்கள் திருக்குறளுக்கு முற்பட்டவை என்பதை உணரலாம்.

அறக்கருத்துக்களை உயிர்க் கருத்தாகக் கொண்டு பாடல் புனையும் முறை சங்ககாலத்திற்கு உரியதன்று. வாழ்வியல் உண்மைகளோடு அறக் கருத்துக்களை இலைமறைக் காயாக வைத்துப் பாடப்பெறும் மரபே சங்க இலக்கியப் பாடுநெறி மரபாகும்.

இன்பமும் பொருளும் அறனு மென்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை

தொல்– களவு.1.

என்ற சிந்தனையோட்டம் இருந்தும், இலக்கியப் பாடு பொருள்களை அகம் புறம் என்ற இரண்டனுக்குள்ளும் அடக்கிக் காட்டும் புலநெறி வழக்கே சங்க காலத்திற்குரியது. சங்கப்பாடல்கள் பெரும்பாலும் அகவல் யாப்பின.

தமிழ் இலக்கிய வரலாற்றை ஆராயும்பொழுது அறக் கோட்பாடுகளை வலியுறுத்தவே இலக்கியம் படைக்கும் புது மரபு சங்கம் மருவிய காலத்தில் தோன்றியதை அறியலாம். இக்காலத்தில் அறம் பொருள் இன்பம் வீடு என்று பாடும் புது நெறியும் தோன்றலாயிற்று. இக்காலப் பாடல்கள் வெண்பா யாப்பின.

திருக்குறளின் வெண்பா யாப்பும், அறம் பொருள் காமம் என்ற அமைப்பு முறையும், அறம் பாடுவதற்கென்றே எழுதப் பெற்றது போன்ற படைப்பு முறையும் இந்நூல் சங்க காலத்திற்குப் பிந்தையது என்றுணரச் செய்கின்றன.

திருக்குறள் எழுதப் பெற்ற காலத்தில், தமிழகத்தில் மூவேந்தர்களின் ஆட்சி செல்வாக்கிழந்து போயிற்று; ஆட்சிக் குழப்பம் நிலவியது; தெளிவான அரசியல் சூழல் இல்லாத நிலை உருவாயிற்று. அந்தக் காலகட்டத்தில் தமிழ் மண்ணில் சமணமும் பௌத்தமும், சைவ வைணவங்களைப் புறங்கண்டு ஓங்கி நின்றன. இவை, தமிழ் மண்ணின் புறத்தே இருந்து இங்கு வந்து காலூன்றி வளர்ந்தது நினைவு கொள்ளத் தக்கது. இம்மதங்களின் செல்வாக்குப் பெருகியதால் இல்லற நெறி பழிக்கப் பெற்றது. மாறாகத் துறவறம் போற்றப்பட்டது.

இல்லறத்தின் தலைவியாக இருந்த பெண், ஆணை வீடுபேறடைய விடாமல் தடுக்கும் தடைக்கல்லாகக் கருதப்பட்டாள். துறவே வாழ்வியல் நெறி என்றும் வீடுபேறே ஒருவன் அடைய வேண்டிய குறிக்கோள் என்றும் வலியுறுத்தப்பட்டன. அதற்காகக் கடுந் தவம் இயற்ற வேண்டும், புலனுகர்வுகளை விட்டொழிக்க வேண்டும் என்று அறிவுறுத்தப் பெற்றன.

இதுவோ அன்னாய் காமத் தியற்கை
இதுவே யாயின் கெடுக தன் திறம்.

மணிமேகலை – 90,91

என்று ஓதப்பட்டது. இக்கோட்பாடுகளை வலியுறுத்த வேண்டி அறநூல்கள் மிகுதியாக எழுதப்பெற்றன.

இத்தகு காலத்தில்தான் திருவள்ளுவர் காமத்தைப் பாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. இம்மதங்கள் செல்வாக்குப் பெறுவதற்கு முந்தைய தமிழகத்தில் இல்லறமே நல்லறம் எனப் போற்றப்பட்டது. தமிழர்கள் இல்லத்திலிருந்தே இனியன செய்தனர். அந்தணர் ஓம்பல் முதலான நற்செயல்கள் கூட இல்லத்தில் இருந்தே செய்யவேண்டும் என்ற நிலையிருந்தது. இல்லறத்தில் இருந்து மகப்பேறு பெற்றவனே,

இம்மை யுலகத்து இசையொடும் விளங்கி
மறுமை உலகமும் மறுவின்று எய்துப.

அகம் – 66

என்ற கருத்தாக்கமே தமிழர் நிலை.

எனவே தமிழர் இனிதெனப் போற்றி வந்த இல்லறம் மேற்கண்ட மதக் கொள்கைகளால் நலிவதையும், அதன் உயிர் நாடியான வாழ்க்கைத் துணைநலம் பழிக்கப்படுவதையும் தடுத்து நிறுத்தும் நோக்கிலேயே திருவள்ளுவர் இல்லறவியலைப் பாடுகிறார்.

இல்லறம் அகம் புறமென்று இரு திறத்தது; அகம் இல்லத்தின் பண்பு; புறம் அதன் பயன். அகமாவது ஒருவனும் ஒருத்தியும் மனதளவில் உய்த்துணரக் கிடக்கும் உணர்வான காதலும் காமமும். பண்டைத் தமிழரின் அக வாழ்க்கை முறை இனியது மட்டுமல்ல, இவ்வுலகிற்கு மிக இன்றியமையாததுமாகும். பொன்னையும் பொருளையும்விட மக்களுக்குப் பேரின்பம் தருவது. நச்சினார்க்கினியரும் அகமாவது ஒருவனும் ஒருத்தியும் கூடுகின்ற காலத்துப் பிறந்த பேரின்பம் என்று கூறுவர்.

வள்ளுவரின் காமத்துப்பால் இல்வாழ்க்கை வாழும் ஆண் பெண் இருவரின் மிக நுட்பமான அக மனஉணர்வுகளைப் புலப்படுத்துகிறது. பிற சமண பௌத்த அறநூல்கள் இல்லறத்தை இகழ அதன்பால் மனம் செலுத்துவோருக்கு அதன் சிறப்பை உணர்த்த வேண்டிய தேவையும் அவருக்கு ஏற்படுகிறது. அதனாலேயே துறவறவியலில்

எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு.

குறள்–355

என்று கூறுவது இங்குச் சிந்திப்பதற்குரியது. அறிவுடைமை என்று ஒரு தனிஅதிகாரமே எழுதியும் அறிவு பற்றி இங்கே, இப்படி ஏன் கூறவேண்டும்? பிறர் கூறும் துறவு நெறியின் வன்மை மென்மைகளை ஆய்ந்துணர வேண்டும் என்பதற்குத்தான். மேலும் துறவறப்பகுதியில் ஓரிடத்தில்கூட பிறரைப்போல இல்லறத்தைப் பழிக்காததும் எண்ணற்குரியது. எனவே தமிழர் இல்லறத்தின் மிகச் சிறந்த பண்பான அகத்தின் சிறப்புணர்த்தவே காமத்துப்பாலை வள்ளுவர் பாடியிருக்கவேண்டும்.

அறத்துப்பால் இல்வாழ்க்கை, துறவு வாழ்க்கை ஆகிய இரண்டன் அறமுணர்த்துவது. காமத்துப்பால் இல்லறத்தின் சிறப்புணர்த்துவது. எனவே இல்லறம் சிறப்புற அமைவதற்குப் பயிற்சிக் களமான காமத்துப்பாலைத் தனியொரு பிரிவாகப்பாடுகிறார்.

அறனெனப்பட்டதே இல்வாழ்க்கை என்று முழக்கமிடுகிறார். அஃது அன்பும் அறனும் உடையதாய்த் திகழவேண்டும் என்கிறார்.

இல்லத்திலுள்ள — பெண் — வாழ்க்கைத் துணைநலம் என்று போற்றப்பட்டாள். மேலும் அவள்,

இல்லதென் இல்லவள் மாண்பானால் உள்ளதென்
இல்லவள் மாணாக் கடை.

குறள்–53

என்று புகழப்பட்டாள். இதன்பயனாகப்,

பெறுமவற்றுள் யாமறிவ தில்லை அறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற.

குறள்–61

என்று மக்கட்பேற்றையும் வலியுறுத்தினார்.

சமண பௌத்த மதங்கள் கூறிய தவநெறி, உயரிய நெறியாக அற்றைக்காலத் துறவிகளால் எடுத்துரைக்கப்பட்டது. எனினும், அவை இம்மண்ணில் வாழையடி வாழையாய் நடந்துகொண்டிருந்த இல்லறம் என்னும் நல்லறத்திற்கு இடையூறானது. அதன் விளைவாகவே திருவள்ளுவர் பண்டு தொட்டுத் தமிழ் கூறு நல்லுலகில் இருந்துவரும் இல்லறப் பண்பாட்டைப் போற்றிப் பாதுகாக்கக் காமத்துப் பாலைப் பாடியிருக்கவேண்டும். அதற்கான சான்றாதாரங்கள் அதனுள்ளேயே மலிந்து கிடக்கின்றன.

ஒருவன் ஒருத்தியைக் கண்டு அணங்குகொல் ஆய்மயில்கொல் என்று மருள்வதும், அவள் குறிப்பறிந்து கூடுவதும்; பின் அவளை மணத்தலும், பொருளின் இன்றியமையாமையை எண்ணிப் பிரிதலும்; அதற்காக இருவரும் ஆற்றாது வருந்துதலும்; அவர்களின் கண்கள் ஒருவரை ஒருவர் காண விரும்புதலும்; இருவரும் நெஞ்சொடு பேசுதலும்; பின் இருவரும் கூடிமகிழ்தலும் என்று காமத்துப்பாலை இவர் 25 அதிகாரங்களாக அமைத்திருக்கும் விதமே ஒருவனும் ஒருத்தியும் நடத்தும் இல்லறத்தைக் காட்டும்.

காமத்துப்பாலில் பெண்களைத் திருவள்ளுவர் போற்றியிருக்கும் அழகும் பெண்ணினத்தைப் புகழ்ந்திருக்கும் பெற்றியும் எண்ணி எண்ணி வியக்கத்தக்கவை.

வீடுபேற்றினால் பெறும் இன்பம், செய்த அறத்தின் பயனாய் விளைவது; செய்த அறம் உள்ளளவும் தொடர்வது. மனையாள் தரும் இன்பம் அன்பால் விளைவது; இறப்புவரைத் தொடர்வது. எனவே வீடுபேற்றினும் சிறப்புடையது பெண்ணின்பம் என்பார் வள்ளுவர்.

தாம்வீழ்வார் மென்தோற் றுயிலின் இனிதுகொல்
தாமரைக் கண்ணான் உலகு. குறள் – 1103

என்பது அக்குறள். இல்லத்தின் நீங்கி உடல் வருத்தித் தவம் இயற்றிப் பெறும் வானுலக இன்பத்தை விட இனிமையானது காதலியின் மெல்லிய தோளில் கிடந்து உறங்குவதாகும் என்பது அவர் கருத்து. பதடி வைகலார் என்னும் புலவரும் காதலியின் தோளில் தோய்ந்து துயிலப்பெறாத நாட்கள் வீணான நாட்கள் (குறுந்–323) என்றல் காணத்தக்கது. ஐம்புலன்களும் ஒரே நேரத்தில் இன்பம் நுகர்வதற்குரிய பொருளாக அமைந்திருப்பவள் காதலி (குறள்–1101). அத்தகு காதலியைத் தீண்டிப் பெறும் இன்பம் அமிழ்தத்திற்கு ஒப்பானது

(குறள்–1106). அவள் மெல்லிய தோளில் கிடந்து பெறும் இன்பம் தாமரைக் கண்ணான் உலகினும் சிறந்தது (குறள்–1103) இத்தகைய தலைவியுடனே வீட்டில் இருந்து கொண்டு தன் உழைப்பால் ஈட்டிய பொருளைத் தென்புலத்தார், தெய்வம், விருந்து, ஒக்கல் தான் என்று பகுத்துண்டு வாழ்தலுக்கு இணையான வேறு இன்பம் உலகில் இல்லை (குறள்–1107) என்றெல்லாம் திருவள்ளுவர் தெரிவிப்பதன் மூலம் இல்லறம் இனிய அறம் அதனினும் சிறந்த நல்லறம் உலகில் வேறில்லை என்று வலியுறுத்தவே அவர் காமத்துப்பால் எழுதியிருக்கவேண்டும் என்ற முடிவுக்கு வரலாம்.

நல்லதொரு வாழ்க்கையை வாழ்வதற்கான பயிற்சிக்களமாகவே காமத்துப்பால் திகழ்வதை ஆழ்ந்து கற்பார் தெளிவர்.

ஒருதலையான் இன்னாது காமம் காப்போல
இருதலை யானும் இனிது.

குறள்–1196

என்று காதலன் காதலி இருவருக்கும் உரிய இல்லறப் பொறுப்பைக் கூறுகிறார்.

எழுதுங்கால் கோல்காணாக் கண்ணேபோல் கொண்கன்
பழிகாணேன் கண்ட விடத்து.

குறள்–1285

என்று குற்றம் பார்க்காத பண்பாட்டு வாழ்க்கையைப் புலப்படுத்துகிறார்.

துனியும் புலவியும் இல்லாயின் காமம்
கனியும் கருக்காயு மற்று.

குறள்–1306

என்று கூடல் இன்பத்தை மிகுவித்தற் பொருட்டு உணவில் உப்பின் அளவினதாகக் காதலரிடையே சிறு சிறு பூசல் ஏற்படின் தவறன்று என்று நெறிப்படுத்துகின்றார்.

எனவே மனைவெறுப்பு, மனைவி வெறுப்பு, மக்கள் வெறுப்பு இவைகளை நீக்கி இல்லறத்தை விருப்புடன் ஏற்றுக் கொள்ளத் தூண்டுவதே காமத்துப்பால் செய்யும் நற்பணியாகும்.

ஆண் மகன் ஒருவன் இல்லறத்தில் மட்டுமே மனம் செலுத்தவேண்டும் என்பதால், பிறன்மனை நயத்தலையும் பரத்தமையையும் அவர் கண்டித்தலும் நோக்கத்தக்கன.

திருவள்ளுவர் துறவு நெறிக்கு விரோதியல்லர், தவநெறியை வெறுப்பாரல்லர். ஆனால் அவர் விரும்பும் துறவறம் இல்லறத்தின் முதிர்ச்சியாக விளையும் தமிழரின் துறவறமே அன்றி வேறில்லை. அதாவது,

காமஞ் சான்ற கடைக்கோட் காலை
ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே

தொல்–கற்பு–51

என்று தொல்காப்பியர் குறிப்பிடும் தமிழர் துறவே அவர் விரும்பியது.

திருவள்ளுவருக்கு இருந்த தமிழர்தம் இல்லற நெறியைக் காப்பாற்ற வேண்டும் என்ற பொறுப்புணர்வே அவர் அதன் சிறப்பை உணர்த்தும் காமத்துப்பால் எழுதக் காரணம் எனில் மிகையன்று.

8. திருவள்ளுவரும் இயமயோகமும்



முனைவர் நா. விஜயரெகுநாதன்
எம்.ஏ., எம்.பிஎட்., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உடற்கல்வி இயக்குநர்.

யோகம் என்னும் சொல் ஏகம் என்ற பழந்தமிழ்ச் சொல்லிலிருந்து தோன்றியதாகும். வட நூலார் யுக் என்ற வடசொல்லிலிருந்து தோன்றியதாகும் என்பர். யோகத்தைத் தோற்றுவித்தவர் இரணியக் கருப்பர். அதை முறைப்படுத்தி மக்களுக்குச் சேரும் வண்ணம் செய்தவர் பதஞ்சலி முனிவர். தமிழில் யோகத்தை உருவாக்கியவர் முதன்மை சித்தரான திருமூலர். யோகம் என்பதற்கு ஒருமுகப் படுத்துதல், இரண்டறக் கலத்தல் என்பன பொருளாகும். பதஞ்சலி முனிவர் யோகம் என்பதற்குச் சித்தத்தில் உள்ளவிருத்திகளை அடக்குதல் என்று பொருள் கூறுகிறார். சித்தத்தைச் சிவன் பால் வைத்திருத்தலும், சீவன் நாட்டம் கொண்டு புறப் பொருளோடு பொருந்துவதும் யோகமேயாகும் எனவும், புறத்தை நாடாமல் அகத்தை நாடிச் சிவனை அடைவதே சிறந்த யோகம் எனவும் விளக்கியுள்ளார் திருமூலர். யோக நிலையில் அட்டாங்க யோகம் சிறப்பு வாய்ந்தது. இதனைப் பதஞ்சலியும்

திருமூலரும் எட்டுப் படி நிலைகளாக விளக்கியுள்ளனர். அவைகளில் முதல் படியான இயமம் பற்றித் திருவள்ளுவர் கூறிய கருத்துக்களை இக்கட்டுரையில் ஆராய்வோம்.

அட்டாங்க யோகப் படிநிலைகள்

1. இயமம், 2. நியமம். 3.ஆசனம், 4. பிரணாயாமம், 5. பிரத்தியாகாரம். 6. தாரணை 7. தியானம் 8. சமாதி என்பன அட்டாங்க யோகத்தின் படிநிலைகளாகும். இவற்றுள் இயமம், நியமம் ஆசனம் பிரணாயாமம் என்பன அகம் புறம் என்னும் இரண்டையும் சார்ந்தனவாகும். பிரத்தியாகாரம் தாரணை, தியானம், சமாதி என்பன அகத்தை மட்டும் சார்ந்தனவாகும். முன்னால் கூறிய நான்கும் பின்னால் கூறப்பெற்ற நான்கிற்கும் உறுதுணையான நெறிகளாகும்.

இயமம் விளக்கம்

இயமம் என்பது தீயனவற்றுள் மனம் போகாமல் கட்டுப் படுத்துதல். திருமூலர் கொல்லாமை, பொய்யாமை, களவாமை, எண்குணம், அடக்கமுடைமை, நடுவு நிலைமை, பகுத்துண்ணல், மாசிலாமை, கள் குடியாமை, காமமின்மை என்பன இயமம் என்பார். இவைகளைப் பின்பற்றி வாழ்வோன் இயம வழியில் நின்றோனாகின்றான். அவனை இயமத்தன் எனத் திருமூலர் குறிப்பிடுவார். இதனைத் திருமூலர்,

கொல்லான் பொய்கூறான் களவிலான் எண்குணன்
நல்லான் அடக்கமுடையான் நடுசெய்ய
வல்லான் பகுத்துண்பான் மாசிலான் கட்காமம்
இல்லான் இயமத்திடையன் நின்றானே.

திருமந்திரம் – 554

எனக் கூறுகிறார்.

திருவள்ளுவரின் இயமக் கருத்துக்கள்

திருவள்ளுவர் திருக்குறளில் கூறியுள்ள மக்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்க நெறிகளைத் திருமூலர் அட்டாங்க யோகத்தில் இயமம் என்ற முதல் படி நிலையில் நன்கு விளக்கியுள்ளார். இயமம் பற்றித் தனியே கோட்பாடாக வரையறுத்தவர் திருமூலராவார். எனினும் அவர் வாழ்ந்த காலத்தை விட எட்டு நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த திருவள்ளுவர் எழுதிய திருக்குறளிலும் இயமம் பற்றிய கருத்துக்கள் பரவலாகக் காணப்பெறுகின்றன. அறக் கருத்தின் அடிப்படையிலான இயமம் திருக்குறளில் காணப்பெறுவது ஏற்புடையதே ஆகும். திருக்குறள் சுட்டும் இயமக் கருத்தினைத் தொகுத்துக் காண்பதன் மூலம் அறம் பற்றிய புதிய போக்கினை அறிந்து கொள்ளலாம்.

கொல்லாமை

திருவள்ளுவர் அட்டாங்க யோகத்திலுள்ள இயம யோகக் கருத்தான கொல்லாமையைப் பற்றிப் பல பாடல்களில் விரிவாகப் பாடியுள்ளார். இதனை அவர்,

அறவினை யாதெனின் கொல்லாமை கோறல்
பிறவினை எல்லாம் தரும்.

குறள் - 321

என்பர். அறச்செயல் எது என்றால் ஓர் உயிரையும் கொல்லாமையாம். கொலை செய்தல் பிற தீவினைகள் எல்லாவற்றின் பயனையும் ஒருங்கேதரும் எனக் கொல்லாமையைப் பற்றி விளக்கியுள்ளார். கொல்லாமையைக் கடைபிடித்து நடப்பவன் வாழ்நாள் மேல் எமன் நெருங்க மாட்டான் என்பதைத் திருவள்ளுவர்,

கொல்லாமை மேற்கொண்டு ஒழுகுவான் வாழ்நாள் மேல்
சொல்லாது உயிருண்ணும் கூற்று.

குறள் - 326

என அழகாக எடுத்துரைக்கிறார்.

தன் உயிர் போய்விடுவதாக இருந்தாலும் தான் பிறிதோர் உயிரை நீக்கும் செயலைச் செய்யக்கூடாது என்பதை அவர்,

தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை.

குறள்-327

எனக் கொல்லாமையைப் பற்றிக் கூறுகிறார்.

பொய்யாமை

திருவள்ளுவர் இயம யோகத்திலுள்ள பொய்யாமையைப் பற்றிப் பாடியுள்ளார். இதனைப்,

பொய்யாமை அன்ன புகழில்லை எய்யாமை
எல்லா அறமும் தரும்.

குறள் - 296

என்ற குறட்பா விளக்கும். பொய் சொல்லாமை அவனுக்கு எல்லா அறமும் கொடுக்கும் எனத் திருவள்ளுவர் பொய்யாமையை விளக்குகிறார். ஒருவன் பொய்யாமையாகிய அறத்தைத் தொடர்ந்து செய்ய வல்லவனாயின் அவன் பிற அறங்களைச் செய்யாதிருத்தலே நலம் என்பதைத் திருவள்ளுவர்,

பொய்யாமை பொய்யாமை யாற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.

குறள் - 297

எனப் பாடுகிறார். மேலும் அவர்,

எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு.

குறள் - 229

என்பர். துறவியற்குப் புறவிருள் போக்கும் விளக்குகள் எல்லாம் விளக்கு ஆகமாட்டாது. அக இருள் போக்கும் பொய்யாமை ஆகிய விளக்கே விளக்காகும் எனப் பொய்யாமையைப் பற்றி விளக்கியுள்ளார்.

களவாமை

திருவள்ளுவர் இயம யோகத்திலுள்ள களவாமையைப் பற்றி விளக்கியுள்ளார் இதனை அவர்,

எள்ளாமை வேண்டுவான் என்பான் எனைத்து ஒன்றும்
கள்ளாமை காக்கதன் நெஞ்சு.

குறள் - 281

எனப் பார்க்கிறார். கள்வன் என்று பிறரால் இகழப்படாமையை விரும்புகிறவன், எந்தப் பொருளையும் பிறரிடமிருந்து வஞ்சித்துக் கவரக் கருதாதவாறு தன் மனதைக் காத்துக் கொள்ள வேண்டும் என அழகாகப் பகர்கிறார்.

களவினால் உண்டான செல்வம் அளவு கடந்து வளர்வது போலத் தோன்றிக் கடைசியில் ஒன்றுமே இல்லாமல் அழிந்து விடும் என்பதைத் திருவள்ளுவர்,

களவினாலாகிய ஆக்கம் அளவுஇறந்து
ஆவது போலக் கெடும்.

குறள் - 283

எனக் கூறுகின்றார். களவினால் ஏற்படும் துன்பத்தை வள்ளுவர்,

களவின்கண் கன்றிய காதல் விளைவின்கண்
வீயா விழுமம் தரும்.

குறள் - 284

எனக் கூறுகிறார். இதனைத் திருவள்ளுவர் பிறர் பொருளைக் கவர்வதில் ஒருவருக்குள்ள மிகுந்த விருப்பம் அந்தக் கால கட்டத்தில் நலம் செய்வது போல் தோன்றினாலும் பிறகு பயன் கிடைக்கும் காலத்தில் தீராத துன்பத்தை உண்டாக்கும் எனக் களவாமையை நன்கு விளக்கியுள்ளார்.

எண்குணம்

திருவள்ளுவர் எண்குணத்தைப் பற்றிக் கூறியுள்ளார். இதனை அவர்,

குணநலம் சான்றோர் நலமே பிறநலம்
எந்நலத்து உள்ளதூஉம் அன்று.

குறள் - 982

என்பர். சான்றோருடைய நலமாவது குணங்களான நலமே. மற்ற உறுப்பு நலம், வேறு எந்த நலத்தோடும் சேர்ந்தது அன்று என எண்குணத்தை விளக்குகிறார். இது நமது கடமை என்று அறிந்து சான்றாண்மை மேற்கொண்டு நடப்பதற்கு நல்லவை எல்லாமே இயல்பான கடமையாகும் எனத் திருவள்ளுவர் விளக்குகிறார். இதனை அவர்,

கடனென்ப நல்லவை எல்லாம் கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு.

குறள் - 981

என விளக்குகிறார்.

திருவள்ளுவர் மேலும் ஐந்துவகையான நற்குணங்களை இப்பாடலில் விளக்குகிறார். இதனை அவர்,

அன்புநாண் ஒப்புரவு கண்ணோட்டம் வாய்மையொடு
ஐந்துசால்பு ஊன்றிய தூண்.

குறள் - 983

எனப் பாடுகிறார். எல்லாவிடத்தும் அன்பு, பழி, தீவினைகள் செய்யப் பின்வாங்கும் நாணமும் பிறர்க்கு உதவி வாழும் ஒப்புரவும் எளியவரிடம் காட்டும் சிறப்பு இரக்கமும் உண்மை உடைமையும் சான்றாண்மை என்னும் மண்டபத்தைத் தாங்கும் தூண்கள் ஐந்து என ஐந்து வகையான குண நலத்தை நன்கு விளக்கியுள்ளார்.

அடக்கமுடைமை

திருவள்ளுவர் அடக்கமுடைமையைத் தன் பாடல்களில்

சிறப்பாக விளக்கியுள்ளார். அதனை அவர்,

அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்.

குறள் - 121

என்று விரிவாகப் பாடியுள்ளார். இதனால் அடக்கமாகிய நற்பண்பு ஒருவனை உயர்த்தித் தேவருலகில் சேர்க்கும். அடங்காமை யாகிய தீய பண்பு ஒருவனைத் தாங்குவதற்கு அரிய இருள் உலகில் சேர்த்து விடும் என்று கூறுகிறார்.

திருவள்ளுவர் மற்றொரு பாடலில் அடக்கமுடைமையைச் சிறப்பாகப் பாடியுள்ளார். அதன் சிறப்பினைத் திருவள்ளுவர்,

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து.

குறள் - 126

என்னும் பாடலில் விளக்கியுள்ளார். ஒரு பிறப்பில் ஆமைபோல் ஐம்பொறிகளையும் அடக்கவல்லவன் ஆனால் அந்த வல்லமை அவனுக்கு ஏழுபிறப்பளவும் பாதுகாக்கும் சிறப்புடையது எனத் திருவள்ளுவர் கூறுகின்றார். நாவை அடக்கவேண்டும் என்பதைத் திருவள்ளுவர்,

யாகாவா ராயினும் நாகாக்கக் காவாக்கால்
சோகப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

குறள் - 127

என்ற பாடலில் பாடியுள்ளார். அவர் மக்கள் வேறு எவற்றைக் காக்காவிட்டாலும், நாவையாவது காக்க வேண்டும். காக்கத் தவறினால் சொற்குற்றப்பட்டுத் துன்புறுவர் என்று திருவள்ளுவர் விளக்குகின்றார்.

நடுவுநிலைமை

திருவள்ளுவர் நடுவுநிலைமைக்கு ஒரு அதிகாரமே

கொடுத்துத் தன்னுடைய கருத்தினை நன்கு வெளிப்படுத்தியுள்ளார். இதனைச்,

செப்பம் உடையவன் ஆக்கம் சிதைவின்றி
எச்சத்திற்கு ஏமாப்பு உடைத்து.

குறள் - 112

என்ற குறட்பா விளக்கும். நடுநிலைமை உடையவனது செல்வம் அழியாமல் நிலைத்து நின்று அவன் வழி வருவோர்க்கும் பாதுகாப்பாக அமையுமெனக் குறட்பாவில் பாடியுள்ளார். தான் சமமாக நின்று பின் தன்னிடத்து வைத்த பொருளின் எடையை உள்ளவாறு காட்டும் துலாக்கோல் போல மனத்தில் சமநிலையாக இருந்து ஒரு பக்கம் சாயாது உண்மையுரைத்தல் சான்றோர்க்கு அழகாம் என்பதைத் திருவள்ளுவர்,

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்துஒருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி.

குறள் - 118

எனப் பகர்கிறார்.

வள்ளுவர் மேலும் ஒரு பாடலில் நடுவுநிலைமையைக் குறட்பாவாகப் பாடியுள்ளார். இதனைச்,

சொல்கோட்டம் இல்லது செப்பம் ஒருதலையா
உள்கோட்டம் இன்மை பெறின்.

குறள் - 119

என்ற குறட்பா விளக்கும். சொல் கோணுதல் இல்லாதது நடுநிலைமையாகும். மனம் ஒரு பக்கமாகச் சாயாமையை முழுஉறுதியாகப் பெறுதல் அதாவது சொல்லின் நேர்மைக்கு அடிப்படை மனநேர்மை சொல் நேர்மை இரண்டும் உடைமையே நடுவுநிலைமை என வள்ளுவர் பாடியுள்ளார்.

பகுத்துண்ணல்

திருவள்ளுவர் பகுத்துண்ணலைப் பற்றி விளக்கியுள்ளார். இதனை அவர்,

பகுத்துண்டு பல்லுயிர் ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்லாம் தலை.

குறள் - 322

என்பர். கிடைத்ததைப் பகிர்ந்து கொடுத்துத் தானும் உண்டு பலவகை உயிர்களையும் பாதுகாத்தல் அற நூலார் தொகுத்த அறங்கள் எல்லாவற்றிலும் தலையானதாகும் எனப் பகுத்துண்ணலை நன்கு விளக்கியுள்ளார்.

மாசிலாமை

திருவள்ளுவர் மாசிலாமையைப் பற்றிக் கூறியுள்ளார். இதனை அவர்,

மனம்தூய்மை செய்வினை தூய்மை இரண்டும்
இனம்தூய்மை தூவா வரும்.

குறள் - 455

என விளக்குகிறார். மனத்தின் தூய்மை செய்யும் செயலின் தூய்மை ஆகிய இரண்டும், அவன் சேர்ந்த இனத்தின் தூய்மையை ஆதாரமாகக் கொண்டு தோன்றும் என மாசிலாமையைச் சொல்லியுள்ளார் திருவள்ளுவர்.

கள்குடியாமை

திருவள்ளுவர் கள் குடியாமையைப் பற்றி ஒரு அதிகாரம் முழுவதும் கூறியுள்ளார். இதனை அவர்,

உண்ணற்க கள்ளை உணில்உண்க சான்றோரான்
எண்ணப் படவேண்டா தார்.

குறள் - 922

எனக் கூறுகிறார். உயிரையும் மதிப்பையும் காத்துக் கொள்ள விரும்புபவர்கள் உண்ணக்கூடாது. சான்றோரால் மதிக்கப் படுவதை விரும்பாதவர் உண்ணலாம் எனக் கூறுகிறார். கள்ளுண்ணுதல் என்ற விரும்பத்தகாத பெருங்குற்றத்தைச் செய்தவர்க்கு நாணம் என்று சொல்லப்படும் நல்லவள் அவர் முகத்தில் விழிக்காது அருவருத்துப் புறங்காட்டி நிற்பாள் என்பத்தை வள்ளுவர்,

நாண்என்னும் நல்லாள் புறங்கொடுக்கும் கள்என்னும்
பேணாப் பெருங்குற்றத் தார்க்கு.

குறள் - 924

எனக் கள் குடிமையின் கெடுதலை நன்கு விளக்கியுள்ளார்.

காமமின்மை

திருவள்ளுவர் காமத்தின் தன்மையைப் பல பாடல்களில் விளக்கியுள்ளார். இதனை அவர்,

காமக்கடல் மன்னும் உண்டே அதுநீந்தும்
ஏமாப்புணை மன்னும் இல்.

குறள் - 1164

என்னும் குறட்பா விளக்கும். காமக்கடல் எனக்கு இருக்கவே இருக்கிறது. ஆனால் அதை நீந்திக்கடக்கும் பாதுகாப்பான தோணிதான் இல்லை எனக் காமத்தின் தன்மையை விளக்குவதற்காக இந்தப்பாடலை அமைத்துள்ளார் திருவள்ளுவர்.

காமம் என்னும் பெருவெள்ளத்தை நீந்திக் கரை காணவில்லை. அதனால் மற்றெல்லோரும் தூங்கும் நள்ளிரவிலும் அவ்வெள்ளத்திடையே நானே தன்னந்தனியாக இருந்து அலைக்கழிகின்றேன் என்பதைத் திருவள்ளுவர்,

காமக் கடும்புனல் நீந்திக் கரைகாணேன்
யாமத்தும் யானே உளேன்.

குறள் - 1167

என அழகாகக் கூறுகிறார்.

திருவள்ளுவர் மனிதன் சிறப்பாக வாழ்வதற்கு உரிய ஒழுக்க நெறி முறைகளை விளக்கியுள்ளார். அவை திருமூலரின் அட்டாங்க யோக முதல் படிநிலையான இயமத்தில் விளக்கப்பட்டுள்ளன.

9. வள்ளுவமும் கதைப்பாடல்களும்



முனைவர் தி. பூங்குன்றன்
எம்.ஏ., பி.எட்., பிஎச். டி.,
தமிழ்த்துறை.

கதைப் பாடலர்களின் புலமை வீச்சும் அறிவின் ஆற்றல்களும் வாய்மொழிப் பாடல்களில் பொதிந்து சிறக்கின்றன. கற்றலின் கேட்டலே நன்று எனும் செவிச் செல்வமே கதைப் பாடல்களின் வளர்ச்சிக்கும் நாட்டுப்புறப் பாடல்களின் மெருகிற்கும் நிலைபாட்டிற்கும் காரணமாகும். போலச்செய்தலை ஒரு வரன்முறையாகக் கொண்டு அதன்மேல் எழுப்பப்பட்ட காவியக் கோயில்களாம் கதைப்பாடல்கள் சமுதாயத்தின் சிக்கல்கள், நிகழ்வுகள், பயில் முறைகளை வெளிப்படுத்தும் இயல்போட்டங்களாய் உள்ளன.

இவ்வாறுதான் அமையவேண்டும் என வரையறுத்துப் பாடாது மலைவீழருவியாய்ப் படைப்பாளியின் வாயிலிருந்து வெளிப்படும் கதைப்பாடல்களுள் காணப்படும் கட்டுக் கோப்பை எண்ணின் மருட்கை தோன்றுகிறது. மருட்கைக்கு மருட்கை கூட்டும் நிகழ்வாகக் கதைப்பாடல்களுள் வள்ளுவம் மாண்புற வந்து புலப்பாட்டுச் செறிவோடு இழையோடுவதை உணர முடிகின்றது.

பாரதக் கதைப்பாடல்களில் துரியோதனனின் கீழ்மைக் குணத்தைச் சுற்றிப் பின்னப்பட்டது ஏணியேற்றம். அல்லியின் மகன் புலந்திரனைப் பற்றிப் பாடுவது புலந்திரன் களவுமாலை. பாண்டவர்களின் வனவாச நிகழ்வுகளே பஞ்சபாண்டவர் வனவாசம். இறுதியில் பாண்டவர்கள் வைகுந்தம் செல்லும் நெறிகளைக் காட்டுவது வைகுந்த அம்மானை. இந்நான்கு மகாபாரதக் கதைப்பாடல்களும் வள்ளுவத்தைக் கதை நிகழ்வோடு ஆண்டுள்ள திறம் ஆய்வுப் பொருளாகிறது. குறளாட்சி கதைப்பாடலர்களின் முந்து நூற்புலமைக்குச் சிறந்த சான்றாகக் கொள்ளவும் இடமுண்டு. கதைப்பாடலர்கள் முந்துநூற் புலமையை வெளிப்படுத்தும்போது முன்னோர்சொல்லையும் பொருண்மையையும் அப்படியே ஆளுவதும் அவர்களின் கருத்துக்களை மனம் கொண்டு தக்கவாறு ஏற்ற மாற்றங்களால் கூட்டியும் குறைத்தும் சொற்களைத் திரித்தும் அதே நேரத்தில் குறள் பொருண்மை கெடாமல் ஆளுவதும் கதைப் பாடலாசிரியர்களின் செயலாண்மையாகும்.

பிறன்மனை நயத்தல் சமுதாயத்தில் விலக்கப்பட்ட பண்பு. 'பிறன்மனை நயந்தோர் கிளையொடும் கெடுவர்'. இது வள்ளுவர் வாய்மொழி. இராவணன் பிறன்மனை நயந்து கிளையொடும் பட்டான். இஃது இதிகாசம் தரும் கல்வி. பாண்டவரின் உரிமையைப் பறித்துப் பாஞ்சாலியின் துகிலையும் உரிந்தான் துரியோதனன். இந்நிகழ்வு பாமரர் மனதில் அவனை மிகக் கொடியவனாகத் தூக்கிக் காட்டியது. ஆன்றோர் நிறைந்த சபையில் உடன் பிறந்தோனின் மனையாள் பாஞ்சாலியின் துகிலுரிந்த அடாச்செயல் அவனின்

ஆழ்மனத்தில் பிறன்மனை நயக்கும் தீயொழுக்கத்திற்கும் உரமூட்டமாயிருந்தது என்பதே கதைப்பாடலர் கொள்கை. இக்கொள்கையின் வெளிப்பாடே ஏணியேற்றமாகும்.

அறப்பண்பு நிறைந்தவரிடம் பிறன்மனை நயக்கும் இழிமைக் குணம் யாண்டும் எழா என்பதே வள்ளுவ அறம். பிறன்மனைவியை நயந்து அவர்வீட்டு வாயிலில் நின்றவரைப் போன்ற அறிவிலிகள் இல்லை; அவர்கள் விளிந்தாரின் வேறல்லர்; (செத்தவரின்வேறில்லை) அவர்கள் மாட்டுப் பழி, பாவம், அச்சம், இழிவு எனும் நான்கும் குடிகொள்ளும் என்றெல்லாம் வள்ளுவர் அடுக்கி உரைப்பர். பிறனில் விழைவு எனும் ஒழுக்கச் சிதைவு துன்பத்தினையே தொடர்ந்து தரும் என்பதனை ஒழுக்கமுடைமை எனும் இயலில்,

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பைத் தரும்..

குறள்–138

என மொழிந்து போவார் வள்ளுவர். இக்குறள் காட்டும் 'தீயொழுக்கம் என்றும் இடும்பைத்தரும்' என்னும் வள்ளுவ மொழியைக் கதைப்பாடலர் கதைக்கருவாக ஆக்கியுள்ளனர்.

பஞ்சபாண்டவர் காலச் சூழலாலும் விதி வயத்தாலும் வனவாசம் சென்றனர். அவ்வமயம் அருச்சுனன் மனைவியர் மதுரையில் அல்லியிடம் வந்து தங்கினர். துரியோதனனின் கயமை நெஞ்சம்

சுபத்திரைமேல் கிளர்ந்து எழுந்தது. இதனால் அவன் மதுரையடைந்து தன் கருத்தினை வெளிப்படையாகவே நாணின்றி நவின்றான். ஆண்வாடை ஆகாத அல்லி பிறனில் விழைகேடனுக்குத் தகுந்த பாடம் கற்பிக்க எண்ணினாள். அவனைத் தண்டிக்க இயந்திர ஏணி ஒன்றினையும் உருவாக்கினாள். அவ்வேணி அதிசய ஏணி.

தானியங்கும் ஆற்றலது; தண்டிக்கும் தகவினது. அதன் ஒவ்வொரு படியிலும் அருச்சுனன் மனைவியரின் உருவப் பதுமைகளையும் நிறுத்தினாள் அல்லி. பத்தாம் படியில் பதிவிரதை சுபத்திரையின் பதுமை காணப்பட்டது. அவ்வேணியின் மாயம் உணரா மன்னவன் துரியோதனன் படியேறிச் சுபத்திரைப் பதுமையை அவளென்றே எண்ணிப் புல்லினான். உடனே அதிசய ஏணியின் தானியங்கிக் கருவிகள் துரியோதனனைப் படுத்தும் பாட்டை அழகுற அமைத்துக் காட்டுவார் கதைப்பாடலர்.

கட்டித் தழுவுகையில் கடிய வசிகளவன்
பக்கத்தில் தைத்தமையால் பதைத்துத் துடிக்கின்றான்
அவன்குந்தின இடந்தனிலே கூர்வசி பாய்ந்ததினால்
அசைய முடியாமல் அவஸ்தைப் படுகின்றான்

....

தழுவின கைகளிலே கழுவாணி தைக்கிறது
தொண்டையங் குழியினிலே துறட்டாணி தைக்கிறது
மண்டையைத் துளைத்துருவி மறையாணி தைக்கிறது
வயிற்றில் பலவசிகள் வரிசையாய்த் தைத்தமையால்
ஈரற் குலைசரிந்தே இரத்தம் வழிகிறது

குடல்கள் அறுகிறது கொதிக்கிறது மேனியெல்லாம்
எருமைக் கடாபோல இரைச்சல் இடுகின்றான்
வண்ணான்தன் வாகனம்போல் போடுகிறான் பேரிரைச்சல்.

ஏணி – 15

என்பனவற்றால் அறியலாம். இங்கு,

ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி.

குறள் – 137

என்ற வள்ளுவர் வாய்மொழி மெய்ப்பிக்கப்படுகிறது.

ஏணிமேல் ஏறிய பிறன்மனை நயந்த நாணிலி துரியோதனன் படும் இடும்பையைத் தான் மட்டுமன்றி அனைவரும் அறிய வேண்டுமெனக் கருதினாள் அல்லி. இதனால்,

எல்லோரும் பார்க்கவிந்த ஏணியிலேற்றி வைத்தேன்
இவனுடன் இவ்வேணி எங்குவந்து விழுந்தாலும்
ஓலையைப் படித்ததன்பின் உத்தமரே இவன்மேலே
காரி யுமிழ்ந்து காலால் உதைத்திடுங்கள்
காலால்உதை கொடுத்தால் பதறுவான் படுபாவி
காலால் உதைக்காமல் கையாலே நீரெடுத்தால்
உமதுமேன்மை அழிந்துவிடும் வீணனைத் தீண்டாதீர்

ஏணி – 18

என ஓலை எழுதித் துரியோதனன் தலையில் கட்டினாள் அல்லி. பின்னர்த் தன் தந்தை பாண்டியராசன், ஆதிசேடன், மேகராசன், போசராசன், சோராம்புராசன், கிருட்டிணன், பஞ்சவர், கலந்தாரி,

அத்தினாப்புரப் பெரியோர் என ஒவ்வொரு இடமாக அவ்வேணியை அனுப்பினாள் அல்லி.

இயந்திர ஏணி ஒவ்வொரு அரசரிடமும் சென்று இறுதியாகப் பாண்டவரை அடைந்தது. அவர்கள் துரியோதனனின் குடுமியிலிருந்த ஓலையைக் கண்டனர் ; சினந்தனர். அற நாயகனான தருமன், சுபத்திரைக்கு எத்தீங்கும் நேராது ; ஏனெனில் அவள் கற்புக்கரசி; அவள் இயற்கையை ஏவல்கொள்ளும் ஆற்றலள் என்பதனைக் கூறித்,

தெய்வந்தொழ வேண்டாள் கொழுநன்தனைப் பணிவாள்
மழையே பொழியென்றால் பொழியுமே மாநிலத்தில்
என்றார் பெரியவரும்.

ஏணி – 58

எனும் வள்ளுவ மொழியால் தம்பியரை அமைதிப்படுத்தினான். இங்குத் தருமன் கையாண்ட தொடர்,

தெய்வம் தொழாஅள் கொழுநன் தொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை.

குறள் – 55

எனும் வள்ளுவரின் குறள் மொழியாகும். அருச்சுனன் மனைவியான சுபத்திரைக்குக் கீழ்மகனால் எவ்விதத் துன்பமும் வாராது என்பதை வலியுறுத்தவே கதைப்பாடலர் இக்குறளை ஆண்டுள்ளார்.

வள்ளுவர் வாய்மொழியான 'தொழாஅள்' என்பதனைத் 'தொழ வேண்டாள்' என்றும், 'தொழுதெழுவாள்' என்பதனைப் 'பணிவாள்'

என்றும் 'பெய்யெனப் பெய்யும் மழை' எனும் தொடரை ' மழையே பொழியென்றால் பொழியுமே மாநிலத்தில்' என்றும் கதைப்பாடலர் மாற்றியுள்ளார். ஓரிரு ஆண்டு கல்விப்பயிற்சியுள்ளோரும் எளிமையாகப் பொருளைப் புரிந்து கொள்ள வேண்டும் எனும் எண்ணமே குறளைக் கதைப் பாடலர் மாற்றியதன் நோக்கமாகும்.அங்கநாடு தந்து கருணனை ஆளாக்கியவன் துரியோதனன். அவனே ஒரு முறை அவையோர் முன்னர்க் கருணனைத் தேர்ப்பாகன் மகன், இழிகுலத்தான் எனப் பொல்லாங்கு உரைத்தான். இச்சுடு மொழிகள் கருணன் உள்ளத்தைச் சுட்டது. அம்மொழி கேட்டுத் துடிதுடித்த கருணன்,

தீயினால் சுட்டபுண்ணு சீக்கிரத்திலாறி விடும்

புல– 91

என மொழிந்தான். மன்னன் துரியோதனன் எந்த இழி மொழியைப் போக்க நாடு தந்து மன்னனாக்கி உடன்பிறந்தானாக ஏற்றுக்கொண்டானோ அவனே கருணனின் பிறப்பு இழிமையைக் கூறிச் சிறுமை பேசும்போது அவனை மறுத்துரைக்கவோ இடித்துரைக்கவோ இயலாத நிலையில் கருணன்,

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினாற் சுட்ட வடு.

குறள் – 129

எனும் குறள் காட்டும் தீச்செயலைச் சுட்டி நாச்செயலைக் குறிப்பால் பெற வைக்கிறான். வள்ளுவர் 'உள்ளாறும்' எனச் சுட்டியதனைக்

கதைப் பாடலர் சீக்கிரத்திலாறும் எனஎளிமையாகச்சொல்லுக்குச் சொல் பொருள் தந்து நிற்கும் திறம் பெரிது. கருணனின் தன்மான உணர்வு பேசவும் முடியாமல் நெஞ்சழிந்து போய் வள்ளுவர் கூறிய தீப்புண்ணைச் சுட்டி நாவடுவைப் பெறவைக்கின்றது எனலாம்.

கதைப் பாடலரின் கதைமொழி ஈண்டுக் கையற்ற கடமை நெஞ்சினனின் நன்றி உணர்வை மிகுத்தே காட்டுகின்றது.

கைலாய மலைக்குத் தவமியற்றச் சென்றான் அருச்சுனன். அவன் தவத்தின் வன்மையைக் காண விரும்பினான் சிவபெருமான். தவத்தினைக் குலைக்கும் நோக்குடன் பன்றியொன்றை ஏவினான் வேட உருவில் வந்த சிவன். சிவவேடனால் அனுப்பப் பெற்ற பன்றியைக் கணையால் கட்டி வைத்தான் அருச்சுனன். பன்றி பொருட்டுச் சிவ வேடனுக்கும் அருச்சுனனுக்கும் பெரும்போர் மூண்டது. தன்னால் காக்கப்பட்ட பன்றியை வேடனுக்கு உணவாகக் கொடுக்க இறுதி வரையில் அருச்சுனன் மனம் ஒப்பவில்லை. இதனை வெளிப்படுத்தக்,

கொல்லான் புலாலை மறுத்தானைக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்.

பஞ்ச – 246

என மொழிவார் பஞ்ச பாண்டவர் வனவாசக் கதைப்பாடலாசிரியர். இங்கு அவர் குறளைக் குறைக்காமல், கூட்டாமல், திரிக்காமல் அப்படியே ஆண்டுள்ளார்.

பஞ்சவர் வைகுந்தம் செல்லும் வழியில் எதிர்ப்பட்ட வானாற்றினை அனைவராலும் கடக்க இயலா நிலையில் ஆற்றில் சுழற்சியும் வேகமும் காணப்பட்டன. அதனால் வீமன் தன் உடன் பிறப்புக்களைத் தூக்கி ஆற்றைக் கடந்தான். இக்காட்சியினை உவமைப் படுத்த கதைப் பாடலருக்குத் திருக்குறளே துணையானது.

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவனடி சேரா தார்.

குறள் – 10

என்ற குறள் கருத்தே,

பிறவிப் பெருங்கடலைப் பெரியோர்கள்
நீந்துதல் போல்

வைகுந்த –113

எனக் கதைப்பாடலில் வருகின்றது. பிறவிக்கடலை நீந்துபவரே இறைவனைக் காண இயலும். அக்கடலைக் கடப்பது அரிதினும் அரிது. உலக மாயையில் ஆட்படும் உயிரெல்லாம் பேரருள் இன்பத்தில் மூழ்கித் திளைக்கா. இறைவனைக் காணா இறையருளை அனுபவிக்கும் உயிரினனே பொறிவாயில் ஐந்தடக்கிய பெரியவனாவான். இத்தத்துவத்தை மிகஎளிதாகக் கதைப்பாடலர்,

பிறவிக் கடலைப் பெரியோர்கள் நீந்துதல்போல்

வைகுந்த –113

என வீமன் செயலால் விளக்குவர். இங்கு அற்பர்களால் பிறவிக்

கடலைக் கடக்க முடியாது என்பதையும் அவர்கள் உலக மாயையிலிருந்து வெளிப்படுதல் எளிதன்று என்பதையும் தெள்ளிதின் பெற வைக்கின்றார் கதைப்பாடலர். பெரியோர்கள் தான் மட்டுமன்றித் தன்னைச் சார்ந்தோரையும் நல்வழிப்படுத்துவர் என்பதை வீமன் உடல் வலிமையால் அவன் மட்டும் ஆற்றினைக் கடந்து உய்கதி பெறாது அவனைச் சார்ந்த ஐவரையும் தூக்கிக் கொண்டு ஆற்றினைக் கடந்தான் எனக்காட்டி விளக்குவர் கதைப்பாடலர். உண்மையில் வீமன் மன உடல் வலிமையில் கருணையில் பெரியவன்தானே!

கதைப்பாடலரின் குறட்கல்வி அவர்தம் பனுவல்களில் மொழியப்பட்டு நிகழ்ச்சி விளக்கத்திற்கும் புலமைக்கும் பெருமைக்கும் ஊற்றமாக உள்ளது. அவர்கள் சொல்லுக்குச் சொல் குறட்பாக்களை எளிமைப்படுத்தியும், குறளை முழுமையாகக் காட்டியும் குறளைப் பொருள் நோக்கில் குறைத்தாண்டும் குறட்பொருள் சிதையாமல் வேறு வேறு சொற்களில் படைத்துப் போந்தும் அனைத்திற்கும் சிகரமாகக் குறளையே கதைப்பாடலின் கருவாகக் கொண்டு கதைப்பாடல்களைப் பாடியிருப்பதும் கதைப் பாடலரின் திருக்குறள் நெஞ்சைத் தெற்றெனக் கற்பார்க்கும் கேட்பார்க்கும் காட்டும்.

10. முக்கடலின் மாமுனியும் மனிதாபிமானியும்



வே. பொன்னழகு
எம்.ஏ., எம்.ஃபில்.,
ஆங்கிலத்துறை,
மாலைநேரப்பிரிவு.

வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு. – பாரதி

ஆம் இவை புரட்சிக்கவியின் உண்மைவரிகள். இன்று தெய்வப் புலவர் திருவள்ளுவருக்குப் பாரே போற்றும் அளவிற்குத் தமிழர்களாகிய நாம் குமரிமுனையில் சிலை எடுத்துள்ளதன் மூலம் நன்கு நிரூபிக்கப் பட்டுள்ளது. வாழ்வின் முக்கனிகளான அறம்,பொருள், இன்பம் இம் மூன்றினையும் இவ் உலகிற்குத் தாரை வார்த்த இத்தெய்வப் புலவனுக்கு ஈடு இணை இனியொருவர் இல்லை; இனிமேலும் பிறப்பதும் இல்லை என்பதே நம் கூற்று.

மாமுனிவர் வள்ளுவரின் சிலைக்கருகே ஒரு மாபெரும் மனிதாபிமானி சுவாமி விவேகானந்தரின் சிலை. ஆகா! என்னே பொருத்தம். உண்மையிலே குருவுக்கும் (வள்ளுவர்) தாச

(விவேகானந்தர்)னுக்கும் ஒரே இடத்தில் சிலைகள் அமைத்து இந்தியர்களாகிய நம் அனைவரின் கனவை நனவாக்கியுள்ளது மிகவும் பெருமைக்குரிய ஒன்றாகும். இக்கட்டுரை மாபெரும் இவ்விரு தத்துவஞானிகளுக்குக் கிடையே உள்ள ஒரு சில கருத்து ஒற்றுமைகளை விளக்கும் ஓர் எளிய ஒப்புமையாக அமைகிறது.

மேற்கத்திய நாடுகள் பல நீண்ட நாட்களாகவே செல்வச் செழிப்பில் மேலோங்கியிருந்தாலும், கலாச்சாரம், பண்பாடு போன்றவற்றில் இன்றளவும் பின்தங்கிய நிலையிலேயே தான் இருந்து வருகின்றன. காரணம், நெறிமுறையற்ற வாழ்க்கை, போதைப் பழக்கம், விபச்சாரம், பேராசை போன்ற தீய சக்திகள்தான். எப்படியும் மனிதன் வாழலாம் என்ற நிலை மாற்றி இப்படித்தான் மனித குலம் வாழவேண்டும் என்ற வாழ்வு நெறி இலக்கணத்திற்கு வித்திட்டவர்கள்தான் இந்த இருபெரும் தத்துவஞானிகள். வள்ளுவரின் தத்துவங்கள் அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் எனப் பிரிக்கப்படும் நிலையில் விவேகானந்தரின் தத்துவங்கள் கர்மயோகம், ஞானயோகம் பக்தியோகம் என மூன்று யோக நிலைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளமை. நாம் அனைவரம் நன்கறிந்த ஒன்றாகும். இச்சான்றே இருவருக்குமுள்ள முதல் ஒப்புமையை விளக்குகிறது. உதாரணமாக,

முயற்சி திருவினை யாக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.

குறள் - 616.

என்ற குறளில் வள்ளுவர் ஒரு மனிதன் தான் மேற்கொள்ளும் பெருமுயற்சியால் சிறந்த பலனை அடைவான் என்றும் முயற்சியின்மையால் தோல்வியையே சந்திப்பான் என்றும் மிகத்தெளிவாகக் கூறியுள்ளார். இதே கருத்தினை விவேகானந்தர்

இவை அனைத்தும் உள்ளடக்கிய பொருளாக,

You are thy creator and you are thy destroyer

(உன்னை உருவாக்குபவனும் நீயே! உன்னை அழித்துக் கொள்பவனும் நீயே!) என்று மிகச் சுருக்கமாகக் கூறியுள்ள நடை மிகப்பொருத்தமாகவே தோன்றுகிறது. இதுமட்டுமா, இன்னும் எத்தனையோ பல ஒப்புமை நோக்குகள் இவ்விரு மாமுனிகளுக்கிடையே நாம் காணலாம். இருப்பினும் கட்டுரையின் நலம் கருதி இன்னும் ஒரு சில கருத்து ஒற்றுமைகளைக் காண்பதே சாலச் சிறந்ததாகும். பிறர்க்குத் தர்மம் செய்தல் எவ்வளவு முக்கியம் என்பதை வள்ளுவர்,

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு.

குறள் - 231

என்ற அற்புத வரிகளின் மூலம் மனித வாழ்க்கையின் முக்கிய குறிக்கோள் இல்லாத ஏழை எளியவர்களுக்குத் தர்மம் செய்வதே என்றும், அத் தர்மத்தால் ஏற்படும் புகழே உண்மையான புகழ் என்றும் கூறுகிறார். அவ்வாறு தர்மம் செய்யாதவர்களுடைய வாழ்க்கைக்கு ஊதியம் என்பதே இல்லை என்று மிகத் தெளிவாக விளக்கியுள்ள திறம் வள்ளுவரின் புகழை வானுயர உயர்த்தியுள்ளது.

The purpose of human life is to live for other's welfare

(மனித வாழ்க்கையின் முக்கியமான நோக்கம் என்பது பிறர் நலனுக்காக வாழ்வதேயாகும்) என்பதை மிக ஆணித்தரமாகக் கூறியுள்ளார். உண்மையிலேயே பிறர்க்கு உதவி செய்வதும் அவர்களை நன்கு வாழ வைப்பதும், பின்னர் அதனால் கிடைக்கும்

எல்லையில்லாப் பேரின்பம் தான் மனிதகுலம் பெறக்கூடிய மாபெரும் இன்பம் என்ற கருத்தில் இருவருக்கும் எவ்வித கருத்து வேறுபாடுமில்லை.

வினைத்திட்பம் என்னும் அதிகாரத்தில் திருவள்ளுவர்,

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்.

குறள் - 666

என்ற குறளில் ஒருவன் தான் எண்ணுகின்ற காரியத்தில் உறுதியாக இருக்க வேண்டுமென்றும் அறிவுறுத்துகிறார். மேலும் அவ்வாறு எண்ணியபடியே விழிப்புடனும், உறுதியுடனும் செயல்பட்டால் அவர் எதிர்பார்க்கும் வெற்றியை நிச்சயம் அடைவர் என்றும் கூறுகிறார். வள்ளுவரின் இக்கருத்து விவேகானந்தரின் பொன் மொழியில் பின்வருமாறு காணப்படுகிறது.

Arise, Awake Stop not till Your goal is reached

(எழுந்திரு, விழித்திரு உன் இலக்கை அடையும் வரையிலும் உறுதியுடன் போராடு) என்ற அற்புத வரிகள் முன்னேறத் துடிக்கும் இன்றைய உலக இளைஞர் சமுதாயத்தைத் தட்டி எழுப்பி அவர்களுக்குச் சிறந்த புத்துணர்ச்சியையும், வேகத்தையும் மற்றும் விவேகத்தினையும் கலந்தூட்டி அவர்களின் முன்னேற்றப்பாதை நோக்கிப் பீடு நடை போடச் செய்கிறது.

அறிவியல் மற்றும் தொழில் வளர்ச்சியில் இன்றைய உலகம் மாபெரும் முன்னேற்றத்தை அடைந்தாலும் இன்னும் ஒழுக்கமுடைமையில் சற்றுப் பின்தங்கியே உள்ளது. இதன் பொருட்டே Aids என்று அழைக்கப்படும் உடல் தேய்வு நோய், இன்று பெரும்பாலான மனித உயிர்களைக் குடித்துக்

கொண்டிருக்கிறது. இதற்கான மருந்து இன்றளவும் கண்டுபிடிக்கப்படவில்லை. இத்தகையதொரு கொடுமையான நோய் தாக்குதலை அன்றே உணர்ந்த வள்ளுவர்,

நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்.

குறள் - 138

என்ற குறளில் நல்லொழுக்கம் இன்பமான வாழ்க்கையளிக்கும் என்று கூறுகிறார். தீயொழுக்கம் Aids, VD போன்ற மரணத் துன்பத்தைத் தரக்கூடிய பால்வினை நோய்களை ஏற்படுத்தும் என்று எச்சரிக்கை விடுத்துள்ளார். இதை இடும்பைத் தரும் என்று விளக்கியுள்ள திறம் இக்காலத்திற்கு மிகவும் பொருத்தமாக அமைகிறது. இதே ஒழுக்க நெறியினை விளக்க முற்படும் விவேகாநந்தர்.

Only a man of Character can get at Truth such a man
is safe for ever, he cannot do any evil.

(நல்லொழுக்கம் உடையவனே வாழ்க்கையின் உண்மை என்ற தத்துவத்தைப் பெற முடியும். மேலும் அத்தகய அவன் பிறருக்கும் தீங்கிழைக்காது என்றைக்கும் ஆரோக்கியமான வாழ்வு நடத்துவான் என்று ஒழுக்கத்தின் இன்றியமையாமையை விளக்கியுள்ளார்.)

இதுகாறம் அய்யன் திருவள்ளுவருக்கும் மனிதாபிமானி சுவாமி விவேகானந்தருக்குமிடையே ஒரு சில தத்துவ ஒற்றுமைகளைக் கண்ட நாம், கடைசியாக மனித வாழ்க்கையின் ஒளிவிளக்காகத் திகழும் கல்வி பற்றிய இருவரின் கருத்து ஒற்றுமையைக் காண்போம்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக.

குறள் - 391

என்ற குறளில் திருவள்ளுவர் கற்கத் தகுந்த நல்ல பல நூல்களை ஒருவர் கற்க வேண்டுமென்று கூறுகிறார். நன்கு கற்று முடிந்த பின்பு அந்நூல்களில் கூறப்பட்ட நெறிமுறைப்படி வாழ்வதே சிறந்த வாழ்க்கையாகும் என்றும் விளக்கியுள்ளார். கல்வி கற்ற ஒருவன் எப்படி வாழ வேண்டும் என்ற குறளில் மேற்கூறிய கருத்திற்கு அறனாக விவேகானந்தர்,

Education is already the perfection of a man within himself

என மொழிவார். அவர் கல்வியாவது ஒரு மனிதனிடமுள்ள இயற்கையான முழுமைபெற்ற பண்பான குணமேயாகும் என்று விளக்குகிறார். மனிதகுலத்திற்கே இருக்க வேண்டிய மனிதாபிமானத்தைதான் முழுமைபெற்ற பண்பு என்று கூறியுள்ளது சுவாமி அவர்கள் ஒரு சிறந்த மனிதாபிமானி என்பதை உலகிற்கு நிரூபணம் செய்கின்றது.

இதுகாறும் தமக்கு நிகரில்லாத இந்த மாபெரும் தெய்வப் பிறவிகளுக்கிடையே ஒரு சில தத்துவ ஒற்றுமைகளைப் பார்த்துள்ள போதும், இன்னும் இவ்விருவருக்கிடையே காண வேண்டிய ஒப்புமைக் கருத்துக்கள் அளவிட முடியாதன. இருப்பினும் வள்ளுவ மாமுனியின் தெய்வீகத் திருக்குறளும் மனிதாபிமானி சுவாமி விவேகானந்தரின் சிறந்த ஆன்மீகச் சொற்பொழிவுகளும், அவர் தம் சீரிய எழுத்துக்களும், ஆன்மீகத்தில் தலைசிறந்த ஒரு நவ இந்தியாவை உருவாக்கும். இந்தியா நாகரிக பண்பாட்டின் ஆணிவேர் என்ற ஆங்கிலேய சரித்திர ஆசிரியன் ஆர்னால்ட்டாயின்பியின் கருத்தை உலகிற்கு நன்கு மெய்ப்பிக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

11. காமத்துப் பாலில் கண்



இராம. மோகன்

எம்.ஏ.,பி.எட்.,எம்.ஃபில்.,

தமிழ்த்துறை,

மாலைநேரப் பிரிவு.

மக்கள் தங்கள் வாழ்வில் மேற்கொள்ள வேண்டிய உயர் கோட்பாடுகளையும் குறிக்கோள்களையும், வரையறுத்துக் கூறும் நூல்களுள் மிகச் சிறந்தது திருக்குறள் ஒன்றே. "வள்ளுவர் செய் திருக்குறளை மறுவற நன்குணர்ந்தோர்கள் உள்ளுவரோ மனுவாதி ஒரு குலத்துக்கொரு நீதி" என மனோன்மணியப் பேராசிரியர் பாராட்டுவார். மனத்தாலும் சொல்லாலும் செயலாலும் ஒவ்வொரு தனிமனிதனும் ஆற்றவேண்டிய நல்வினைகளை எளிமையாக்கிக் கூறுவதில் திருக்குறளுக்கே முதலிடம்.

அறமும் பொருளும் இன்பமும் எல்லா மதத்தவர்க்கும், எல்லா இனத்தவர்க்கும் உரியன என்பதைச் சொல்லும் உலகப் பொதுநூல் திருக்குறள்.

....

அரசியல் அறிவுபெற கற்போர் சிலர்
அறநெறி உணரக் கற்போர் சிலர்
இன்பக் கற்பனைகளில் மகிழக் காண்போர் சிலர்

....

வாழ்வாங்கு வாழும் நெறியை அறிய கற்பவர் சிலர்
பா நலம் நாடிக் கற்பவர் சிலர்

திருக்குறள் உவமை – மு.வ. பக்.9–10

என்ற மு. வரதராசனாரின் கூற்றுக் கேற்ப அவரவர்க்குத் தேவையான சுவை நோக்கோடும் திருக்குறளை அணுகலாம்.

தமிழிலக்கண மரபுவழி அறம், பொருள், இன்பம் என்ற வைப்பு முறையை அமைத்திருப்பது வள்ளுவரின் தனிச்சிறப்பு. தொல்காப்பியர் பா வகைகளைக் கூறி அடுத்த நூற்பாவில்,

அந்நிலை மருங்கின் அற முதலாகிய
மும்முதற் பொருட்கும் உரிய என்ப

தொல். நூற்பா – 1363

எனச் சொல்லிப் பாக்களால் பேசப்படும் பொருட்களை அறம், பொருள், இன்பம் என வரிசைப்படுத்துவார். இதே வைப்பு முறையை புறம் 28, கலித்தொகை 141 ஆகிய இரு பாடல்களும் வலியுறுத்தும்.

காமத்துப்பால்

அறம் பேசும் நூல்கள் பலவும் அருள், ஈகை, பண்பு, அரசு பற்றியே கூறும். இல்வாழ்வு இலக்கணத்தை வகுத்துரைக்கும் தொல்காப்பிய வழி பற்றியது குறள். எனவே தனிமனித ஒழுக்கத்தை வலியுறுத்தும் அறத்துப்பாலும் சமுதாய உயர்விற்கு வழி சொல்லும் பொருட்பாலும் சொல்லிய வள்ளுவர் அகம் சார்ந்த இல்லற நெறிகளைச் சொல்ல

வேண்டிக் காமத்துப்பாலை அடுத்து அமைக்கிறார். அறமும் பொருளும் நல்ல இல்லறத்தின்வழியே தான் நிகழ முடியும். இல்லறத்தில் இருந்து அவற்றைப் பிரிக்க இயலாது என்பது வள்ளுவர்கருத்து.

தம்மில் இருந்து தமதுபாத்து உண்டற்றால்
அம்மா அரிவை முயக்கு.

குறள் – 1107

எனும் குறள் காமத்துப்பாலில் புணர்ச்சி மகிழ்தல் எனும் அதிகாரத்தில் அமையப் பெற்றது. தம்முடைய வீட்டில் இருந்து தாம் முயன்ற பொருளைப் பகுத்துண்ணும்போது ஏற்படும் மகிழ்வை நான் தலைவியைத் தழுவும் போது பெறுகிறேன் என்பான் தலைவன். ஆக அகமும் புறமும் இணைந்ததே நல்வாழ்வு என்பது வள்ளுவர் நெறி.

புதுமை

காமத்துப் பாலில் அமையப் பெற்றுள்ள புலவி, புலவிநுணுக்கம், ஊடலுவகை என்ற மூன்று அதிகாரங்களும் சங்க இலக்கியத்தில் அமையப்பெறும் ஊடல் நிலையில் இருந்து மாறுபட்டு அமைகின்றன. ஊடலுக்குத் தலைவனின் பரத்தை ஒழுக்கமே காரணம் எனும் நிலையில் சங்க இலக்கிய மருதத்திணைப் பாடல்கள் அமையப்பெறும். இந்த மரபை உடைத்துப் புரட்சி செய்துள்ளார் வள்ளுவர். வள்ளுவர் கண்ட தலைவி தலைவன் மேல் கொண்ட அளவு மீறிய அன்பால் அவனிடம் ஊடல் வேண்டிப் பொய்யான கற்பனைகளை மனதில் நிறுத்திப் பேசுவாள். இப்பிறவியில் பிரியமாட்டோம் எனச் சொல்லிய தலைவனிடம் வரும் பிறவியில் பிரிவானோ ? என நினைத்து வருத்தி ஊடல் கொள்வாள். யாரை விடவும் நம் காதல் உயர்ந்தது (1314)

எனச் சொல்லிய தலைவனைப் பார்த்து யாரைவிட! யாரைவிட! எனக் கேட்டு ஊடல் கொள்ளும் நிலையும், இயல்பாகத் தும்மும் தலைவனைப் பார்த்து யார் உம்மை நினைத்ததால் தும்மினீர் எனவம்பு பேசி ஊடல் கொள்ளும் தலைவியையும் படைத்துக் காட்டியுள்ளார் வள்ளுவர். இருப்பினும் புலவி நுணுக்கம் எனும் இதே அதிகாரத்தில்,

பெண்இயலார் எல்லாரும் கண்ணின் பொதுஉண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு.

குறள் –1311

எனும் குறளில் பரத்தமை உடையவன் தலைவன் எனச் சுட்டியுள்ளார். இந்த ஐயத்திற்குப் பரிமேலழகர் சற்றுப் பொருந்துமாறு விடை தருவார். கற்பு நாண் முதலிய நற்குணங்களின்மையிற் பரத்தையர்க்குள்ளது பெண்ணியற்கை மாத்திரமேயென்னுங் கருத்தாற் பெண்ணியலாரென்றாள் பொதுவாக உண்டல் தம் சேரி செலவின் முறையானன்றி ஒரு காலத் தொருங்கு நோக்குதல் அதுவுமோர் குற்றம் என உரை விளக்கம் தருகிறார். பரத்தமை எண்ணம் உடைய மகளிரின் கண்களால், புறத்தால் மட்டும் உண்ணப்பட்டான் தலைவன். இராமனைச் சீதை முதன் முதலாவதாகக் காணும் போது கண்ணோடு கண்ணினை இணைத்து உணர்வில் ஒன்றினாள். பிற பெண்டிரெல்லாம் இராமனின் புற அழகையே நோக்கினர். இந்நிகழ்வை ஒப்பிட்டுப் பார்த்தால் வள்ளுவன் கண்ட தலைவன் தூயவன்.

தான் மட்டும் தழுவும் தலைவனின் மார்பைப் பிறர் காண்பதைக் கூட இவளால் சகித்துக் கொள்ள இயலவில்லை. எனவே, அன்பான குடும்ப வாழ்வை உயர்த்திக் காட்டவும், இல்லறத்திற்கு இனிமை சேர்க்கவும் ஊடலைக் கருவியாகக் கொண்டு அமைத்துக் காட்டியுள்ளார் வள்ளுவர். தலைவனிடம் தவறு ஒன்றும் இல்லை யெனினும் அவரோடு ஊடுதல் அவர் நம்மேல் மிகுதியான அன்பு செலுத்தவே என்பது தலைவி கூற்று.

தவறிலர் ஆயினும்தாம் வீழ்வார் மென்தோள்
அகறலின் ஆங்குஒன்று உடைத்து.

குறள் – 1325

நம் மீது தவறில்லை எனினும் தலைவியின் ஊடலுக்கு ஆளாகி அவளை விட்டு நீங்கி இருக்கும் போதும் ஓர் இன்பம் உள்ளது எனத் தலைவன் பேசுவான். ஊடுதல் காமத்திற்கு இன்பம் எனும் உயரிய நிலையில்தான் வள்ளுவரின் ஊடல் காரணம் அமையும்.

காமத்துப்பாலில் புதுமைக்கும் புரட்சிக்கும் பஞ்சமில்லை. நகை முதல் உவகை ஈறாகத் தொல்காப்பியத்தில் சொல்லப்பட்ட எட்டு வகையான மெய்ப்பாட்டுக் குறிப்புகளை முகமே நன்கு வெளிக்காட்டும். அதனினும் முகத்தை நோக்கினால் மெய்ப்பாடுகளின் மொத்தக் களமாக இருப்பது கண்.

இல்லறத்தின் முதல் தளம் களவு. இயற்கைப் புணர்ச்சியில் தொடங்கும் களவு வாழ்க்கைக்கு முன்னுரை எழுதுவது கண். காமத்துப்பாலில் பல நிலைகளில் கண்ணின் திறத்தை வியப்போடு அமைத்துள்ளார் வள்ளுவப் பெருமான். அவர் முதல் ஒன்பது அதிகாரங்களைக் கொண்ட களவியலிலும் தொடரும் பதினாறு அதிகாரங்களில் அமையப் பெற்ற கற்பியலிலும்தலைவன் கூற்றுப் பாடலாகவும், தலைவன் தனக்குள் சொல்லிய நிலையிலும் தலைவி கூற்றாகவும், தோழி கூற்றாகவும் அமைத்துக் கண்ணின் பெருமைகளைக் கவின் கொளச் சொல்லிப் புதுமை செய்கிறார். வேறு எந்த இலக்கியங்களிலும் காணப்பெறாத அளவிற்குக் கண்கள் பற்றிய செய்திகளை வள்ளுவத்தில் காணலாம். சேனையாக, எமனாக, உணர்வாக, நோயாக, மருந்தாக, நீராகப், போர்க் கருவியாகக், காதலை வெளிப்படுத்தும் வாயிலாகக், கனவுப் பிரதேசமாகப், பாறையாக, மலராக, அதுமட்டுமா அவசரக்கண்,

நாணும் கண், பசலைக் கண், தின்னும் கண், கண்ணோட்டம் இல்லாக் கண், பேசும் கண், காமக்கண், துடிக்கும் கண், ஊடும் கண், உண்ணும் கண் என உருவ அமைப்பையும் அதன் தொழில் அமைப்பையும் கொண்டு பெரும் பட்டியலையே தருகிறார் வள்ளுவர்.

சேனையாகக் கண் அறிமுகம்

நோக்கிய என் நோக்கிற்குப் பதில் நோக்காக அவள் நோக்கிய நோக்கு, அணங்கு பெரிய சேனை கொண்டு தாக்குவது போலமைந்தது என்பதனை,

தானைக்கொண் டன்னது உடைத்து . தாக்குஅணங்கு

குறள்–1082

எனத் தகை அணுங்குறுத்தல் எனும் அதிகாரத்தில் வள்ளுவர் மொழிவார்.

எமன்

கூற்று என்பதை அறியேன், இப்பொழுது அறிந்து கொண்டேன். அது பெண் தன்மையுடைய பெரிய கண்களே என வியக்கிறான் தலைவன். இதனை,

பண்டுஅறியேன் கூற்றுஎன் பதனை இனியறிந்தேன்
பெண்தகையால் பேரமர்க் கட்கு

குறள் – 1083

என மொழிந்த வள்ளுவர் அடுத்த குறளில் கண்டவரின் உயிரை உண்ணும் தன்மையுடையது தலைவியின் கண் என்பார்.

அமர்த்தனகண் (குறள்–1084) என்ற தொடருக்குப் பேதைமைக்கும் ஏலாது கொடியவாயிருந்தன கண் எனஉரை வகுப்பார் பரிமேலழகர். அதனைத் தொடர்ந்த குறளில் எமனோ? கண்ணோ? பெண்மானோ? எனத் தலைவன் தலைவியின் கண்களைக் கண்டு வியப்பான். அடுத்த குறள் கண்களைக் கொண்டு நடுங்கிய தலைவனை அடையாளம் காட்டும். இவ்வதிகாரத்தில் அறிமுகமாகும் கண்கள் அச்சத்தையும் வியப்பையும் ஏற்படுத்திய கண்கள்.

பார்வைச் சிறப்பு

தலைவியின் பார்வை பெண்மான் போன்ற இளமையான பார்வை. எனவே அவளின் பார்வை காமத்தில் செம்பாகத்தை விட அதிக மகிழ்வைத் தருவதாக உணர்கிறான்தலைவன். இதனைக்,

கண்களவு கொள்ளும் சிறுநோக்கம் காமத்தில்
செம்பாகம் அன்று பெரிது.

குறள் – 1092

என வியந்து பேசுகிறான் அவன். தலைவன் நோக்காத போது தான் நோக்கி மெல்ல நகும் தலைவியின் செயல் அகப்பண்போடு கூடிப் பெண்மைக்கு அழகு சேர்க்கிறது. எப்படி நோக்கி மகிழ்ந்தாள்? என்பதைக்,

குறிக்கொண்டு நோக்காமை அல்லால் ஒருகண்
சிறக்கணித்தாள் போல நகும்.

குறள் – 1095

என விளம்புவர் வள்ளுவர் சிறக்கணித்தல் என்பதற்கு ஒரு கண்ணைச் சுருக்கிக் கொண்டு பார்த்தல் என்பார் பரிமேலழகர். தலைவி தலைவனின் பார்வையை ஏற்றபின் அழகு மேம்பட்டு அதனால் நன்மைக் குறிப்புச் செய்தலும் உள் நகுதலும் நிகழ்த்து வனவாக (குறள் 1098) வது குறளில் அமைத்துள்ளார்.

நோயும் மருந்தும் ஆன கண்

இருநோக்கு இவளுண்கண் உள்ளதொரு நோக்கு
நோய்நோக்குஒன் றந்நோய் மருந்து.

குறள் – 1091

என்பதால் நோய் தந்த நோக்கே அதற்கு மருந்தாகும் அழகினைக் காணலாம். இங்கு நோய் என்பது களவு எனக் கொண்டால் மருந்து என்பது கற்பு வாழ்வு. கண் எனும் களம் கொண்டு பார்வை எனும் நீரைக் காதல் பயிர் வளரத் தலைவி

ஊற்றுவதாக எண்ணுகிறான் தலைவன். இதனை யாப்பினுள் அட்டிய நீர் (1093) என்ற வள்ளுவரின் இலக்கியக் கற்பனையை எண்ணி எண்ணி வியக்கலாம். தலைவி தலைவனை முன் அறியாதவளாய்ப் பொதுநோக்கு நோக்குவாள். எனவே அவள் உள்ளத்தில் காதல் உண்டு எனக் கண்டறிகிறார் வள்ளுவர். பிரிந்த தலைவன் தலைவியைச் சந்திக்கிறான். அவ்வமயம்,

கண்ணோடு கண்ணிணை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள்
என்ன பயனும் இல குறள்–1100

என உணர்கிறான். இங்குப் புணர்தல் நிமித்தமாக உணர்வுற நோக்கும் நோக்கம் களவில் அன்பு மிகும் இடத்தில் அமையும் என்பது தெளிவு. தலைவனின் பார்வை இன்பத்தைத் தரும் என்றும் கூட்டம் பிரிவைத் தரப் போகும் துன்பத்தைத் தரும் என்றும் பார்வையின் விளைவை (குறள்–1152) விளக்கிப் போவார் வள்ளுவர்.

கண்களை நிரப்பிய அழகு

என் கண்களை நிரப்பும் அழகினையும் மூங்கில் ஒத்த தோளும் உடையவள் மடமை மிகுந்த என் தலைவி என 1272வது குறளில் வள்ளுவர் கண்ட தலைவன் மகிழ்வான்.

கருமணி

காதற் சிறப்புரைத்தல் எனும் 113 வது அதிகாரத்தின் 3 வது குறளில் தலைவன் தலைவியின் மேல் கொண்ட அன்பு மிகுதியால் தன் கண்களைப் பார்த்துக் கருமணியில் உள்ள பாவாய் நீபோ ! தலைவிக்கு இடம் வேண்டும் எனப்பேசும் இடம் வள்ளுவரின்உயர் கற்பனைக்கு ஓர் உரைகல்.

போர் செய்யும் கண்

போர்செய்யும்கண்ணுடையாளைக்(குறள்–1125)கணப்பொழுதும் மறக்காத தலைவன் சங்க இலக்கியத் தலைவனை யொப்பக் காட்சியளிக்கிறான்.

கண்ணுக்குள் காதலன்

இயற்பழித்த தோழியிடம் தலைவி எம் காதலர் கண்ணில் இருந்து போகமாட்டார்; கண்ணை மூடி இமைத்தாலும் வருந்தமாட்டார்; அவ்வளவு நுட்பம் வாய்ந்தவர் என்பாள். இதனைக்,

கண் உள்ளின் போகார் குறள் – 1126

கண்ணுள்ளார் காத லராகக் கண்ணும்
எழுதேம் கரப்பாக்கு அறிந்து. குறள் – 1127

எனத் தொடர்களால் விளக்குவார் வள்ளுவர். இங்கு எம் காதலர் கண்ணுக்குள் இருக்கிறார். எனவே நான் மை எழுதவில்லை எனக் கூறும் தலைவியின் வியத்தகு கற்பனை ஓவியங்கள் இவ்விரு குறள்களுமாகும்.

தூங்காத கண்

114 வது அதிகாரத்தின் 6 வது குறளில் தலைவியைக் காணாத நிலையில் மடல் பற்றிச் சிந்தித்து இரவெல்லாம் தூங்காத தலைவனை அடையாளம் காட்டுகிறார் வள்ளுவர்.

அவசரக் கண்களின் அவலம்

கண் விதுப்பழிதல் எனும் 118 வது அதிகாரத்தில் தலைவி கூற்றாக அமையப் பெற்றுள்ள முதல் ஒன்பது குறட்பாக்களில் தலைவியைப் புலம்ப விடுகிறார் வள்ளுவர். தலைவியின் உடன்பாடின்றி அவசரப்பட்டுக் கண்கள் தலைவனைக் கண்டதால் தமக்கு ஏற்பட்ட அவலத்தை எடுத்துரைக்கிறாள் தலைவி. வள்ளுவரின் நகைச்சுவை உணர்வுக்கும் இவ்வதிகாரம் தக்க சான்று. இதனைக்,

கண்தாம் கலுழ்வ தெவன்கொலோ தண்டாநோய்
தாம்காட்ட யாம்கண் டது குறள் – 1171

எனத் தீராத இக்காம நோய் கண்கள் காட்ட யாம் கண்டதால் விளைந்தது என்பர் வள்ளுவர். அவ்வாறிருக்கக் காட்டிய கண்கள் தாமே இப்பொழுது அழுவது ஏன் ? என இம் முதற் குறளுக்கு உரை வகுப்பார் டாக்டர் மு. வ. அவர்கள்.

ஆராய்ந்து உணராமல் தலைவனை நோக்கிக் காதல் கொண்ட கண்கள் இன்று வருந்தி என்ன செய்வது? எனப் பிரிந்த தலைவன் நினைவால் கண்களை நோக்கி வினா எழுப்பும் தலைவியைக் காணும் போது இரக்கம் மேலோங்கும். தன் கண்களின் செயல் கண்டு தானே நகைக்கும் தலைவியைக்,

கதுமெனத் தாம்நோக்கித் தாமே கலுழும்
இதுநகத் தக்க துடைத்து.

குறள் – 1173

என்ற குறள் வழி காட்டுவார் வள்ளுவர். காமநோயைச் செய்து விட்டுத் தானும் அழ முடியாதவாறு நீர் வறண்டு தவிக்கும் கண்களை 1174 வது குறளில் படம் பிடித்துக் காட்டும் வள்ளுவரின் கற்பனையை நினைந்து நினைந்து உவக்கலாம். தமக்குக் காம நோய் கொடுத்த கண் உறங்காமல் தவிப்பதில் தலைவிக்கு மகிழ்ச்சி. இதனைக் காமநோய் செய்த கண் என்பார் வள்ளுவர் (1175). மேலும்,

ஓஒ இனிதே எமக்குஇந்நோய் செய்தகண்
தாஅம் இதற்பட் டது.

குறள் – 1176

என்றும் மொழிவர். தீங்கு செய்தார்க்குத் தீங்கு நேர்ந்தால் மகிழ்வது இயல்புதானே. தலைவிக்கு நோய் கொடுத்தக் கண் தலைவனைக் காணாது வருந்துவது கண்டு

தலைவி மகிழ்கிறாள். இது வள்ளுவரின்உயர் கற்பனைக்குத் தக்க சான்று.

கண்கள் வருந்துவது கண்டு மகிழ்வதோடு கண்களைச் சபிக்கும் தலைவியும் வள்ளுவத்தில் இடம் பெறுகிறாள்.

உண்மை அன்பு இல்லாத தலைவரைக் காண வேண்டி முயலும் கண்களைக் காணாது அமைவில கண் (1178) என்பார் வள்ளுவர். கண்ணின் செயலை

வாராக்கால் துஞ்சா வரின்துஞ்சா ஆயிடை
ஆரஞர் உற்றன கண்.

குறள் – 1179

என மொழிவர் வள்ளுவர். இங்குத் தலைவன் வராத போது வருகையை எதிர்நோக்கித் துஞ்சாத கண் வந்தார் எனின் பின் நிகழும் பிரிவு அஞ்சித் துஞ்சாத கண் எனக் கண்களால் அவதியுறும் தலைவி நிலை இரங்கத்தக்கது. தலைவன் வரும் வழியில் விழிவைத்து ஒளி இழந்த கண்களையும் (1261) குறித்துச் செல்வர்.

நாணும் கண்

துன்பத்தைக் கொடுத்துச் சென்ற காதலரை நினைந்து தலைவியே நீ அழுதமையால் அழகு இழந்தன கண்கள் என்றும், கண்களைக் கண்டு முன்பு நாணிய நறு மலர்க்கு இன்று கண் நாணியது என்றும் வருத்தமுற்ற தலைவியைத் தேற்றும் தோழியை இக்குறளில் (1231) அறிமுகம் செய்கிறார் வள்ளுவர்.

பசலைக் கண்

வினைமுற்றிய தலைவன் முன் நிகழ்ந்தது நினைத்துத் தன்னுள்ளே,

கண்ணின் பசப்போ பருவரல் எய்தின்றே
ஒண்ணுதல் செய்தது கண்டு.

குறள் – 1240

எனப் பேசுவான். காதலியின் ஒளிபொருந்திய நெற்றி பசலை நிறம் உற்றதைக் கண்டு அவளுடைய கண்களின் பசலையும் வருந்துமே எவ்வாறு ஆற்றுவாளோ. என எண்ணும் தலைவனின் தவிப்பு இக்குறளில் புலப்படும்.

கண்ணின் அழகு

நலம் புனைந்துரைத்தல் எனும் அதிகாரத்தில் ஏது தற்குறிப்பேற்ற அணியில் அமையப்பெற்ற தலைவன்,

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

குறள் – 1114

என மொழிவான். குவளை மலர்க்குக் காணும் சக்தி இல்லை; நாணமும் இல்லை. ஆகையால் அம்மலர் வானை நோக்கி நிற்கிறது. உன் கண்களைக் கண்டால் அஃது இவ்வாறு செருக்கோடு நிற்காது தலைகவிழும் என்பான் தலைவன்.

தின்னும் கண்

நெஞ்சிடம், நீ செல்லும் போது இந்தக் கண்களையும் அழைத்துப் போவாயா? தலைவனைக் காணவேண்டி என்னைத் தின்னுகிறது இக்கண்கள் என நெஞ்சோடு பேசுவாள் தலைவி.

கண்ணும் கொளச்சேறி நெஞ்சேஇவை என்னைத்
தின்னும் அவர்க்காணல் உற்று.

குறள் – 1244

என வியப்பில் ஆழ்த்தும் கவின் கற்பனை இது.

உண்டற் குரிய அல்லாப் பொருளை
உண்டன போலக் கூறலும் மரபே.

நூற் –1159

என்ற தொல்காப்பியர் கூற்றும் இதற்கு அரணாகிறது.

பேசும் கண்

தலைவனோடு தலைவியின் இசைவின்றிப் பேசக்கூடிய கண்களைக்,

கரப்பினும் கையிகந்து ஒல்லாநின் உண்கண்
உரைக்கல் உறுவதொன் றுண்டு.

குறள் – 1271

என நம்முன் நிறுத்துவார் வள்ளுவர். இங்குத் தலைவி தன் கருத்தை வெளிப்படையாகக் கூறாது அகத்தே மறைத்தாலும் கண்காட்டி விடும் என்பது வெளிப்படையாகிறது.

காமக் கண்

பெண்மைக்கு அழகு கண்ணினால் காமநோயைச் சொல்லிப் பிரியாமலிருக்குமாறு இரந்து நிற்பதே இதனைக்,

கண்ணினால் காமநோய் சொல்லி .

குறள் – 1280

என்பார் வள்ளுவர்.

காணத்துடிக்கும் கண்

தலைவனைக் காணாது அமைதியற்று இருக்கும் கண்களைக்,

கொண்கனைக் காணாது அமையல கண் குறள் – 1283

எனக் கூறுவார் வள்ளுவர். இது தலைவியின் அன்பின் மிகுதிப் பாட்டால் வெளிப்பட்டதாகும்.

ஊடும் கண்

கண் பார்வையின் அளவில் பிணங்கி என்னைவிடத் தான் விரைந்து தழுவுதலை விரும்பிக் (பிணக்கம் மறந்து) கலக்கம் கொண்டாள் எனத் தன் காதலி நிலையைக்,

கண்ணின் துனித்தே கலங்கினாள் குறள் – 1290

என உரைப்பான் தலைவன்.

உண்ணும் கண்

பெண்கள் விரும்பக் கூடிய அழகிய தோற்றமுடையவன் தலைவன். அவனிடம் பரத்தமை உடையாய் உன் மார்பை இனி நான் தழுவமாட்டேன் மனதில் நிறைந்த அன்பால் பொய்க் கோபம் கொண்டு பேசுவாள் தலைவி. இதனைப்,

பெண்ணியலார் எல்லாரும் கண்ணின் பொதுவுண்பர்
நண்ணேன் பரத்தநின் மார்பு. குறள் – 1311

என வள்ளுவர் மொழிவர்.

கண்ணோட்டம் இல்லாக் காமம்

நிறையழிதல் எனும் அதிகாரத்தின் இரண்டாவது குறளில் காமம் கண்ணோட்டம் இல்லாதது என்றும் அஃதென் நெஞ்சை நடு இரவிலும் ஏவல் கொண்டு ஆள்கிறது என்றும் கண்ணோட்டம் இல்லாத காமத்தைக் குறை கூறுகிறான் தலைவன்.

ஊடலில் கண்

1317 வது குறளில் தலைவன் தும்மியது கண்டு, தலைவி நூறாண்டு வாழ்கவென வாழ்த்தினாள். பின், யார் நினைத்ததால் தும்மினீர் எனக்கேட்டு அழுது ஊடல் கொள்கிறாள். மற்றொரு இடத்தில் தலைவன் தலைவியை உண்மையன்போடு பார்க்கிறான். அவ்வமயம் யாரை நினைத்து என்னோடு ஒப்பிட்டுப் பார்க்கிறீர்கள் எனச் சினந்து ஊடல் கொள்கிறாள். ஊடல் கூட முயங்குவதற்கு ஊற்றம் தானே!

உவமை நலம்

அணிகளின் தாயானது உவமை அணி. நலம் புனைந்துரைத்தலில்,

மலர்காணின் மையாத்தி நெஞ்சே இவள்கண்
பலர்காணும் பூவொக்கும் என்று.

குறள் – 1112

எனக் கண் உவமை பெறுகிறது. இவளுடைய கண்கள் பலரும் காணுகின்ற மலர்களை ஒத்திருப்பதால் அம்மலர்களைக் கண்டுதடுமாற்றம் அடைகிறாய் எனத் தலைவன் தன் நெஞ்சுக்குக் கூறுமிடத்துக் கண்ணிற்கு மலரை உவமையாக அமைக்கிறார் வள்ளுவர். இதே உவமையை இவ்வதிகாரத்தின் ஒன்பதாவது குறளிலும் கையாளுகிறார். கண்களை, மலரன்ன கண்ணாள் என நலம் புனைந்து உரைத்தலிலும் (1119) என அலர் அறிவுறுத்தலிலும் (1142) கயல் உண் கண் (1212) எனக் கனவு நிலை உரைத்தலிலும், அவர் வயின் விதும்பல் எனும் அதிகாரத்தில் தலைவனுக்கு உவமையாகக் கண் ணன்ன கேளிர் எனவும் (1267) புலவி அதிகாரத்தில் பூ அன்ன கண்ணார் (1305) எனவும் தலைவன் உரைப்பான். இவ்வாறு ஆறு இடங்களில் கண்களை உவமையாக்கி அழகு சேர்க்கிறார் வள்ளுவர்.

முடிவுரை

கண்களின் அழகையும் பெருமையையும் வள்ளுவர் திறனோடும் நுட்பமாகவும் பயனொடும் குறிப்பிட்டுள்ளார். வேறு எந்த அக இலக்கியங்களிலும் காணக்கிடைக்காத கண்களைக் காமத்துப்பாலில் காணும் போது நெஞ்சம் மகிழும். கண் என்றும் கண்ணாள் என்றும் செயல்நிலையில் பார்த்தல், நோக்குதல், கண்ணோடல், வியத்தல், வருந்தல் எனறும் பலவும் அமைத்து நம் கண்களை ஆச்சரியத்தில் விரிவடையச் செய்துள்ளார் வள்ளுவர். சங்க இலக்கிய அகக் காட்சிகளை நம் கண்முன் நிறுத்தி அழகிய படிமங்களாகக் கண்குறித்த செய்திகளை அமைத்துள்ளார் என்றால் அது மிகையாகாது. கண்ணின் அகம் புறம் சார்ந்த செயல்களை 46 இடங்களில் அமைக்கிறார்.

நோக்கினாள், நோக்கு, நோக்குதல், மடநோக்கு, நோக்கி, நோக்காமை, சிறக்கணிப்பு, நோக்க, நோக்கொக்கு, காணும், அழுதாள், கலங்கினாள், நோக்கினும், நோக்கினீர் என 20 சொற்களை ஆங்காங்கே 34 இடங்களில் பயன்படுத்தியுள்ளார். கண்களே அதிகாரம் செய்யும் அதிகாரம் கண் விதுப்பு அழிதல் ஆகும். 118 வது அதிகாரத்தில் எட்டுக் குறட்பாக்களில் கண்களினால் தமக்கு ஏற்பட்ட அவலத்தைச் சொல்லித் தலைவி அழுவாள்.

புணர்ச்சி மகிழ்தல் (111), பசப்பு உறு பருவரல் (119), தனிப்படர் மிகுதி (120), பொழுது கண்டு இரங்கல் (123), நெஞ்சோடு புலத்தல் (130), ஊடல் உவகை (133) ஆகிய ஆறு அதிகாரங்களில் கண் பற்றிய செய்தியோ குறிப்போ இடம் பெறாதன வியப்பு.

12. திருவள்ளுவரின் கல்விக்கொள்கைகள்



ம. செல்வராசு
எம்.ஏ.,எம்.பில்.,பி.எட்.,
தமிழ்த்துறை

படைப்பாளர்கள் அனைவரும் தம் காலத்தில் நாடும் மக்களும் எப்படி வாழ வேண்டும் என்ற தங்கள் எண்ணங்களை அவர்கள் படைத்த இலக்கியங்களில் வெளிக் காட்டியுள்ளனர். அவர்தம் இலக்கியங்களை நாம் படிக்கும்போது இவற்றைத் தெரிந்துகொள்ள முடிகின்றன.

பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் தலைச் சிறந்த நூல் திருக்குறள். இது மனித வாழ்க்கைக்குத் தேவையான அறக் கருத்துகளைக் கூறுகிறது. அவ்வறத்தின் வழி நிற்றலுக்குக் காரணமாகக் கல்வியைப் பற்றியும், கல்வி கற்காவிடில் ஒருவன் பெறும் துன்பங்கள், இழிவுகள் பற்றியும் எடுத்துக் கூறுகிறது. அய்யன் திருவள்ளுவர் ஒரு தெளிவான கல்விக் கொள்கையை வகுத்து அதன்படி மக்கள் எவ்வாறு கல்வி கற்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்.

உலகில் ஒருவன் சிறப்பாக வாழ்வதற்குச் செல்வத்தைத் தேட வேண்டும். அறத்தோடு அவன் தேடிய செல்வத்தை நன்முறையில் செலவளித்துப் புகழ் தேட வேண்டும். இவை அனைத்திற்கும் அடிப்படை கல்வி அறிவே என்று கூற வந்த திருவள்ளுவர் உலக உயிர்களுக்குக் கண்கள் எப்படி முக்கியமோ அது போன்றது எண்ணும் எழுத்தும் என்று கூறுகிறார்.

எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு.

குறள் – 392

என் என்பது கனிதம், எழுத்தென்பது அதனோடு ஒற்றுமையுடைய சொல். இவ்விரு திறமும் அறமுதற் பொருட்களைக் காண்பதற்குக் கருவியாகலின் கண் எனப்பட்டன எனப் பரிமேலழகர் தம் உரையில் கூறியுள்ளார்.

மனிதன் அறத்திலிருந்து பிறழாமல் வாழ வேண்டும். வாழ்க்கைக்குத் தேவையானவைகளையும் கற்றுக் கொள்ளவேண்டும் என நினைத்த திருவள்ளுவர் எண்ணையும் எழுத்தையும் உயிர்களின் கண்களுக்கு ஒப்பாகக் கூறியுள்ளார்.

நற் பண்புகளுக் குரிய நூல்களை நாளும் கற்க வேண்டும். அப்போது தான் அறிவும் அறமும் வளரும் என நினைத்துத் திருவள்ளுவர் கீழ் வரும் குறளில் அக்கருத்தை விளக்கியுள்ளார்.

தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்கு
கற்றனைத்து ஊறும் அறிவு.

குறள் – 396

மணற்கேணியில் தோண்டிய அளவிற்கு நீர் ஊறுவது போல மக்களின்

அறிவு, கல்வி கற்ற அளவிற்கேற்ப வளரும். சிறிது கற்ற துணையான் அமையாது மேன் மேற் கற்றல் வேண்டும். குறைந்த அளவு கல்வி கற்றால் ஒருவனுடையை மனது பண்படாது. மனிதனைப் பண்படுத்தாத கல்வி பயனற்றது. நூல்களை மேலும் மேலும் கற்கும்போது தான் அறிவு வளர்ந்து மனது பண்படும். அதனால் திருவள்ளுவர் தொடர்ந்து கற்கவேண்டும் என்று வலியுறுத்துகிறார்.

செல்வத்தின் சிறப்பைப் பல இடங்களிலே கூறினாலும் எல்லாச் செல்வங்களையும் விடக் கல்விச் செல்வமே சிறந்தது என்பதைத்,

கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு
மாடல்ல மற்றை யவை. குறள் – 400

என்னும் குறள்வழி விளக்குகிறார்.

ஒருவனுக்கு அழிவில்லாத சீரிய செல்வமாவது கல்வி. கல்வி தவிர மற்ற பொருள்கள் செல்வம் அல்ல. அழிவின்மையாவது தாயத்தார், கள்வர், வலியர், அரசர் என்ற இவர்களால் கொள்ளப்படாமையும், வழிப்பட்டார்க்குக் கொடுத்துழிக் குறையாமையுமாம். சீர்மை : தக்கார் கண்ணே நிற்றல். மணி, பொன் முதலியவற்றிற்கு இவ்விரண்டும் இன்மையின் அவற்றை மாடல்ல என்றார் எனப் பரிமேலழகர் விளக்கம் கூறியுள்ளார். ஆகவே இவ்வுலகத்தில் கல்விச் செல்வமே மிக உயரிய செல்வம் ஆகும். இவ்வாறு கல்வியின் சிறப்பைக் கூறியவர் கல்லாமை என்ற அதிகாரத்தில் கல்லாதவரின் இழி நிலையையும் கூறியுள்ளார். கற்றவர்க்கும், கல்லாதவர்க்கும் உள்ள வேறுபாட்டைத் தெளிவாக விளக்குகிறார்.

கற்றவரின் முன்னிலையில் ஒன்றையும் சொல்லாமல் இருக்கும்போது

கல்லாதவர்கள் கூட நல்லவர்கள்தான் என்பதைக் கீழ் வரும் குறளில் கூறியுள்ளார்.

கல்லா தவரும் நனிநல்லார் கற்றார்முன்
சொல்லாது இருக்கப் பெறின்.

குறள் – 403

கற்றவர் முன்னிலையில் பேசுவதற்குக் கூட கல்லாதவர்கள் தகுதி அற்றவர்கள் எனக் கூறுகிறார் வள்ளுவர். கல்லாதவர்கள் உயிரோடு இருந்தாலும் உயிரற்றவர்களாகவே எண்ணப்படுவார்கள். இவர்கள் எதற்கும் பயன்படாத களர் நிலத்தைப் போன்றவர்கள் என்பதைக் கீழ் வரும் குறள் உணர்த்துகிறது.

உளர்என்னும் மாத்திரையர் அல்லால் பயவாக்
களர்அனையர் கல்லா தவர்.

குறள் – 406

கல்வி அறிவில்லாதவனுடைய அழகு மண்ணால் புனையப்பட்ட பாவை போன்றது; எதற்கும் பயனற்றது. கல்லாதவரிடம் சேர்ந்துள்ள செல்வமானது கற்றறிந்த நல்லவரிடம் உள்ள வறுமையை விட மிக்கதுன்பம் தருவதைப் போன்றது என்று கூறியுள்ளார்.

நல்லார்கண் பட்ட வறுமையின் இன்னாதே
கல்லார்கண் பட்ட திரு.

குறள் – 408

கற்றவரோடு கல்லாதவர்களும் சேர்ந்து வாழ்கின்றனர் என்பது மக்களோடு வாழும் விலங்குகளுக்கு உள்ள அவ்வளவு வேற்றுமை உடையது. மனிதன் தன் தேவைக்காகத் தன் வேலைகளைச் செய்வதற்காக விலங்குகளை (ஆடு,மாடு) எப்படிப் பக்கத்தில்

வைத்திருக்கிறானோ அது போலவே கல்லாதவர்களையும் கற்றவர்கள் வைத்திருக்கின்றனர். கல்லாதவர்களை ஐந்து அறிவு படைத்த விலங்குகள் என்று வன்மையாகக் கூறுகிறார்.

விலங்கொடு மக்கள் அனையர் இலங்குநூல்
கற்றாரோடு ஏனை யவர்.

குறள் – 40

இவ்வாறு கல்லாதவர்கள் எதற்கும் பயனற்றவர்கள் எல்லோராலும் இழிவாகப் பேசக் கூடியவர்கள். இவர்களை ஆறறிவு உள்ள மனிதன் என்று சொல்லுதல் இயலாது என்பதை மிகத்தெளிவாகக் கூறியுள்ளார்.

கல்லாதவரின் இழிநிலையை எடுத்துக் கூறிய அய்யன் திருவள்ளுவர் எப்படிக் கற்றல் வேண்டும் என்பதைப் பின் வரும் குறள்மூலம் விளக்கியுள்ளார்.

கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக. குறள் – 391

கற்க என்பதற்குப் பரிமேலழகர் கற்றற்குரிய நூல்களைக் கற்றல் எனவும், அவை அறநூலும், நீதி நூலும், யானை, குதிரை, தேர் படைக்கலம் என இவை பற்றிய நூல்கள் எனவும் விளக்கம் கூறுகிறார். ஆதலால் கற்றல் என்ற பெயரில் பயனற்ற நூல்களைக் கற்றல் என்பது கற்றல் ஆகாது. கசடற என்பதற்கு விபரீத ஐயங்களை நீக்கி மெய்ப்பொருளை நல்லோர் பலருடன் பலகாலும் பயிறல் எனப் பரிமேலழகர் விளக்கம் கூறுகிறார். விபரீத என்பதற்கு வாழ்க்கைக்குப் பொருந்தாத அல்லது நடைமுறைக்கு ஒவ்வாத கருத்துக்களைத் தவிர்த்து,

வேண்டிய கருத்துகளை மட்டும் கற்றல் வேண்டும் என்பதாகும். தாம் கற்றவற்றிலிருந்து தமக்கும் தம்மைச் சார்ந்த சமுதாயத்திற்கும் எவ்வித தீங்கும் வந்து விடாமல் அனைவருக்கும் இன்பம் பயக்க வேண்டும் என்பதை வள்ளுவர் கோடிட்டுக் காட்டுகிறார். நிற்க அதற்குத் தக என்பது கசடு நீக்கிக் கற்பதை விட கற்றவழி நிற்றல் சிறப்பு என்பதாகும். ஒருவன் கற்ற வழி நிற்காவிடில் கற்ற கல்வியால் ஒரு பயனும் இல்லை. அவனும் கற்றவருக்குரிய சிறப்பை இழந்து விடுகின்றான். அதனால் இச்செயல் மிகவும் சிறப்புக் குரியதாகிறது. மேற்கூறியவற்றை நன்கு கூர்ந்து நோக்கினால் வள்ளுவரின் கல்விக் கொள்கை தெளிவாகத் தெரியும். தாம் கற்ற நூற்பொருளைப் பிறர் உணருமாறு விரித்துரைக்க முடியாதவர் கொத்தாக மலர்ந்திருந்த போதிலும் மணம் கமழாத மலரைப் போன்றவர் என்பதைப் பின்வரும் குறளில் விளக்குகிறார்.

இணர்ஊழ்த்தும் நாறாமலர் அனையர் கற்றது
உணர விரித்துரை யா தார்.

குறள் – 650

ஒருவன் கற்ற கல்வி பலருக்குப் பயன்படவேண்டும். தாம்கற்றதை எடுத்துச் சொல்ல இயலாதவன் கற்ற கல்வியும் பயனற்றது என்பதைத் தெளிவுபடுத்துகிறார். நல்ல நூல்கள் கற்கும் தோறும் இன்பம் பயக்கக் கூடியது. நல்ல நூல்களை நாம் படிக்கும் போது மட்டுமன்று நம் வாழ்க்கை முழுவதிற்கும் இனிமையும் இன்பமும் தரும் என்பதைக் கீழ்க்கண்ட குறள் விளக்குகிறது.

நவில்தோறும் நூல்நயம் போலும் பயில்தொறும்
பண்புடை யாளர் தொடர்பு. குறள் – 783

நாம் கற்றால் மட்டும் போதாது. நூல்களில் சொல்லப்பட்ட கருத்துக்கள் எந்தெந்த முறையில் பயன் தரக்கூடியது என்பதை நன்கு ஆராய்ந்து தெளிந்து பின் அக்கருத்துக்கள் வழி நடக்க வேண்டும் என்பதை நட்பு ஆராய்தல் என்ற அதிகாரத்தில் கூறியுள்ளார். இன்றைய ஆராய்ச்சிக் கல்விக்கும் இக்குறளே வித்திடுகிறது.

ஆய்ந்துஆய்ந்து கொள்ளாதான் கேண்மை கடைமுறை
தான்சாம் துயரம் தரும்.

குறள் – 792

நாம் ஒவ்வொரு நாளும் நூல்களைக் கற்கும் போது இதற்கு முன்னர் எவ்வளவு அறியாமையில் இருந்தோம் என்ற உண்மை புலப்படுகிறது. தொடர்ந்து நாம் படிக்கும்போது பல கருத்துக்கள், பல விளக்கங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. இதற்கு முன்னர் அவற்றைத் தெரியாமல் இருந்திருக்கிறோம் என்ற உண்மை புலப்படுகிறது.

ஒருவனை ஆராயாமல் தெளிவடைந்தாலும் ஆராய்ந்து தெளிந்த ஒருவனிடம் ஐயப்படுதலும் ஆகிய இவை நீங்காத துன்பத்தைக் கொடுக்கும்.

தேரான் தெளிவும் தெளிந்தான்கண் ஐயுறவும்
தீரா இடும்பை தரும்.

குறள் – 510

திருவள்ளுவர் நட்புக்காக மட்டும் இக்கருத்தைச் சொல்லவில்லை. கல்விக்கும் இஃது ஏற்புடையதே. எந்த ஒரு நூலைக் கற்றாலும் நன்கு

கற்றுக்கொள்ள வேண்டும். அவ்வாறு கற்றபின் அந்நூலில் எவ்வித சந்தேகங்களும் தோன்றுதல் கூடாது. அதாவது கற்றுத் தெளிதல் வேண்டும் என்று கற்றல் முறையை வலியுறுத்துகிறார்.

மேற்கூறிய கருத்துக்களை நன்கு ஆராய்ந்து நோக்கும் போது அய்யன் திருவள்ளுவரின் கல்விக் கொள்கை நமக்குத் தெளிவாகத் தெரிகிறது. திருவள்ளுவர் கல்விக் கோட்பாடுகள் பற்றிய ஒன்பது குறட்பாக்களும் கல்வியின் தேவை, கற்கும் முறை, கற்கும் முறை கற்கும் நூல்கள், பயன்பாடு குறித்தே எழுந்துள.

இதுவே மனித வாழ்க்கைக்கேற்ற உண்மையான கல்விக் கொள்கையாகும். வள்ளுவருக்குப் பின் வந்த புலவர்கள் கல்வியின் அவசியத்தைக் கூறியுள்ளனர். அய்யன் திருவள்ளுவரைப் போன்று இப்படித்தான் கற்க வேண்டும் என்றும், இன்ன நூல்களைத் தான் கற்க வேண்டும் என்றும் வரைமுறைப் படுத்தவில்லை. கற்கும் கல்வியானது கற்பார்க்கும் அவரது வாழ்க்கைக்கும் பயனுள்ளதாய் அமைதல் வேண்டும். அவ்வாறு அமையின் சமுதாயமும் நாடும் நலம் பெறும், வளம் பெறும் என்பதில் ஐயமில்லை.

முத்து விழாக் காணும் சன்மார்க்க சபை
(வரலாறும் வளர்ச்சியும்)

முனைவர் **ஜே. ரோசுலெட்**

சபைத் தோற்றம்

கொடிவருத்தங் கண்டு கொடித்தேரை நிறுத்தி வழிநடந்து சென்ற வள்ளல் பாரியின் பறம்புமலைச் சாரல் ஊர்களுள் ஒன்று **மேலைச்சிவபுரி.** இவ்வூரின் புகழ் எண்டிசையும் பரவக் காரணமாக அமைந்தது எழிலார்ந்து திகழும் சன்மார்க்க சபையாகும். ஈண்டு நின்றோருக்கும் சென்று நின்றோர்க்கும் தோன்றும் பறம்பு மலையனைய இச்சிற்றூரின் சன்மார்க்க சபை இன்று உலகெங்கும் ஓங்கு புகழ் பரப்பி நிற்கிறது. இச்சபை புதுக்கோட்டை மாவட்டத்தின் கடைக் கோடியில் உள்ளது. புதுக்கோட்டைக்கும் மதுரைக்கும் நடு நாயகமாகத் திகழும் இச்சிற்றூர் சிறு சுடர்ப்பேரொளி வீசுவதொப்ப உலகிற்கு அறிவொளி வீசி மெய்ஞ்ஞான வழி காட்டுகிறது எனில் வியப்பில்லை. தண்டமிழ் நாட்டில் புதுக்கோட்டை மாவட்டம் மேலைச்சிவபுரியில் இச்சபை சௌமிய ஆண்டு சித்திரைத் திங்கள் 31 ஆம் நாள் (13 - 5 - 1909) தோற்றம் பெற்றது.

சபையைத் தோற்றியோர் :

சன்மார்க்க சபையைத் தொண்ணூறு ஆண்டுகளுக்கு முன் தோற்றியவர் பழம் பெரும் குலவிளக்காம் மேலைச்சிவபுரி **வ.பழ.சா.** தமிழ்க்குடியினர். அவர்களுள் எளிமையும் இனிமையும் முறை செய்யும் திறமையும் புலவர் போற்றும் பாங்கும் தமிழ்ப் பயிர் வளர்க்கும் முனைப்பும் கொண்டவர் உயர்திரு **வ.பழ.சா. பழநியப்பர்.** சான்றாண்மைக்கு ஆழியாக விளங்கும் அவர் ஒழுக்கம் ஓம்பும் உயர் பண்பாளர். சால்பென்னும் திண்மை உடைய அவரின் இளவல் **அண்ணாமலையாரும்,** தமையன் குறிப்பறிந்து ஒழுகும்

பெற்றியர். அவர்,

அன்புடைமை ஆன்ற குடிப்பிறத்தல் இவ்விரண்டும்
பண்புடைமை என்னும் வழக்கு.

என்னும் குறளுக்கு இலக்கணமாக விளங்கியவர். நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லோருக்கும் பெய்யும் மழை என்னுமாப்போல நற்பண்பும், அறிவுத் திருவும் ஆளுமையும் கொண்ட இவ்விருவரும் அறிவுப் பயிர் வளர்க்கும் சன்மார்க்க சபையின் கால் கோளாவர். **பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரும்**, சோழவந்தான் **அரசஞ் சண்முகனாரும்** சபைத் தோற்றத்திற்குத் தூண்டுகோல்களாய் இருந்தனர். செம்மல். **வ.சுப. மாணிக்கமும்** முனைவர் **தமிழண்ணலும்** சபை வளர்ச்சிக்கு உறுதுணையாய் நின்று உயர்ந்தோர் ஆவர்.

சபையின் குறிக்கோள் :

அறக் குலத்துதித்த பழநியப்பரும், **அண்ணாமலையாரும்** இச்சபையை உயிரினும் மேலாக மதித்தனர்; வளர்த்தனர்; போற்றினர். சபைகாக்கும் பெற்றியில் அவர்கள் சில குறிக்கோள்களை முன்னிறுத்தினர்.

சபையும் புலவர்களும் :

தமிழ் கூறும் நல்லுலகிலுள்ள பெரும் அறிஞர்களனைவரும் நம் சபையில் காலடி பதித்தவர்களே. **அவர்கள் :**

1. இலக்கண இலக்கியப் புலமை வாய்ந்த சோழவந்தான்
   அரசஞ் சண்முகனார்
2. நல்லிசைப்புலவர்
   மு.ரா. கந்தசாமிக் கவிராயர்.
3. நெய்யாத தொன்னூல்கள் நிலைக்கவைத்த நீங்காத புகழ் மணக்கும் டாக்டர்
   உ.வே. சாமிநாத ஐயர்
4. பா யாப்பில் நனி சிறந்த
   ரா. இராகவையங்கார்

5. கா.சு. பிள்ளை
6. உமாமகேசுவரம் பிள்ளை
7. தமிழ்த்தென்றல் திரு.வி.க.
8. யாழ் நல்லார் விபுலானந்த அடிகள்
9. நாவலர்
   சோமசுந்தரபாரதியார்
10. உரைவேந்தர்
    ந.மு. வேங்கடசாமி நாட்டார்
11. சொல்லின் செல்வர்
    ரா.பி. சேதுப்பிள்ளை
12. ஈசான சிவாச்சாரியார்
13. மொழி வல்லார்
    தெ.பொ. மீனாட்சி சுந்தரனார்
14. ஔவை சு. துரைசாமிப்பிள்ளை
15. தமிழ்க்கடல்
    ராய. சொக்கலிங்கம்
16. டாக்டர் மு. வரதராசனார்.
17. நெ.து. சுந்தரவடிவேலு.

அனைவரும் இச்சபைக்கு வருகை தந்து கேள்விச் செல்வத்தை வழங்கியவர்கள். இச்சபைக்கு வராத பெரும் புலவர்கள் எவரும் இல்லை என்றே கூறலாம்.

பட்டம் வழங்கல் :

தெய்வத் தமிழுக்கு மெய்மைப் பணி ஆற்றிய மேன்மைப் புலவர்க்குப் பட்டம் வழங்கிச் சிறப்பிப்பதைச் சபை தனது குறிக்கோள்களில் ஒன்றாகக் கொண்டது. இரா. இராகவையங்கார் அவர்கட்கு மகா வித்துவான் என்ற பட்டமும் மு. கதிரேசஞ் செட்டியார் அவர்கட்குப் பண்டிதமணி என்ற பட்டமும், 45 ஆண்டுகட்கு முன்பே டாக்டர் உ.வே. சாமிநாத ஐயர் அவர்கள்

தலைமையில் வழங்கி இச்சபை பெருமைப் படுத்தியது.

இம் மரபு பிறழாமல் சபையின் பொன் விழாவில் டாக்டர் ரா.பி. சேதுபிள்ளை அவர்களுக்குச் **செந்தமிழ்மணி** என்ற பட்டமும் டாக்டர் தெ.பொ. மீனாட்சி சுந்தரனார் அவர்களுக்குப் **பெருந்தமிழ்மணி** எனும் பட்டமும் திரு. லெ. ப. கரு. ராமனாதன் செட்டியார் அவர்களுக்குப் **பண்டிதமணி** எனும் பட்டமும் திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்களுக்கு **முத்தமிழ்மணி** எனும் பட்டமும் வைரவிழாவில் டாக்டர் வ.சுப. மாணிக்கனாருக்குச் **செம்மல்** என்ற பட்டமும் வழங்கிச் சிறப்பித்தது. முத்துவிழாவில் முனைவர் சுப. அண்ணாமலை அவர்களுக்குச் செம்மல் என்ற பட்டமும் முனைவர் ச. மெய்யப்பன் அவர்களுக்குச் **செந்தமிழ்மணி** எனும் பட்டமும் வழங்கிச் சிறப்பித்தது. பாராட்டும் பட்டமும் மனிதர்களை நெறிப் படுத்துவன. இதனைத் தொல்காப்பியரும் ''மாராயம் பெற்ற நெடுமொழி'' எனக் குறிப்பர். இச்சபை தனது 15 வது ஆண்டிலேயே பட்டம் வழங்கும் நிகழ்ச்சியினை அமைத்திருப்பது எண்ணி மகிழத்தக்கது.

கல்விப்பணி :

சபையின் கல்விப் பணிக்குக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியும், தொடக்கப் பள்ளியும், உயர்நிலைப் பள்ளியும் மழலையர் பள்ளியும் சான்றாகும். கல்விப் பணியில் சபையின் இதயம் போன்ற உறுப்புக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரியே. தமிழ்நாட்டில் தோற்றம் பெற்ற 14 தமிக் கல்லூரிகளில் இரண்டாவதாகத் தோன்றியது எனும் பெருமைக்குரியது இக்கல்லூரி ஆகும்.

தொன்மையும் பெருமையும் மிக்க சன்மார்க்க சபை 1909 இல் தானே ஒரு பாடத்திட்டத்தை வகுத்தது. அத்திட்டத்தின் வழி சிற்றிலக்கண இலக்கியங்களை ஆழமாகவும் அகலமாகவும் மாணவருக்குப் பயிற்றுவித்தது. கல்வி பயிலும் மாண்வர்களுக்கு எந்த வித இடையூறும் வருதல் கூடாது எனும் நல்லெண்ணத்தில் ஏழாவது ஆண்டுமுதல் மாணவர்களுக்குச் சபை உதவித்தொகை வழங்கியது. தொலைதூர மாணவர்கள் தங்கிப் பயில இட வசதி

செய்து தந்தது. மாணவர்களுக்கு இலவசமாகவே கல்வி தரப்பட்டது. மாணவர்களுக்கு வேண்டிய வசதியினை 1916 ஆம் ஆண்டு தொடங்கிச் செய்து வருகிறது. என எண்ணுந் தோறும் நெஞ்சம் இனிக்கிறது.

1918 ஆம் ஆண்டு முதல் காலத்திற்கேற்ற கல்வி தரும் நோக்கோடு சபை மதுரைத் தமிழ்ச் சங்கத்தோடு தொடர்பு கொண்டது. அதன் பின்னர்ப் பிரவேச பால பண்டிதத் தேர்வுகளுக்கு மாணவர்களைப் பயிற்றுவித்து அனுப்பியது.

தேனினும் இனிய தமிழோடு பிற நாட்டுக் கலைச் செல்வங்களையும் மொழி பெயர்த்துத் தமிழுலகிற்குத் தருதல் வேண்டும் என்ற நல்ல எண்ணத்துடன் சிறிதளவு வடமொழியும் ஆங்கிலமும் இணைத்து மாணவர்களுக்குக் கற்பித்தது. 1938 ஆம் ஆண்டு சபை கல்விப் பணியில் ஒரு பெரிய சாதனையைக் கண்டது. அச்சாதனையே மதுரைத் தமிழ்ச்சங்கத்தோடு இணைந்து இருந்த கல்லூரி சென்னைப் பல்கலைக் கழகத்தின் இணைவு பெற்றதாகும். அதன் பின்னர்ப் பால பண்டிதக் கல்வி வித்துவான் முன்னிலை முடிநிலை என உயர்வு பெற்றது. கல்வி தொடர முடியா மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கி ஏழை மக்களின் அறிவுக் கண்ணைத் திறந்தது. இன்றும் திறந்து வருகிறது சபை எனின் மிகையாகாது. அரசின் உதவித் தொகையைப் பெறும் மரபுப்படி மாணாக்கர் பலரும் பயன் அடைகின்றனர்.

இதுகாறும் 3000 மாணவர்கட்கு மேற்பட்டவர் சபையில் பயின்று பட்டம் பெற்றுள்ளனர். வளர் தமிழை நாற்றிசையும் சென்று அவர்கள் நாளும் வளர்த்து வருகின்றனர்.

சன்மார்க்க சபையில் கல்வி பெறும் மாணவர்கள் பெரும்பாலும் நூற்றுக்கு நூறு வெற்றி பெற்றமை கல்லூரியின் செயல் திறத்திற்குக் காட்டாகும்.

1948-இல் இக்கல்லூரி மாணவர் நல்லப்பரெட்டியார் பல்கலைக்கழகத் தேர்வில் ஐந்தாம் ஜியார்ஜ் (ரூ. 1000) நினைவுப் பரிசினைப் பெற்றார். 1969 - ஆம் ஆண்டு பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் மாநில முதல் மாணவராக கே. வேங்கடசாமி

தேர்ச்சி பெற்று ஐந்தாம் ஜியார்ஜ் மன்னனின் நினைவுப் பரிசு ரூபாய் ஆயிரம் பெற்றார்.

கல்வி வளர் நிலைகள் :

பால பண்டித கல்வியிலிருந்து வித்துவான், புலவர் என்ற நிலைக்கு வளர்நிலை அடைந்த கல்லூரி 1974 ஆம் ஆண்டு பி.லிட். பட்டப்படிப்பைத் தொடங்கியது. தொடர்ந்து சபையால் வளரும் கல்லூரியில், 1987 ஆம் ஆண்டில் முதுகலைப் பட்டப்படிப்பும் 1991 ஆம் ஆண்டில் எம் ஃபில். ஆய்வுப் படிப்பும் உருவாகின. தமிழ்க் கல்லூரியை உருவாக்கிய சபையானது அக்கல்லூரியை 1993 ஆம் ஆண்டு மாலை நேர அறிவியல் கல்லூரியாகவும் விரிவடையச் செய்தது. மாலை நேரக் கல்லூரியில் பி.எஸ்ஸி கணிதம், பி.காம், பி.பி. எம், பி.எஸ்ஸி கணினி வகுப்புகள் தொடங்கப்பட்டுச் சிறப்பாக நடந்து வருகின்றன.

மாணவர்களின் நன்மை கருதிக் கல்லூரியில் எம்.ஏ. மாணவருக்குப் பண்டிதமணி ஆய்வரங்கமும் எம்ஃபில் மாணவருக்கு வ.சுப. மாணிக்கனார் ஆய்வு அரங்கமும் தொடர்ந்து இயங்கி வருகின்றன. ஐந்தமிழ் ஆய்வாளர் மன்றம் மூன்றாம் கருத்தரங்கு 1997 ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் 28, 29, 30 ஆம் நாட்களில் சபையில் நடத்தப் பெற்றது சிறப்பிற்குரியது. கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் பன்னிரெண்டு பேராசிரியர்களும், கணேசர் செந்தமிழ் மாலை நேரக் கல்லூரியில் பதினேழு பேராசிரியர்களும், கணேசர் செந்தமிழ்க் கல்லூரியில் அலுவலர்களாக ஒன்பது பேர்களும் என முப்பதெட்டுப் பணியாளர்களைக் கொண்டு சீரும் சிறப்புமாக இயங்கி வருகிறது கணேசர் செந்தமிழ்க் கல்லூரி.

நூற்பணி :

தமிழோடு வடமொழியும் ஆங்கிலமும் பயிற்றுவித்த சபை வடமொழி நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்த்து வெளியிடும் பணியைத் தனது பதிமூன்றாவது ஆண்டில் தொடங்கியது. இன்று வளர்ந்து வரும் மொழி பெயர்ப்புத்

துறைக்கு முன்னோடியாகச் சபை ஒரு வடமொழி ஆசிரியரை அன்று நூற்பணிக்காக நியமித்தது நினைதற்குரியது. பண்டிதமணியின் மொழிப் புலமையால் மொழி பெயர்ப்புத் துறை அவரை ஈர்த்தது. இதனால் பல மொழிபெயர்ப்பு நூல்கள் உருவாகின. அவரின் அனைத்து நூல்களையும் சபை வெளியிட்டு உலகுக்குப் பரப்பியதை அறிக.

சபை வெளியிட்ட நூல்கள் :

1. சுலோசனை
2. உதயணசரிதம்
3. சுக்கிரநீதி
4. மண்ணியல் சிறுதேர்
5. உரை நடைக் கோவை I. சமயம்
   உரைநடைக் கோவை II. இலக்கியம்
6. மணிமலர்த்திரட்டு
7. திருச்சதகம்
8. நீத்தல் விண்ணப்பம்
9. திருவெம்பாவை
10. சபைக் கட்டுரைகள்
11. நாட்டுக்கோட்டை
    நரத்தார் சீர்திருத்தம்
12. பண்டித மணியின் நடை நயம்.
13. பண்டித மணியின் நாடகத்திறன்
14. ஊன்றுகோல்
15. பண்டிதமணி பிள்ளைத்தமிழ்
16. நாட்டுக்கோட்டை நகரத்தார் வரலாறு
17. இலக்கிய நயம்

18. பொருள்நூல்

19. பதிற்றுப்பத்து அந்தாதி.

போன்ற இவ்வரிய நூல்களைச் சபை வெளியிடும் உரிமையைப் பண்டிதமணியின் புதல்வர்கள் சபைக்கு முன்வந்து வழங்கியுள்ளனர். இன்று இந்நூல்கள் அனைத்தும் பல்கலைக் கழகப் பாடப் புத்தகமாகவும் ஆய்வாளர்களுக்கு ஆய்வு மூல நூலாகவும் விளங்குகின்றன.

நூல் நிலையப்பணி :

சபையில் இயங்கி வரும் நூல் நிலையம் பழமைக்குப் பழமையாகவும், புதுமைக்குப் புதுமையாகவும் பொலிவு பெறுகின்றது. ஒல்காப் பெரும்புகழ் தொல்காப்பியர் பெயரால் **தொல்காப்பியனார் புத்தக சாலை** என்னும் நூலகம் ஒன்று 1910 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. தமிழ், வடமொழி, ஆங்கிலம் முதலான மொழிகளில் சிறந்த நூல்கள் நூலகத்தில் உள்ளன. கிடைத்தற்கரிய பண்டைய நூல்களும் நாள் தோறும் புதிது புதிதாக வந்து கொண்டிருக்கும் ஆய்வு நூல்களும் மாணவருக்குத் தேவையான பாடநூல்களும், நாள், வார, மாத, பருவ, ஆண்டு இதழ்களும் இங்கு வந்த வண்ணம் உள்ளன. நூல்கள் அனைத்தும் வகை தொகைப்படுத்தி மாணவருக்குப் பயன்படும் வண்ணம் சீரிய நூலகர் ஒருவரைக் கொண்டு நூலகம் இயங்குகிறது. சபை மாணாக்கரல்லாது பிற அறிஞர்களும் இந்நூல் நிலையத்திற்கு வந்து கிடைத்தற்கரிய நூல்களைப் பெற்றுப் பயன் கொள்ளுகின்றனர்.

சமயப்பணி :

சைவமும் தமிழும் தழைத்தினிது ஓங்கச் செய்வது சபையின் குறிக்கோளாகும். சைவ சமயத்தை மேம்படுத்தச் சபையோர் பல அறிஞர்களை அழைத்துச் சமயச் சொற்பொழிவு நடத்தி மக்களிடையே சைவமும் தமிழும் தழைக்கச் செய்து வருகின்றனர். சமயக் குரவர்களான அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் எனும் நால்வருக்கும், காரைக்கால் அம்மையாருக்கும் ஆண்டுதோறும் குருபூசைகள் நிகழ்த்துகின்றனர். திரு. கும.

நடராசன் செட்டியார், திரு. ஏ.ராம.ஏ. இராமநாதன் செட்டியார், திரு. வ.பழ. சா. குடும்பத்தினர், திரு. நெ. நாகை குடும்பத்தார். நால்வருக்கும், சபையோர் காரைக்கால் அம்மையார்க்கும் குருபூசை நிகழ்த்தினர்.

தற்பொழுது அப்பருக்கு ப.சா. அழகப்பச் செட்டியாரும், சம்பந்தருக்கு பழ. சிதம்பரம் செட்டியாரும், சுந்தருக்கு ப.சா. சிங்காரம் செட்டியாரும் மாணிக்க வாசகருக்கு சி.த. இராமலிங்கம் செட்டியாரும் காரைக்கால் அம்மையாருக்கு சா. அண்ணாலைச் செட்டியாரும் குரு பூசை நிகழ்த்தி வருகின்றனர். குருபூசையின் போது அவ்வவ் நாயன்மார் புராணங்கள் படிக்கப்படுகின்றன. சிறார்களுக்குக் காலையும் மாலையும் தேவாரம், திருவாசகம் பண்ணோடு பயிற்றுவிக்கப்பட்டன.

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

எனும் தேவாரப் பாடலே கல்லூரி வழிபாட்டுப் பாடலாகப் பாடப்படுகிறது என்பது குறிப்பிடத் தகுந்தது.

சமய விழாக்களில் விபூதி மான்மியம், சைவ் சமய மகிமை, சிவ பரதத்துவம், பஞ்சாட்சரம், நித்தியப் பொருட்கள், பதி புண்ணியம், சைவ சித்தாந்தம், அத்வைத உண்மை, சிவ வேட வணக்க முறை, சிவஞானம் என்ற பல சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்திச் சைவ சமயம் தழைக்க வழி வகுத்தனர் சபையார்.

வளர்ச்சிகள் :

1. வகுப்பறைகள் கட்டுவதற்குச் சபையின் கீழ்ப்புறத்தில் புதிதாக இடம் வாங்கப் பெற்றது.

2. சபையின் முன் மண்டபம் 25-11-1961 இல் புதிதாகக் கட்டி எழுப்பப் பெற்றது.

3. கணேசப் பெருமான் எழுந்தருளி இருக்கும் இடத்தின்

4. நாகப்பா மாணவர் இல்லம் எனும் பெயரிய மாணவர் இல்லம் திரு. ஆ. நாகப்பச் செட்டியார் அவர்களால் புதிதாகக் கட்டி வழங்கப் பெற்றது. வசதிகள் பெருகிய இவ்விடுதியில் 85 மாணவர்கள் தங்கிப் பயில்கின்றனர்.

5. முன்னாள் தலைவர் வ.பழ.சா. சாமிநாதன் செட்டியார் அவர்களின் மைந்தர்கள் சபையின் பின் புறத்தில் வகுப்பறைகள் கட்டுவதற்கு ரூ. 20,000/- நன்கொடை வழங்கினர். ரூ. 61,000/- செலவில் மிகச் செம்மையாக நான்கு வகுப்பறைகள் கட்டப் பெற்றன.

இக்கட்டிடச் செலவில் சபை ரூ. 41,000 ஏற்றது. சாமிநாத நிலையம் எனப் பெயரிய இக் கட்டிடத் திறப்பு விழா 6-9-1968 ஆம் ஆண்டு நிகழ்ந்தது.

மாலை நேர அறிவியல் வகுப்புகள் நடைபெற அதன் மேற் பகுதியில் ஆறு வகுப்பறைகள் கட்டப் பெற்றன.

பாரதிதாசன் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. வீர. முத்துக்கருப்பன் கல்லூரிக் கட்டிடத்தைத் திறந்து வைத்துச் சிறப்பித்தார். பின்னர் கல்லூரி அலுவலகத்திற்கு எனத் தனிப்பகுதி கட்டப் பெற்றது. தற்பொழுது கூடுதலாக மேலும் மூன்று வகுப்பறைகள் கொண்ட கட்டிடம் கட்டப் பெற்று இன்று திறப்பு விழா காண்கிது.

பொன்விழா, வைரவிழா, முத்துவிழாக்கள் என ஓங்கி விழா கண்டு வளர் சபை தானும் வளர்ந்து பல்லோரையும் வளர்விக்கின்றது.

''சன்மார்க்க சபை வாழ்க! தமிழணங்கு நீடூழி தழைத்து வாழ்க!' என்ற அரசஞ்சண்முகனாரின் பொய்யா மொழிக்கிணங்கச் சபை பல நூறு வளர்ச்சிகளைக் கண்டு வானளாவ உயர்ந்து நிற்கிறது எனில் மிகையாகாது.

நன்றி : முத்துவிழா மலர் - 20-8-1999